# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 15 புதன்கிழமை (01.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 005


# இன விகிதாசாரத்தை மாற்றும் வகையில் அரசு குடியேற்றத்தை மேற்கொள்ளாது

## கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்தும் பஸில் மகிழ்ச்சி

கொழும்பு, டிசெம்பர் 01

அரசாங்கம் எந்த ஓர் இனத்தின் விகிதாசாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் குடியேற்றம் எதனையும் மேற்கொள்ளாது. இடம் பெயர்ந்த தமிழர்களை மட்டும் தான் நாம் குடியமர்த்தி வருகின்றோம்.

அதேசமயம், நல்லெண்ண வெளிப்பாடாக, வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்களிப்பில் இருந்து விலகி இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம் மகிழ்ச்சி அளிக்கிறது.

- இவ்வாறு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மன்றத்தில் கூறினார். (24ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. வாவியில் நேற்று மாலையில் திடீரென நூற்றுக்கணக்கில் பாம்புகள்!

### சுனாமி தாக்கும் என மக்கள் மத்தியில் பரபரப்பு

மட்டக்களப்பு, டிசெ. 1

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தடி வாவியில் பெரும் எண்ணிக்கையான பாம்புகள் நேற்று மாலை காணப்பட்டன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நூற்றுக்கணக்கான பாம்புகள் வாவியில் மிதப்பதைப் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டுவந்து நேற்று பின்னிரவுவரை பார்வையிட்டனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## அபாயகரமான நிலைமையை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்

### ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 01

''ஜனநாயகம் தொடர்பான பாரிய அபாயகரமான நிலைமையை இந்நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ளனர்''

- இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான அனுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சரத்பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி, கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது நாட்டில் ஜனநாயகம் தொடர்பாக பாரிய அபாயகரமான நிலைமை தோன்றியுள்ளது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக எழுதும் உரிமையை அரசு பறித்துள்ளது. உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் மாணவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்கிறது. அதேபோன்று, சுதந்திரமாக அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் தாக்கப்படுகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சீர்கேடான ஆட்சி (24ஆம் பக்கம் பார்க்க)

## புகலிடம் கோரிவரும் அகதிகளுக்கான மத்திய நிலையம் ஒன்றை உருவாக்குக!

### கனடா-ஆஸியிடம் கனேடிய தமிழ்க் காங்கிரஸ் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ. 01

புகலிடம் கோரிவரும் அகதிகளுக்கான மத்திய நிலையம் ஒன்றை உருவாக்குமாறு கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிடம், கனேடிய தமிழ்க் காங்கிரஸின் பேச்சாளரான டேவிட் பூபாலபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியா தவிர்ந்த ஏதாவது ஒரு தென் கிழக்காசிய நாட்டில், இந்த மத்திய நிலையம் அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்கு முன்னரும், பின்னரும் ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகச் செல்கின்றனர். இவர்களில் அதிகமானோர் சர்வதேச ஆள்கடத்தல்காரர்களின் வலைகளில் சிக்கிக்கொள்கின்றனர்.

இதேவேளை, ஆஸ்திரேலியா - கிழக்கு தீமோரில் அந்நாட்டு அரசு உருவாக்குவதாகக் கூறியிருந்த அகதிகளுக்கான பிராந்திய மத்திய நிலையம், ஆள்கடத்தல்காரர்களின் செயற் (24ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் டிசெ.13இல் விவாதித்து நிறைவேற்றப்படும்

### கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, டிசெ. 1

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டத்தை எதிர்வரும் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றுவதென கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் சட்டமூலம் குறித்து ஆராயப்பட்டது.

13ஆம் திகதி சட்டமூலத்தை நிறைவேற்றி, உள்ளூராட்சிச் சபைகளின் எல்லை நிர்ணயங் (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகளே இங்கு இல்லை என இந்த அரசால் துணிந்து கூற முடியுமா?

### எதிர்க்கட்சித் தலைவர் சவால்

கொழும்பு, டிசெ. 01

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று இந்த அரசால் துணிச்சலாகக் கூறமுடியுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அரசுக்கு சவால் விட்டார்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளில் உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், கிராம நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், தொழில் நீதி (24ஆம் பக்கம் பார்க்க)


யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD

212, Palaly Road, Jaffna.

Tel : 212220033 / 212220044


## வரவு - செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும்

### சிவாஜிலிங்கம் கோரிக்கை

கொழும்பு, டிச.01

"வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நலனை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்தின் இறுதிக்கட்ட வாக்களிப்பில் எதிர்த்து வாக்களிக்க வேண்டும். இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் கூட்டமைப்பு பங்குபற்றாததும் ஆதரவளித்தது போலத்தான்"- என தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று தெரிவித்தார்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கருதி வரவு - செலவுத் (24ஆம் பக்கம் பார்க்க)


சுன்னாகம் சிங்கரில்

பண்டிகைக் கால குதூகலம்



- வானொலி பெட்டிகள் மற்றும் HIFI செற்களுக்கு 15000/= வரை
- தொலைகாட்சி பெட்டிகளுக்கு 12000/= வரை
- குளிர்சாதன பெட்டிகளுக்கு 6000/= வரை
- சலவை இயந்திரங்களுக்கு 4000/=

மற்றும் தெரிவு செய்யப்பட்ட சமையல் அறை உபகரணங்கள், தையல் இயந்திரங்களுக்கு விஷேட விலைக்கழிவுகள்.

இன்றே விரையுங்கள்!...

சுன்னாகம் சிங்கர் பிளஸ்

இல.136, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

தொ.பே: 0212240555


## உலக எயிட்ஸ் தினம் 2010

"HIV/AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும் மனித உரிமைகளை மதித்தலும்"

- எம்மை நேசிப்பவர்களுக்கு என்றும் விசுவாசமாயிருப்போம், எம்மை மட்டுமன்றி எமது அன்புக்குரியவர்களையும் எமது சமூகத்தையும் HIV/AIDS இலிருந்து பாதுகாப்பது எமது பொறுப்பாகும்.
- விரும்பியோ விரும்பாமலோ ஆபத்தான பாலியல் தொடர்பு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தால் உரிய மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்வோம்.
- HIV/AIDS பற்றி அனைவரையும் அறிவூட்டி அவர்களது பாதுகாப்புக்காக வலுவூட்டுவோம்.
- மேலதிக தகவல்களையும், சேவைகளையும் அறை இல 33, யாழ் போதனா வைத்தியசாலை அல்லது உங்கள் பகுதி வைத்தியசாலைகள் அல்லது சுகாதார உத்தியோகத்தர்களிடம் நம்பகத் தன்மையுடன் எவ்வித தயக்கமுமின்றிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"HIV/AIDS - எங்களது பாதுகாப்பு எமது கைகளிலேயே"

ஆக்கம் : சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் அனுசரணை: Unicef

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வருகையை எதிர்த்து லண்டனில் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம்

லண்டன், டிச.01

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பிரிட்டன் வருகையை எதிர்த்து லண்டன் கீத்றூ விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஆயிரத்துக்கும் அதிக மான தமிழர்கள் கூடி, தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முக மாக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ள ஜனாதிபதி மாணவர் சங்க அமர்வொன்றில் விசேட உரையாற்றவுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணிமுதல் லண்டன் கீத்றூ விமான நிலையத்துக்குள் வர ஆரம்பித்த தமிழ் மக்கள் 10:00 மணியளவில் உரத்த குரலில் தமது எதிர்ப்பை தெரிவித்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

எனினும் இது அனுமதியற்ற போராட்டம் என அந்நாட்டு பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். (த)



# ஜனாதிபதியின் யாழ். வருகைக்காக வீரசிங்கம் மண்டபம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

ஜனாதிபதி மஹிந்தவின் யாழ். வருகையை முன்னிட்டு 5 மில்லியன் ரூபா செலவில் வீரசிங்கம் மண்டபத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகளை ஒருங்கமைப்பதற்காக அமைக்கப்பட்ட 14 உப குழுக்களினதும் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விவரங்கள் வருமாறு:-

இந்த வருடம் தேசிய பாதுகாப்புத் தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட இருக்கின்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள உள்ளார்.

இதன்போது இயற்கை அனர்த்தத்தில் இருந்து மக்களை பாதுகாப்பது என்கின்ற தொனிப் பொருளில் 23 ஊர்திகளின் கண்காட்சி அணிவகுப்பும் இடம்பெற உள்ளது. இந்தக் கண்காட்சி அணிவகுப்பு யாழ். முற்றவெளியிலிருந்து ஆரம்பமாகி யாழ். நகரை சென்று மீண்டும் முற்றவெளியை வந் தடையும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-14)

# கைதடியில் 3 வர்த்தக நிலையங்களில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருட்டு

நாவற்குழி, டிசெ.1

கைதடிச் சந்தியில் அமைந்துள்ள வசந்தா மதுபானச் சாலையின் கூரைச் சீற்றை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் ஒரு லட்சத்தி 50 ஆயிரம் ரூபா பணத்தைச் திருடியதுடன் அங்குள்ள மதுபானங்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன் கூரைச் சீற்றுகள் மேலே இருந்து மதுபானத்தை அருந்தி விட்டு போத்தல்களை விட்டுச் சென்றுள்ளனர்.

அடுத்ததாக மேற்படி பகுதியிலுள்ள பலசரக்கு கடை ஒன்றினுள் உள்நுழைந்த திருடர்கள் 2 இலட்சத்தி 50 ஆயிரம் ரூபா பணத்தை திருடியதுடன் கைத்தொலைபேசி நிரப்பும் அட்டைகளையும் மற்றும் பால்மா வகைகள், சிக்ரெட் போன்றவற்றையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

மேலும் திலக்சன் ஹாட்வெயர் இரும்புக்கடை ஒன்றில் உள் நுழைந்த திருடர்கள் 16 ஆயிரத்து 800 ரூபா பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-121-288)

# தனியார் உயர் கல்வி நிறுவனங்களை கண்காணிப்பதற்கென விசேட குழு

கொழும்பு,டிசெ.01

தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்க ளின் செயற்பாடுகள் குறித்து ஆராயும் நடவடிக்கையில் விசேட குழுவொன்றை ஈடுபடுத்துவதற்கு உயர் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவினர் முன்னறிவித்தலின்றித் தனியார் பல் கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வார்கள் என அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன கூறியுள்ளார்.

இதன்போது குறிப்பிட்ட கல்வி நிறுவனங்கள் உரிய தரத்திலான சேவையை வழங்குகின்றனவா என்பது தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தர நிர்ணயங்களைப் பரிந்துரை செய்வதற்கான சபையொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (த)

# தாலிக் கொடி அறுத்த திருடர்களை மடக்கிப் பிடித்த இளைஞர்கள்

## நேற்று நண்பகல் சண்டிலிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.1

ஆலய வழிபாட்டுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்தக் கொண்டு தப்பியோட முயற்சித்த திருடர்களை அப்பகுதியில் நின்ற இளைஞர்கள் துரத்திச்சென்று மடக்கிப்பிடித்தனர் .இவர்கள் நையப் புடைக்கப்பட்ட பின்னர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சண்டிலிப்பாய் வடக்கில் உள்ளகுட்டிப்பிள்ளையார் கோயில் வீதியில் நேற்று செவ்வாய்க் கிழமை 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- குறித்த பெண்மணி குட்டிப்பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அந்த வீதியால் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் அந்தப் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியை அறுத்துக்கொண்டு தப்பியோட முற்பட்டனர்

உடனே அந்தப் பெண் கூக்குரலிட்டபோது அங்க நின்றிருந்த இளைஞர்கள் அந்தத் திருடர்களைத் துரத்திச்சென்று மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர்.

சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த 4 பொலிஸார் அந்த இரண்டு இளைஞர் களையும் கைது செய்தனர். (த-9-29)

# இலங்கையில் தேடப்பட்டவர் இந்தியாவில் வைத்துக் கைது!

கொழும்பு, டிசெ. 01

2000-2004ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்றது எனக் கூறப்படும் வற் மோசடி தொடர்பாக, இலங்கையில் தேடப்பட்டுவந்த முக்கிய சந்தேக நபர் ஒருவர், இந்தியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், பின்னர் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, எதிர்வரும் நாள்களில் இன்னும் பலர் அவ்வாறு கைது செய்யப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (12)

# பிரேஸிலில் இருந்து குறைந்த விலையில் சீனி

கொழும்பு, டிசெ.01

பிரேஸிலில் இருந்து சீனி இறக்குமதி செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தொடர்பில் தமது நேரடிக் கவனத்தைச் செலுத்தப் போவதாக அவர்குறிப்பட்டார்.

புதிய அமைச்சரவையில் இரண்டாவது தடவையாகவும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ; மக்களுக்கு சுமை ஏற்படாத வகையில் தேவையான சகல அத்தியாவசியப் பொருள்களையும் பண்டிகைக் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியில் அரசு தலையிட்டு நேரடிக் கொள்வனவை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இடைத்தரகர்களின் தலையீடின்றி பொருள்களை கொள்வனவு செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

# கொழும்பு இலங்கையின் தலைநகர் என்பதை அரசு மறந்து விட்டதா?

## கேள்வி எழுப்பினார் மனோகணேசன்

கொழும்பு,டிச.01

யாழ்ப்பாணத்திலே நடைபெறுவதாகக் கூறப்படும் அத்துமீறிய குடியேற்றங்களுடன் ஒப்பட்டுக் கொழும்பிலே தமிழ் பேசும் தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்வது தொடர்பிலே ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து கண்டனத்துக்குரியதாகும்.

கொழும்பு இலங்கையின் தேசிய அரசியல்-பொருளாதார தலைநகரம் என்பதை அரசு மறந்துவிட்டதா? என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டை இலங்கையின் தலைநகரமாக சொல்லப்பட்டாலும் நடைமுறையில் கொழும்பு மாநகரமே இலங்கையின் தலைநகரமாக செயற்படுகின்றது. தமிழர்களின் கொழும்பு மாநகர இருப்பு சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருக்கின்றது.

எனவே தமிழர்கள் கொழும்பிற்குப் புதிதாக வந்துவிட்டார்கள் என எவரும் கண்டுபிடித்து கூறமுடியாது. அத்துடன் இன்று கொழும்பு பொருளாதார தலைநகரமாகவும் இருக்கின்றது. இக்காரணத்தினாலேயே மலையகத்திலிருந்தும், வடகிழக்கிலிருந்தும் தமிழ் பேசும் மக்கள் கொழும்பிற்கு சமீப காலத்தில் பெருமளவில் குடிபெயர்ந்துள்ளார்கள். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அரச தொழில் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

அரச சார்பான காணி மற்றும் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் பொழுது தமிழ் பேசும் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றது. குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வர்த்தகம் செய்து வந்த தமிழர்களும் படிப்படியாக விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். எஞ்சியிருப்பவர்களும் பெரும் அச்சத் துடனே வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதுபோல் முஸ்லிம் மக்களும் தங்களது வர்த்தக நோக்கங்களுக்காக கொழும்பை நாடி வருகின்றார்கள். தமிழ் பேசும் மக்கள் எந்தவித அரச ஆதரவுமின்றிச் சொந்த முயற்சியால் தலைநகரத்திலே வாழ நினைப் [illegible] இன்றைய அரசாங்கத்திலே தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்சிகளுக்கு தலைவர்கள் இருக்கின்றார்கள்.

இதற்கு மேலதிகமாக சமீபத்திலே எதிரணியில் இருந்து அரசாங்கத்திற்கு தாவிய தமிழ், முஸ்லிம் எம்.பிக்களும் இருக்கின்றார்கள். அமைச்சு பதவிகளுக்காகவும், வரப்பிரசாதங்களுக் காகவும் அலைந்துதிரிகின்றவர்கள், நமது மக்கள் தொடர்பான அடிப்படை உண்மைகளை அரசிற்கு எடுத்துக்கூற வேண்டும்.

நாடாளுமன்றத்திலே உரையாற்றி நமது மக்கள் மத்தியிலே நம்பிக்கையை ஏற்படுத்திட வேண்டும். மேல்மாகாணத்தில் [illegible]கொடையில் கூட தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் வர்த்தகம் செய்ய முடியாது என்ற எழுதப்படாத விதி இன்று இருக்கின்றது.

இந்த உண்மைகளை உணராதவர்கள் சமீபகாலமாக கொழும்பிலே வாழும் தமிழர் களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக கருத்துகளை தெரிவித்து வருகிறார்கள். இந்த அடிப்படையிலேயே கொழும்பிலிருந்து சிறுபான்மை மக்களை அப்புறப்படுத்த எண்ணுகின்றார்கள்.

அரச தொழிலும் இல்லை, சொந்த முயற்சியால் வர்த்தகமும் செய்ய முடியாது என்ற நிலையில் தமிழ் பேசும் மக்கள் தங்களது வாழ்வாதாரங்களுக்காக என்னதான் செய்வது என்பதை அரசு அறிவிக்க வேண்டும் என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடர்ந்து வளர்ந்திருந்த பற்றைகளை ஊடறுத்து சொந்த வீடுகள், காணிகளைத் தேடிய மக்கள்

## அன்றைய நாள்களின் நினைவுகளையும் பகிர்ந்து கொண்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.01

வலி-வடக்குப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு நேற்று மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதனை அடுத்து அவர்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அனுமதி வழங்கப்பட்டதும் தமது காணிகளுக்கு விரைந்து சென்ற அப்பகுதி மக்கள் அடர்ந்து படர்ந்திருந்த பற்றைகளை துப்புரவு செய்யும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

முன்னதாகப் பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் 9 மணியளவில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் மிதிவெடி அபாய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவினரும், இராணுவ பொறியியல் பிரிவினரும் இணைந்து பொது மக்களுக்கான மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு விளக்கங்களை வழங்கினார்கள்.



இதனைத் தொடர்ந்து வலி-வடக்கு பிரதேசச் செயலர் எஸ். முரளிதரன் மீள்குடியமர்வு தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அவர் அங்கு பொதுமக்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்கள் வருமாறு:-

மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பொதுமக்கள் இன்றுமுதல் குடியேறலாம்.


இப்பகுதிகளுக்கு போக்குவரத்து செய்கின்ற மக்கள் அதாவது (ஜே-223)வித்தகபுரம் பிரிவைச் சேர்ந்தவர்கள் மயிலுகடை வீதியையும், சிராவளை வீதியையும், இளவாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆலடிச்சந்தி வேல்களஞ்சியம் உச்சலைப் பாதையையும், இளவாலை வடமேற்குப்பிரிவைச் சேர்ந்த மக்கள் சுந்தரலிங்கம் எம்.பியின் வீதியையும் பயன்படுத்துவதற்கு இராணுவம் அனுமதி வழங்கியிருக்கிறது.

அவரவர் தமது காணிகளைத் துப்புரவு செய்வதற்கு பரப்பொன்றிற்கு தலா ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மக்கள் பாவனைக்கென அறிவிக்கப்பட்ட வீதிகளை மறைத்துப் படர்ந்திருக்கின்ற பற்றைகளை 'புல்டோசர்' மூலம் அகற்றித் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்திய அரசின் நிதியுதவியுடன் வீடுகளை அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார் - என்றார்.





இதன் பின்னர் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் நேற்று மாலைவரை ஈடுபட்டனர்.

22 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சந்தோஷத்தில் அடர்ந்து - படர்ந்து ஓங்கி வளர்ந்த பற்றைகள் அங்கு காணப்பட்டாலும் அதற்குள் ஒருவாறு நுழைந்து உள்ளே சென்று தமது காணிகளைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆதங்கம் அந்த மக்களிடம் காணப்பட்டது.

இழந்த பொருளொன்று நீண்டகாலத்துக்குப் பின்னர் கிடைத்தது போன்ற சந்தோசம் அந்த மக்கள் முகத்தில் தெரிந்தது.

சுறுசுறுப்புடனும் ஆவலுடனும் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்த அந்த மக்கள் சிலருடன் மனம்விட்டுப் பேசினோம்.

அப்போது அப்பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய சி.நாகமுத்து என்பவர் தனது சந்தோசத்ததை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

''எனது45வயதில்அப்பகுதியை விட்டு வெளியேறினேன். இப்போது வந்து பார்க்கின்ற போது எமது காணிகள் எங்கே இருக்கின்றது? என்று அடையாளம் காணமுடியாத வகையில் பற்றைகள் வளர்ந்திருக்கிறன.''

''பற்றைகளை நாங்கள் வெகு விரைவில் அகற்றி இங்கு கொட்டில்களை அமைத்து எப்போது குடியேறுகின்றோமோ அன்றுதான் எமக்கு நிம்மதி.''

''எங்கள் வீடுகள் எல்லாம் சிதைந்து சின்னாபின்னமாகி இருக்கின்றன. அதனை அரசாங்கம் காலக்கிரமத்தில் புனரமைத்தும், வீடுகள் முற்றாக அழிந்தவர்களுக்கு வீடுகளை அமைத்தும் கொடுக்க வேண்டும்.''

''எமது கிராமங்களில் சன சமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பனவெல்லாம் முன்னர் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. அவற்றையெல்லாம் மீளவும் இயங்க வைத்து எமது கிராமத்துக்குப் புத்துயிர் கொடுப் போம்'' என்றார் அவர்.

அங்கு வந்திருந்த சிலர் தாம் முன்னரே ஓடிஆடித் திரிந்த நினைவுகளை தமது உறவுகளுடன் பகிர்ந்து கொண்டிருந்தனர். சிலர் தமது பழைய ஞாபகங்களை மீட்டிப் பார்ப்பதற்கு தாம் நடமாடிய வீதிகளை (ஒழுங்கைகளை) தேடிக்கொண்டிருந்தனர். ஆனால் அது அவர்களின் கண்களுக்கு தென்படவில்லை. ஏனெனில் அவைகள் பற்றைகள் சூழ்ந்து மறைந்து காணப்பட்டன.

விடுவிக்கப்பட்டுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் 1,746 குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. தற்பொழுது 970 குடும்பங்கள் மட்டுமே மீள்குடியமர்வுக்குப் பதிவு செய்துள்ளன. ஏனையவர்களும் அங்கு வந்து மீள்குடியமர் முன்வரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை இளவாலை வடக்கு (ஜே/222) கிராமசேவையாளர் பிரிவில் கீரிமலை - சேந்தான் குளம் வீதியின் வடக்குப் பகுதியில் குறிப்பிட்ட பகுதிக்கு பொதுமக்கள் செல்ல அனுமதி தற்காலிகமாக மறுக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அப்பகுதியிலும் மக்கள் குடியமர விரைவில் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் கரும்கம்பனைப் பகுதியில் பாதுகாப்பு அரண் இன்னும் அகற்றப்பட வில்லையெனவும் அங்கு மிதிவெடி அபாயக் குறியீடுகள் நாட்டப்பட்டுள்ளதாகவும்மக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (த-9)

# கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான ஒப்பந்தம்

## நோர்வேத் தூதுவர் கைச்சாத்து

கொழும்பு,டிச.01

கண்ணி வெடி அகற்றும் சுவிஸ் பவுண்டேசனுடனும் ஹலோ ரஸ்ட் அமைப்புடனும் இரண்டு ஒப்பந்தங்களை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரால்ஸ்ரற்ட் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தங்களின் கீழ் கண்ணிவெடி அகற்றும் சுவிஸ் பவுண்டேசனுக்கு 125 மில்லியன் ரூபாய்களும் ஹலோ ரஸ்ட் அமைப்பற்கு 112 மில்லியன் ரூபாய்களும் வழங்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையின் இலங்கை அரசின் கண்ணி வெடியகற்றும் நடவடிக்கைக்கு உதவுவதாக அமையும்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளில் இந்த நிறுவணங்களை இலங்கை அரசு ஈடுபடுத்தியுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கண்ணிவெடியகற்றும் பெண்களின் பங்களிப்பும் அதிகரிக்கப் படவுள்ளது. 2003இல் இருந்து நோர்வே அரசு தொடர்ச்சியாக இரண்டு இந்திய அரச சார்பற்ற நிறுவணங்களான சர்வாத்ரா ஹெறிசன் ஆகிய நிறுவணங்களுக்கும் மிலிந்த மொரகொடவின் மக்கள் சக்தி நிறுவனத்திற்கும் நிதியுதவி அளித்து வந்துள்ளது.

# டுபாய் நாட்டுக்குக் கடத்தப்படவிருந்த ரூ.27 மில்லியன் பெறுமதியான தங்கம்

கொழும்பு, டிசெ.1

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து டுபாய்க்கு கடத்தப்படவிருந்த 27 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கமும் சுமார் 30 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் அவற்றை கடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று விமான நிலையச் சுங்கப் பிரிவுப் பணிப்பாளரான பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரில் இருவர் குறித்த வெளிநாட்டவருக்கு மேற்படி தங்கத்தையும் வெளிநாட்டுப் பணத்தையும் கையளித்துவிட்டுத் திரும்புகையில் விமான நிலைய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அச்சந்தேகநபர்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலேயே சுங்கப்பிரிவு அதிகாரிகளினால் மேற்படி வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தங்கமும் பணமும் கைப்பற்றப்பட்டன எனப் பணிப்பாளர் மேலும் கூறினார். (த)

# 100 இலங்கை மாணவருக்கு இந்தியப் புலமைப் பரிசில்

கொழும்பு, டிசெ.01

நாடளாவிய ரீதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 இலங்கை மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி இந்திய தூதரகத்தால் மகாத்மா காந்தி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவினால் புலமை பரிசில் வழங்கப்படவுள்ள நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸாவும் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

2009ஆம் ஆண்டின் க.பொ.த(சா/த) பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்ட குறித்த மாணவர்களுக்கு மாதாந்தம் 1,500 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்படத்தக்கது.

# வடக்கின் துரித மீட்சித் திட்ட பணிமனை கிளி.செயலகத்தில்

வடக்கின்துரித மீட்சித்திட்டப் பணிமனை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த நடவடிக்கைகள் கடந்த வருடமே ஆரம் பிக்கப்பட்டுள்ளபோதும் இதற்கான பிரத்தியேகக் கட்டடம் ஒன்று தற்பொழுதுதான் அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் போது இந்தத் திட்டம் மிகவும் உதவியாக இருந்ததாகவும் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு தேவைகள் இருப்பதால் இதன் செயற்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் எனக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சேதமடைந்த அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வீதி அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு அபவிருத்திப் பணிகள் இந்தப் பணிமனையூடாக முன்னெடுக்கப்படவுள்ளன.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களையும் இளைஞர்களையும் வாழவைப்போம்.



சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு Gods own Children Foundation இலங்கை அரசின் அங்கீகாரத்துடன் வடமாகாணத்தில் ஆதரவற்ற, உதவியை எதிர்பார்க்கும், மாற்றுவலுவுள்ள, சிறார்களையும் 35வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கும் அவர்களின் வாழ்வாதாரத்துக்கான மேம்பாட்டிற்கும், கல்விக்குமான உதவிகளை ஏற்படுத்த வுள்ளது. குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட சிறார்களை எமது காப்பகம் உள்வாங்கி கல்வித் திறனை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர்களே! சமூகசேவையாளர்களே! உதவி தேவைப்படும் மாற்று வலுவுள்ளோர் உங்கள் குழந்தைகளாகவோ, நீங்கள் அறிந்தவர்களாகவோ இருந்தால் சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினமான டிசெம்பர் 3அன்று கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

**Gods own Children Foundation**

மாற்றுவலுவுள்ளோர் காப்பகம்,
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகில்,
அச்சுவேலி.

தொடர்புகளுக்கு: 077 3627055, 077 4083656 , 021 222 5796.


## மிருசுவில் நூலகம் இன்று மீளத் திறப்பு

சாவகச்சேரிப் பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகம் புனரமைக்கப்பட்டு இன்று முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்நிகழ்வு சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

2006 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இந்த நூலகம் கடந்த 4 வருடங்களாக வேறு இடங்களில் இயங்கி வந்தது.

அண்மையில் நூலகக் கட்டடம் படையினரால் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டதை அடுத்து திருத்தம் செய்யப்பட்டு மீளத் திறந்து வைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. (ஒ-131)


ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

மனதார வாழ்த்துகின்றோம்

இருமனம் ஒருமனதாய் திருமண பந்தத்தில் இணையும் வடிவேலு - ராசம்மா தம்பதியரின் செல்வப்புதல்வன் **கஜேந்திரன்** அவர்களும் மாரிமுத்து - சாவித்திரி தம்பதியரின் ஏக புத்திரி **சுபாகரி** அவர்களும் இன்று 01.12.2010 புதன்கிழமை சந்நிதி ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யவிருப்பதால் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்;
காளியம்மன் கலையக உரிமையாளர்,
க.குகதாசன், மனைவி,
ஊழியர்கள் மற்றும்
உறவினர்கள்.
காளிகோயிலடி,
உடுவில்.
021 2241071



புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Microsoft Office 2007
- Diploma in PC Application
- Adv. Dip. in Hardware & Networking
- Diploma in Computerized Accounting
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Pre-Press Desktop Publishing
- Tally AutoCAD C++

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சி

veta® Experts in English Training
An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
1/12/2010 7.30 a.m. & 9.30 a.m.
4/12/2010 8.30 a.m. & 3.30 p.m.

சிறார்களுக்கான கணனி மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

முழுமையானதும் தரமானதுமான கணனி கல்விக்கு.

**DMI COMPUTER EDUCATION**

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (நந்தி மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470



RSC RAAM SUPER CITY

அன்றாடத் தேவைக்கான அனைத்துப்பொருள்களையும்
இலகுவாகக் கொள்வனவு செய்திட நாடுங்கள்
யாழ்.நகரின் மத்தியில்

# ராம் சுப்பர் சிற்றி

இரண்டாம் ஆண்டில் காலடி வைப்பதை முன்னிட்டு ஒருவார காலத்திற்கு 4000/- க்கு மேற்பட்ட தொகைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலிகளுக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் காத்திருக்கின்றன.

1. CD Player 2. Phone 3. Iron Box
4. Watch 5. 10 ஆறுதல் பரிசுகள்

இந்த அரிய வாய்ப்பு 01.12.2010 தொடக்கம் 08.12.2010 வரையாகும்.
முந்துங்கள் உங்கள் பரிசுக்கு

இவ்வார காலப்பகுதியில் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் 5 வீத விலைக்கழிவு



- ★ சிறந்த பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- ★ ஐஸ்கிறீம் வகைகள்
- ★ குளிர்பானங்கள்
- ★ பழரசங்கள்
- ★ பழவகைகள்
- ★ இறைச்சி வகைகள்
- ★ சொசேச் வகைகள் Keells
- ★ பால்மா வகைகள்
- ★ பிளாஸ்ரிக் கதிரை வகைகள் Nilkamal
- ★ போன் வகைகள் E-Tel
- ★ தரமான சொக்லட் உட்பட

உங்கள் தினசரி தேவைகளுக்கு விஜயம் செய்து பாருங்கள்

**Raam Super City**

306, Hospital Road, Jaffna. T.P: 021 222 1252, 021 222 1262


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கூட்டமைப்பின் அணுகுமுறை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், அப்பகுதிகளுக்கான புனர்நிர்மாணம் குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை -

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளான மீள்குடியேற்றம், அரசியல் தீர்வுபோன்ற அதிமுக்கிய விடயங்கள் சம்பந்தமாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச வேண்டும் என்பதனை ஆரம்பகாலம் தொடக்கம் எமது கட்சி வலியுறுத்தி வந்துள்ளது-

மீள்குடியேற்றம், அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் தொடர்பாக எமது கட்சியுடன் ஆக்க பூர்வமான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற எமது எண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, வரவு - செலவுத் திட்டதின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பதில் இருந்து விலகி இருப்பது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது-

இவ்வாறு தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்று, நாடாளுமன்றத்தில் அவர்களை அதிக எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தியோக பூர்மாக வெளியிட்ட நீண்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அதன் பிரகாரம் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகி இருந்த போதும் கூட்டமைப்பு எம்.பிக்கள் அன்றையதினம் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தச் செயற்பாடு தமிழ் மக்கள் - தமிழ் வாக்காளர்கள்- மத்தியில் ஒரு கலப்பு பிரதிபலிப்பையும், கலங்கல் பிரதிபலிப்பையும் (Reaction) ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முடிவும் செயலும் அரசுடனான இணக்க அரசியலுக்கான அத்திவாரமென்று ஒரு சாராரும் -

இவ்வாறு செய்வது அரசாங்கத்தின் உள்ளார்த்தமான நிலையை அறிவதற்கு ஓர் அமிலச் சோதனையாக அமையும் என்று மற்றும் சில சாராரும் - கருதுகின்றனர்.

தந்தை செல்வநாயகம் காலம் தொடக்கம், தமிழ் அரசியல் தலைவர்களின் இணக்க அரசியல், அதனைப்பற்றிக்கொண்ட தலைவர்களுக்கு சிலசில சலுகைகளைக் கிள்ளிப்போட்டதே அன்றி, தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் எதனையும் வென்றெடுக்க வழிசெய்யவில்லை என்ற அனுபவ ரீதியான படிப்பினை நடைமுறை யதார்த்தம்.

இந்த அரசியல் தோற்றுப்போனதா லேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத் தில் ஈடுபடுவதற்கு உந்தப்பட்டார்கள் என்ற யதார்த் தத்தை, ஏன் உண்மையை மறந்துவிடலாகாது. சிங்களப் பிரதேசங்களில் நிலவிய வர்க்கரீதியான ஒடுக்குமுறை அங்கு ஆயுதப்போராட்டம் தலை யெடுத்தமைக்கு காரணம் என்பதனையும் இதற்குச் சமாந்தரமாகக் கூறலாம்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் நியாயமான ரீதியில் அணுகி, அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் சுத்தமான கரிசனையை இப்போதைய அரசிடம் காணமுடியவில்லை. அதனால் கூட்டமைப்பு நடத்தும் அமிலச் சோதனை காரிய ரீதியாக வெற்றியளிக்குமா என்பது கேள்விக்குரியது.

ஆகவே, கூட்டமைப்பினரின் அரசுக்கான அமிலச் சோதனையில் அரசியல் தீர்வு தொடர்பில் அதற்குச் சித்திகிடைக்குமா என்பதில் வெறுமையே. (Vaccum) தெரிகிறது.

இந்தியா போன்ற வெளிச்சக்தி ஒன்றின் காத்திரமான அழுத்தமின்றி தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை இலங்கை அரசு தாம்பாளத்தில் வைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் மேலே குறிப்பிட்டமை போன்று, இணக்க அரசியல் இலங்கைத் தமிழருக்கு வாய்ப்பாகவோ வெற்றி பெறுவதாவோ அமையும் என்று எதிர்பார்ப்பது அறிவுபூர்வமானது அல்ல.

எனினும், இணக்க அரசியல் மூலம், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சிக்கான ஆளுமையும், தற்றுணிவும், சீர்மையும், உருக்குலையாத முழுமைத்துவமும் தமிழர் தரப்பின் தேவைகள். அவற்றை வளர்த்து, விருத்தி செய்ய முயல்வதே உகந்தது.

# சிறைக் கைதிகளின் விவரங்களை கணினி மயப்படுத்துவதற்குத் தீர்மானம்

கொழும்பு,டிசெ.1

சிறைக்கைதிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும், கணினி மயப்படுத்துவதற்கு புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 27 ஆயிரம் சிறைக் கைதிகளது தகவல்களும் இவ்விதம் கணினி மயப்படுத்தப்படவுள்ளதோடு இத்தகைய செயற்றிட்டமொன்று நடைமுறைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் இது சம்பந்தமான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இச் செயற்றிட்டத்தின் கீழ் இலங்கையின் அனைத்துச் சிறைச்சாலைகளிலும் உள்ள சிறைக்கைதிகளின் தகவல்களும் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

சிறைக்கு வந்தது முதல், சிறைக் கைதியொருவர் விடுதலையாகும் வரையில் அவர் தொடர்பான தகவல்கள் கணினி மயப்படுத்தப் படுவதால் எந்தவொரு சிறைக் கைதி தொடர்பான தகவல்களையும் கணப்பொழுதில் பெறும் வாய்ப்புக் கிட்டுகிறது.

தற்போது சிறைக் கைதிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் கோப்புகளிலேயே உள்ளடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## பிரிட்டன் பயணத்தின்பின் மஹிந்த கூட்டமைப்பைச் சந்தித்துப் பேசுவாராம்

கொழும்பு,டிசெ.1

ஜனாதிபதியின் பிரிட்டன் பயணம் முடிவடைந்த பின் இவ்வார இறுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினை சந்திப்பாரென அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சில இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் மீண்டுமொரு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு அரசுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுவதுடன் அப்பணிகள் பற்றிய கூட்டங்களிலும் அவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

அண்மையில் பல தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது குறிப்பிடத்தக்கது. (ம-5)

## ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு

சுன்னாகம், டிசெ.1

யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் கற்றுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 23 மாணவர்கள் மற்றும் 140இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 5 மாண வர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதியம் இவர்களுக்குப் பரிசில்களை வழங்கவுள்ளது. யாழ்.எய்ட் நிறுவனம் ஊடாக இப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இன்று நண் பகல் 12 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-38)

# வாக்காளர் பெயர்ப் பட்டியல்கள் ஜனவரியில் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.1

ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் தற்போதைய வாக்காளர் பதிவின் 'ஏ' பெயர்ப்பட்டியல், 'பி' பெயர்ப்பட்டியல் என்பன கிராம சேவையாளர் அலுவலகம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

கிராம சேவையாளர் மூலம் தரப்பட்ட வாக்காளர் பதிவு விவரங்களை மாவட்டச் செயலக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஒழுங்குபடுத்தல்கள் முடிவடைந்த பின்னர் மக்கள் பார்வைக்காக ஜனவரி 3 ஆம் திகதிக் குப் பின்னர் கிராம சேவையாளர் அலுவலகம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் என்வற்றில் காட்சிப் படுத்தப்படும்.

காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் அதில் ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் அதுதொடர்பாக பொது மக்கள் கிராமசேவையாளரிடமிருந்து ஆட்சேபனை படிவத்தைப் பெற்று முறைப்பாடு செய்யமுடியும். அல்லது நேரடியாக மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்துக்கும் முறைப்பாடு செய்யமுடியும்.

முறைப்பாடு செய்வதாயின் பெயர் விவரம் காட்சிப்படுத்தப் பட்டு ஒருமாத காலத்தினுள் முறைப்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-15)

# உரிமையாளர் அற்ற காணிகளைக் கையேற்க நல்லூர் பிரதேச சபையினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.1

உரிமையாளர்கள் இன்றிப் பராமரிப்பற்றுக் கைவிடப்பட்ட காணிகளைக் கையேற்கும் வகையில் நல்லூர் பிரதேச சபை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. உரிமை கோரப்படாத காணிகளில் ''இக் காணி பிரதேச சபையால் கையேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது'' என்று எழுதப்பட்ட துண்டுகள் தற்சமயம் ஒட்டப்படுவதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

ஏற்கனவே டெங்கு ஒழிப்பு தொடர்பாக காணிகளில் உள்ள பற்றைகளை அதன் உரிமையாளர்கள் வெட்டித் துப்புரவு செய்ய வேண்டும் எனவும் காணிகளைத் துப்புரவு செய்யாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சபை அறிவித்திருந்தது.

இதன்படி உரிமை கோரப்படாத காணிகளில் மேற்கண்ட அறிவிப்பு ஒட்டப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித் தார். (ம-7)

# மாத்தளையில் வீதி விஸ்தரிப்பு சுவீகரித்த நிலத்துக்கு நஷ்டஈடு

## வழங்கக் கோருகிறார் ஐ.தே.க.எம்.பி.

கொழும்பு, டிசெ.1

மாத்தளை, பிரதான வீதி மற்றும் மாத்தளை, இரத்தோட்டை வீதி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட வீதி விஸ்தரிப்புக்கென அரசால் சுவீகரிக்கப்பட்ட நிலங்களுக்கான நஷ்டஈட்டைக் காணி உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த அலுவிகார வலியுறுத்தியுள்ளார்.

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பந்துல எஸ்.பி. யாலேகமவுக்கு பிரதி செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வசந்த அலுவிகார இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

**வீதிகள் விஸ்தரிக்கப்படும்போது தனியார் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன.** அத்தகைய காணிகளின் உரிமையாளர்களுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்காமல் இழுத்தடிப்பது நியாயமற்றது.

இத்தகைய பாதைகளின் இருமருங்கிலும் 50-60 வருடங்களாக வசித்துவரும் மக்களது வீடுகளும், காணிகளும் சுவீகரிக்கப்படுகின்றன.

எனவே அவர்களுக்கு நியாயமான நஷ்டஈட்டை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகுமென அவர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-5)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 16 | 02.12.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.இ.03.51 வரை |
| நட்சத்திரம் : | சித்திரை |
| | மு.இ. 9.31 வரை |
| சுபநேரம் | : 07.45 -09.15 வரை |
| ராகுகாலம் | : 01.45 - 03.15 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் கலை நிகழ்வு

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இக்கலை நிகழ்வைக் காரைநகர் கிழவன்காடு கலாமன்றப் பாடசாலை மாணவர்கள் நிகழ்த்தவுள்ளார்கள். இந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

(204-236)


## மரண அறிவித்தல்

### திருமதி மகிழேஸ்வரி நவரட்ணராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மூளாய், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகிழேஸ்வரி நவரட்ணராஜா 27.11.2010 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நவரட்ணராஜா (ஓய்வுபெற்ற சிறாப்பர், இ.மி.ச., யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் -தங்கம்மா தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், நவராஜா, அபிராமி, நவஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வசந்தராணி மற்றும் தர்மபாலன் (இலங்கை புகையிரதப் பகுதி), திருமதி பாலகுமாரன் சாந்தினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2010) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.நவரட்ணராஜா
(கணவர்-ஓய்வுபெற்ற சிறாப்பர், இ.மி.ச.)

மூளாய் தெற்கு,
சுழிபுரம். (106674)

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

பூலோகம்: 07 . 07 . 1946

வைகுந்தம்: 01 . 12 . 1997



### அமரர் சினியர் இராசரத்தினம்

(நிற்சாமம், சங்கானை)

ஓடி உருண்டு உமைப் பிரிந்து பதின்மூன்று ஆண்டுகள்
வாடிநின்றோம் உம் பிரிவை எண்ணி நிதம்
தேனொக்கும் வாழ்வளித்த தெய்வத்திருவுருவே
பண்போடு எமைக் காத்த தெய்வமே !
எம் உயிர் வாழும் காலம் வரைக்கும்
எம்முன் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிற்சாமம்,
சங்கானை. (106677) இராசரத்தினம் மோகன் (மகன் - சுவிஸ்)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11.02.1984



விண்ணில் 23.11.2008

திதி: 01.12.2010 (புதன்கிழமை)

### அமரர் செல்லத்துரை விஜயகுமார்

(யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வத்திராயன் வடக்கு,
வடமராட்சி கிழக்கு. குடும்பத்தினர்.


# தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழிலாளருக்கு 'ஷில்ப' விருது

யாழ்ப்பாணம்,டிசெ.1

பாரம்பரிய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழிலாளர்களுக்கான 'ஷில்ப' விருது எதிர்வரும் 3ஆம் திகதி கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்படவுள்ளது.

தேசிய மட்டத்தில் 2010இல் தெரிவான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு தொழிலாளர்களுக்கும், 2009 இல் தெரிவான இரண்டு கைத்தொழிலாளர்களுக்கும் இந்த விருது கிடைக்கவுள்ளது.

மாகாண ரீதியில் 2010 இல் 14 பேரும், 2009 இல் 13 பேரும் தெரிவாகியுள்ளனர்.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்ட கைத்தொழிலாளர்களின் விவரங்கள் வருமாறு:

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட வர்கள்:-உணவு மற்றும் பானங்கள் -எஸ்.பி.நடராசா (அண்ணா இன்டர்ஸ்ரீஸ் 2010 -3ஆம் இடம்), தும்பு மற்றும் நார் அடிப்படையிலான உற்பத்திகள் - சின்னப்பன் குகநாதன் (ஒமேகா இன்டர்ஸ்ரீஸ், 2010-3ஆம் இடம், 2009-2ஆம் இடம்), கனிப்பொருள்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள்-சுப்பிர மணியம் பாஸ்கரன் ஆச்சாரி (பாஸ்கரன் சிற்பாலயம், 2010, 2009-3ஆம் இடம்), இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் அடிப்படை யிலான உற்பத்திகள் - எஸ்.யோகேந்திரன் (வை.எஸ்.எஸ்.பிளாஸ்ரிக் அன்ட் ரிம்ப போட் மனுபக்ரறி இன்டர்ஸ்ரீஸ், 2010- 3ஆம் இடம்).

(ம-311-313)

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புவாரம்

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சுன்னாகம் பிரதேச சபை நூலக மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரையை டாக்டர் எஸ்.சிவயோகன் நிகழ்த்தவுள்ளார். சிறப்புரையை உடுவில் உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் நிகழ்த்துவார்.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட குறும்படக் காட்சியும் இடம்பெறவுள்ளது. (204)

## ஒளி விழா

நவாலி சென்பீற்றர் றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201-100)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நவீன உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஜி.ரி.ஸ்கான் இயந்திரமும் இருதய பிரிவுக்கான விசேட சிகிச்சைகளுக்கான நவீன இயந்திரமும் வந்துசேரவுள்ளன.

இந்த இயந்திரங்களை விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஓ-319)


## WESTERN LODGE

சகல வசதிகளுடன் சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும் தங்குவதற்குக் குறைந்த செலவில் தலைநகரில் தங்குமிட வசதிக்குத் தொடர்பு கொள்ளவும்.

**வெஸ்டன் லொட்ஜ்,**
270, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
T.P : 2433753, 2438570

## தவறிவிட்டது

29.11.2010 அன்று புதிய Casio ஆண்களுக்கான கைமணிக்கூடு, யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் செல்வி வி.திருவருள்சோதி, அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் ஒப்படைத்துதவவும். அல்லது 0771107249 என்ற தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

நல்ல தண்ணீர்க் கிணறு, சுற்றுமதில் என்பவற்றுடன் யாழ். கல்வியியலயத்துக்கு அண்மையில் இல.151, செம்மணி வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய இரு வழிப் பாதை கொண்ட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம். புதவியாளர்கள் பொருத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0779051432

## 21 ஆவது ஆண்டு நினைவலைகளில்

### செல்வி சங்கரப்பிள்ளை தேவசாந்தி



திதி: 01.12.2010

எம் மனங்களெல்லாம் சாந்தியைப் பகிர்ந்த தேவசாந்தியே! நீ எம்மைப் பிரிந்து 21 ஆண்டுகள் இன்றோடு மறைகின்றன. உன் நினைவுகள் மட்டும் எம்மோடு நீங்காமல் கண்ணீரில் நனைகின்றன.

மண்ணில் 02.02.1969

விண்ணில் 09.12.1989

பிரிவால் வாடும்:
திரு.திருமதி சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்.

கைதடி மேற்கு,
கைதடி.

## எமது குடும்ப குலவிளக்கின் ஆண்டு 4

அமரர்

### நல்லதம்பி கணேசன்

(ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ், பசறை, யாழ்ப்பாணம்)

மலர்வு : 15-04-1928

உதிர்வு : 16-12-2006

திதி : கார்த்திகை மாத அமரபக்க ஏகாதசி



எமது குடும்ப குலவிளக்கே !
பூவுலகை விட்டு விண்ணுலகைச் சென்று
ஆண்டு 4 கடந்தோடியதோ ?
ஆண்டு பல நூறாண்டுகள் சென்றாலும்
ஆறாது எமது நெஞ்சை விட்டு .......
எமது கண்ணீர்ப் பூக்களை இவ் 4 ஆம் ஆண்டில்
காணிக்கையாக்குகின்றோம்.

நீங்காத நினைவில்
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

9/3 கோபால் லேன்,
யாழ்ப்பாணம்.
(ஆமிலி, காரைநகர்) (106701)

## 07 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 10 . 1924

இறப்பு 19 . 11 . 2003



### அமரர் கதிர்காமு கிருஷ்ணன்

(பிரபல முறிவு நெரிவு வைத்தியர்)

திதி : தசமி (01.12.2010)

ஆண்டுகள் ஏழு ஆனதையா ஆறவில்லை எம் துயர்
தேசத்தில் நீ செய்த தொண்டுகள் மறையவில்லை
பாசத்தால் உன்னோடு பழகியவர் எல்லோரும்
பாராட்டிப் பேசுவதை பார்க்கின்றோம் இன்னும்

சின்னராசா குடும்பம் (லண்டன்),
தங்கராசா குடும்பம் (பிரான்ஸ்),
பிரபாகரன் (ஹொலண்ட்),
பரமேஸ்வரி, ஈஸ்வரி,ராதா (பிரான்ஸ்).

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (106848)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரசபைக்கென பிரத்தியேகமான பெருந்தெருக்கள் நிர்மாணப் பிரிவு தேவை

## தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழ் நவீன பெருந்தெருக்கள் நிர்மாணத்திணைக்களம் என்ற ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும்.

இப்பிரிவை உருவாக்குவதற்கு அவசியமான இயந்திரங்களையும் பொறிகளையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வழி முறைகள் குறித்தும் அவற்றின் பொறிகளதும் தரங்களையும் வசதிகளையும் விலை மனுக்களைக் கோருவதன் மூலம் மாநகர சபைஆணையாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவினால் நேற்றுமுன்தினம் மாநகர சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் வரவேற்புடன் நிறைவேறியது.

வடக்கு மாகாணத்தில் அரசாங்கம் செயற்படுத்தத் தீர்மானித்துள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக பெருந் தெருக்களை நவீன மயப்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் பங்கு பற்றக் கூடியதாக யாழ்.மாநகரசபையும் நவீன பெருந்தெருக்கள் திணைக்களம் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பணியில் பங்கேற்கமுடியும் என்பதுடன் சபையின் வருமானமும் அதிகரிக்கும் என முதல்வர் பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசும்போது கூறினார்.

இத்தீர்மானத்தில் மேற்படி திணைக்களத்தை உருவாக்குவது தொடர்பாக சாத்தியமான அறிக்கைகளைப் பெறவும் இத்திட்டத்தைச் சிறந்த முறையில் இயக்குவிப்பதற்கு ஏதுவாக சபையின்ஊழியர்களுக்குவிசேட பயிற்சிகளை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தகுதியான ஆர்வலரைத் தெரிவு செய்யக் கூடியதாக முதல்வர் மராமத்துக் குழுத் தலைவர், மாநகர ஆணையாளர், பிரதம சிவில் பொறியியலாளர், பிரதம கணக்காளர்களைக் கொண்ட உப குழு ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (ம-7)



பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் நிறுவப்பட்டிருந்த சதாவதானி கதிரவேற்பிள்ளையின் சிலையை படையினர் புனரமைத்தனர். இதனை 52ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சதசிங்க திறந்து வைக்கிறார்.
இந்த திறப்பு விழா தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியாகியிருந்த செய்தியில் பிறிதொரு செய்தியின் உபதலைப்பு தவறுதலாக இடம்பெற்று விட்டது.

# இந்து விருத்திச்சங்க முன்பள்ளியை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், டிசெ.1

சுதுமலை இந்து விருத்திச் சங்கத்தினால் பல வருடங்களாக நடத்தப்பட்டு வந்த முன்பள்ளி மூடப்பட்டுள்ளதால் இந்தப் பகுதியிலுள்ள சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தூர இடங்களுக்குச் சென்று கல்வி பயில வேண்டிய பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இது குறித்துக்கவலை அடைந்துள்ள பெற்றோர்கள் முன்பள்ளியை மீண்டும் ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுதுமலை தெற்கில் வசிக் கும் கல்விமான்களினதும் சைவப் பெரியார்களினதும் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களாக இயங்கி வந்த இந்த முன் பள்ளியினால் இப்பகுதிச் சிறுவர்கள் நன்மையடைந்து வந்தனர்.

சிந்மய பாரதி வித்தியாலயத்திற்கு அருகில் இந்து விருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த இந்த முன்பள்ளியில் ஏனைய மாணவர்களுககு இந்து சமய அறிவு தொடர்பான பாடநெறிகளும் போதிக்கப்பட்டு வந்தன.

தற்பொழுது இந்த முன் பள்ளி இயங்காமல் இருப்பதினால் இப்பகுதிச் சிறுவர்கள், அயல் கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதால் இந்த முன்பள்ளியை ஆரம்பிக்குமாறுபெற்றோர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (201-115)

# வீதி விளக்குகள் பொருத்துவதில் வலி.தென்மேற்கு மக்கள் ஆர்வம்

சண்டிலிப்பாய், டிசெ.1

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்கு மின் விளக்குகளைப் பொருத்துவதில் பொது மக்கள் ஈடுபட்டுள்ளனர். இருளில் மூழ்கியிருந்த வீதிகள் இதனால் ஒளிமயமாகக் காட்சியளிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து வீதிகளில் பொருத்தப்பட்டி ருந்த மின் விளக்குகள் சேதமடைந்தும் பழுதடைந்தும் போயிருந்தன.

இதனால் பிரதான வீதிகள், சந்திகள் உட்பட அதிகமான வீதிகள் இருளில் மூழ்கியிருந்தன. மக்கள் இரவு நேரங்களில் தயக்கத்துடன் நடமாடி வந்தனர்.

குறித்த வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கு பெரும் தொகையான பணம் தேவைப்படுவதால்பிரதேசசபையும் அதிக கவனம் செலுத்தவில்லை.

இதனால் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம் ஆகிய இடங்களில் வாழும் பொது மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாகவும் சந்திகளிலும் உள்ள மின் கம்பங்களில் தமது செலவில் மின் விளக்குகளைப் பொருத்தி வருகின்றனர்.

இதனால் இருளில் மூழ்கியிருந்த வீதிகள் தற்பொழுது மின்னொளியில் காட்சியளிக்கின்றன. மக்களும் தயக்கமின்றி நடமாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-115)

# கலை, கலாசார பிரிவினரால் விவரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்ப்பாணம் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்கள், வணக்க ஸ்தலங்கள் மற்றும் கலை நிறுவனங்கள் ஆகியவற்றின் விவரங்களைச் சேகரிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணறதி தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரிடம் பெற்றுப் பூரணப்படுத்தி யாழ். பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# யாழ்.செயலக வளவினுள் நின்ற சைக்கிள் திருட்டு

*யாழ்ப்பாணம், டிசெ.1*

*யாழ்.செயலக வளாகத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் திருட்டுப்போயுள்ளது.*

*செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றும் பெண் ஊழியர் ஒருவரின் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. காலை 8.30 மணிக்கு அலுவலகத்திற்கு வந்தபோது வளாகத்தினுள் பூட்டி நிறுத்தப்பட்ட சைக்கிள், காலை 9.15 மணியளவில் காணாமற் போயிருந்தது என உரிமையாளர் தெரிவித்தார்.*

*சில வாரங்கள் முன்னரே 4,500 ரூபா செலவில் திருத்தப்பட்ட சைக்கிளின் பெறுமதி 10,000 ரூபாவுக்கும் மேல் எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் முறையிடப் பட்டுள்ளது. (உ-288)*

# இந்துக் கல்லூரி மைதானம் விரிவாக்கல்; கல்லூரி ஒழுங்கையை மூடுவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விரிவு படுத்துவதற்காக மாநகர சபையிடம் கல்விச் சமூகத்தினால் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரிக்கும் அதன் விளையாட்டு மைதானத்திற்கும் இடையே செல்லும் கல்லூரி ஒழுங்கையை மூடி மைதான விரிவாக்கத்திற்கு வழிவகுத்துத் தருமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் கல்விச் சமூகத்தினால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கையில் ஓரிரு வீடுகள் மட்டுமே உள்ளதாலும் அதற்கு மாற்றுவழிகள் உள்ளதனாலும் இக் கோரிக்கையை சாதமாக பரிசீலிக்க மாநகர சபை எண்ணியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த ஒழுங்கையை மூடுவது தொடர்பாகப் பொது மக்களின் ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 14 நாள்களுக்கு முன் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாநகரமுதல்வர் அறிவித்துள்ளார். (ற)

# சேதனப் பசளையின் பாவனை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும்

வடமராட்சி, டிசெ.1

விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய உரம் இவ்வாண்டு வரையே வழங்கப்படும். அதன் பின்னர் சேதனப் பசளையை அதிகரிப்பதே மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

அசேதன பசளையின் பாவனையைக் குறைத்து இயன்றவரை வீடுகளில் சேர்க்கப்படுகின்ற சேதன கழிவுகளைக் கொண்டு கூட்டெரு தயாரித்துப் பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்கு விக்க பெண்கள் அபிவிருத்தி அலுவலர் மூலமாகவும், விவசா யத்திணைக்களத்தின் ஊடாகவும் மக்களுக்கு அறிவுறுத்தப் பட்டு வருகின்றன. - என்றார்.

கடந்த வருடம் நடைபெற்ற வீட்டுத் தோட்டப் போட்டியில், மாகாண மட்டத்தில் மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவன் செல்வன் வசீகரனுக்கும், பாடசாலைகளுக்கான வீட்டுத் தோட்டப்போட்டியில் விக்கினேஸ்வராக் கல்லூரிக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். (204-236)

# பசு வதையைத் தடுக்கக் கோரி 10 லட்சம் கையொப்பம் திரட்டல்

பசுவதையை தடுக்கக் கோரி 10 லட்சம் கையொப்பங்களுடன் ஜனாதிபதியிடம் மனு கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பசுவளப் பாதுகாப்பு இயக்கத் தலைவர் வண.பண்டித ஊருமுத்தே தயானந்த தேரர் மேற்கொண்டுள்ளார்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

இதற்கென ஆலயங்கள், சமய நிறுவனங்கள், சமூக சேவை அமைப்புக்கள், பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பசுக்களைச் சித்திரவதை செய்தல், பசுக்கொலை ஆகியவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இம்மனுவில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

தமிழர் பிரதேசங்களில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய, சமூக நிறுவனங்கள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன. (உ-38)

# மணி விழா

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி கைதடி-நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றலாகிச் சென்ற நா. அருட் சோதிக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய சமூகத்தினர் சேவை நலன் பாராட்டு விழாவினையும், மணி விழாவினையும் நடத்த வுள்ளனர்.

இன்று புதன்கிழமை வித்தியாலய அதிபர் க. சண்முகதாஸ் தலைமையில் விழா நடைபெறவுள்ளது. கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் இந்த நிகழ்வில் கௌரவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (201-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபைப் பகுதிகளில் திண்மக் கழிவுகள் அகற்றல்

தென்மராட்சி, டிசெ.1

சாவகச்சேரி நகரசபையினர் வட்டாரங்களில் திண்மக் கழிவகற்றல் பணிகள் பணிமனை வாகனங்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சபை வட்டாரங்களில் தார் வீதிகளில் உள்ள இடங்களில் பின்வரும் தினங்களில் திண்மக்கழிவகற்றல் பணிகளை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைகளில் வட்டாரம் இல. 1,3 ஆகியவற்றிலும், செவ்வாய்க்கிழமைகளில் வட்டாரம் 2, 11 ஆகியவற்றிலும் புதன்கிழமைகளில் வட்டாரம் 4,5 ஆகியவற்றுக்கும், வியாழக்கிழமைகளில் வட்டாரம் 6,7 ஆகியவற்றுக்கும், வெள்ளிக்கிழமை வட்டாரம் 8,10 ஆகியவற்றுக்கும் சனி, ஞாயிறு தினங்களில் வட்டாரம் 9இலும் திண்மக்கழிவுகள் அகற்றும் பணிகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)


## கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் பழைய மாணவர் விவரம் திரட்டுதல்

யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய பழைய மாணவர் விவரம் திரட்டப்படுவதால் பழைய மாணவர்கள் அனைவரும் தங்களது பெயர் விவரங்களை 10.12.2010 இற்கு முன்னதாகப் பாடசாலை முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர், யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.

(106713)


# கடற்கரை வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை, டிசெ.1

கொழும்புத்துறை சந்திக்கும் மணியன் தோட்டத்திற்கும் இடைப்பட்ட கடற்கரை வீதி புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வீதி சேதமடைந்து பயணிக்க முடியாதிருந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்றது என தெரிவிக்கப் படுகின்றது.

சுமார் ஒருகிலோ மீற்றர் நீளமுள்ள இவ்வீதியின் நிர்மாணப் பணிகள் சில தினங்களில் நிறைவடையுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மணிப்பூர், வசந்தபுரம் பகுதிகளை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடியிருப்பாளர்களுக்கான ஒரேயொரு போக்குவரத்து வீதி இது என்பது குறிப்பிடத்தக்கது. (204-135)


## முக்கிய அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களின் விபரங்களைப் பெறவேண்டியிருப்பதுடன், புதிய அங்கத்தவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பான விபரங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளிலும், பிரதேச செயலகத்திலும், சங்கத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமையச் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சி.வதனராசா
தலைவர்.

(சி/572672)



## கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 783
சீட்டிழுப்பு திகதி 29.11.2010

எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 25 53 60 63

| | பொருந்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 27,537,413.60 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | -- |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 328 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 628 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15963 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8955 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 226149 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35742 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 36,253,733.60

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,000,000.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6 மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk



## படிவம்

1. இலங்கை நிர்வாக சேவை தரம் III திறந்த போட்டிப் பரீட்சை 2010
2. தொழில்நுட்பக் கல்லூரி அனுமதி – 2011

ஆகிய விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

பாரதி பதிப்பகம்,
430, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.



## ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 703 திகதி 29-11-2010

வெற்றி எண்கள்: 12 13 25 34 C

ஜக்பொட் பரிசு ரூ. 15,123,310/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,123,310/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 03 | 400,000/= | 1,200,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 427 | 1,000/= | 427,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 692 | 1,000/= | 692,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16516 | 60/= | 990,960/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7767 | 40/= | 310,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 195099 | 20/= | 3,901,980/= |
| | | மொத்தம் | ரூ. 7,544,620/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 600590985-7-07 |
| கம்பஹா | 600596267-6-46 |
| மொனராகலை | 600585311-8-48 |
| கேகாலை | 600592062-8-28 |
| அம்பாறை | 600589753-6-26 |
| பொலன்னறுவை | 600586100-5-45 |
| மாத்தறை | 600580312-4-34 |
| கண்டி | 600594125-0-00 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,944,620/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 15,651,430/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 02 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## திருமண வாழ்த்து



மணமகன்
**கிட்டினேஸ்வரன் கஜானந்தா**

மணமகள்
**கணேசமூர்த்தி சசிகலா**

இன்று (01.12.2010) கொழும்பு ஜிந்துப்பிட்டி முருகன் திருமண மண்டபத்தில் இல்லற பந்தத்தில் இணையும் புதுமணத்தம்பதிகள் **கஜானந்தா சசிகலா** ஆகியோரை கருங்காலி முருகப்பெருமான் ஆசியுடன் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்று *"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்வில் பண்பும் பயனும் அது"* என்னும் திருவள்ளுவரின் திருவாக்குக் கிணங்க பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
[illegible] மாளிகை,
221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

### திரு.கந்தையா கனகசபை



மீசாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வசித்து வருபவரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவனும் உத்தரவுபெற்ற நில அளவையாளரும், நீதிமன்ற அளப்பனவு ஆணையாளரும், யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் பகுதி நேர விரிவுரையாளருமான திரு.கந்தையா கனகசபை அவர்கள் 25.10.2010 அன்று மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவரது சேவை மேலும் சிறப்புற வாழ்த்துவோர்:
**விநாயகமூர்த்தி ஆசிரியர் குடும்பம், மீசாலை.**

(108714)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் சிறுவர் இல்லம் ஒன்றில் பாவனைக்குதவாத கோதுமை மா

## திடீர் சோதனையில் சிக்கியது

வவுனியா, டிச.01

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் உணவு தயாரிப்பதற்காகப் பாவனைக்கு உதவாத கோதுமை மா வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபரின் உத்தரவுக்கமைய வவுனியா மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாகப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் க.செல்வகுமார் தலைமையில் பொலிஸ் அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், உளநலப்பிரிவு வைத்திய அதிகாரி, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் அடங்கிய குழு கடந்த திங்கட்கிழமை திடீர் பரிசோதனையை மேற்கொண்டபோதே இந்தப் பாவனைக்குதவாத கோதுமை மா கண்டு பிடிக்கப்பட்டது.

அத்துடன் சிறுவர் இல்லங்களில் சிறுவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படாமையும் இந்தக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டது. உணவு தயாரித்தல், விநியோகம் செய்தல் போன்றவற்றில் உரிய சுகாதார விதி முறைகள் இந்த இல்லங்களில் கடைப்பிடிக்காமை தொடர்பாக இந்தக் குழுவினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இவற்றின் சுற்றுச் சூழல் பல்வேறு குறைகளுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஒருவாரகால அவகாசம் வழங்கப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் சிறுவர் இல்லங்களில் பேணப்படும். பதிவேடுகள் ஒழுங்காகப் பூரணப்பட்டிருத்தல் வேண்டும் எனவும், சிறுவர்களின் அடிப்படை வசதிகள் யாவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் குழுவினரால் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் குறைபாடுகளின்றி இயங்கும் சிறுவர் இல்லங்களுக்கு மட்டுமே இனிமேல் அனுமதி வழங்கப்படுமென்றும், இதனை மீறும் இல்லங்களின் மீது எதுவித முன்னறிவித்தலுமின்றி வழக்குத் தொடரப்படுவதோடு இவை மூடப்பட்டு வேறு இல்லங்களுக்குச் சிறுவர்கள் மாற்றப்படுவார்கள் என்றும் குழுவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-501)

# பிள்ளையார் கதை படிப்பு

பூநகரி, டிசெ.1

கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் பிள்ளையார் கதை படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர் வரும் 12 ஆம் திகதி விநாயகர் சஷ்டி விரதக்காப்பு நிறைவு பெறும். விநாயகர் சஷ்டி விரதம் இருக்கும் அடியார்கள் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசைகளில் பங்கு பற்றி வருகிறார்கள். (க-496)




## மண் வீதியாக மாறியது பிரதான வீதி

பூநகரி, டிசெ.1

பூநகரி- மன்னார்- சங்குப்பிட்டி வீதி கிரவல் நிறைந்த மண் வீதியாகக் காணப்படுவதால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த முப்பது வருடங்களுக்கு முன்பு தார் இட்ட வீதியாக இருந்த 30 கிலோ மீற்றர் நீளமான இவ் வீதி காலப்போக்கில் பெரிதும் சிதைவடைந்து தற்போது முற்றுமுழுதாக கிரவல் மண் வீதியாகக் காணப்படுகிறது. இப்பிரதான வீதியின் இரு மருங்கிலும் குடிமனைகள் அமைந்துள்ளன. அத்துடன் பிரதான பாடசாலைகளான பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம், செம்பன்குண்டு அ.த.க.பாடசாலை, ஜெயபுரம் மகாவித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு செல்வதற்கு இவ் வீதியையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

மழைகாலம், வெயிற்காலம் எதுவாக இருந்தாலும் இவ்வீதியால் பிரயாணம் செய்வோர் கிரவல் படிந்த அழுக்கான உடையுடனே செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இவ்வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு சம்பந்தப்பட்டோரிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-496)

## வவுனியா பொது வைத்தியசாலையில் மின்சாரச் சிக்கனத்துக்கு அறிவுறுத்து

வவுனியா, டிச.01

வவுனியா பொது வைத்தியசாலையில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்குமாறு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொது வைத்தியசாலையின் விடுதிகள், அலுவலகப் பிரிவுகள், சிகிச்சை நிலையங்கள் என்பனவற்றில் தேவையற்ற விதத்தில் மின் குமிழ்கள் எரிவதும், மின் விசிறிகள் சுழல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அனாவசியமாக அதிக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு உடனடியாகச் செயற்படும் வண்ணம் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்குமாறு விடுதிகளுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரிகளுக்கும், ஏனைய பிரிவுகளுக்குப் பொறுப்பானவர்களுக்கும் பொது வைத்தியசாலையின் அத்தியட்சகரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-504)

### வெற்றிப் பாதையில்.....



சுபீட்சத்தை நோக்கி: வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய செம்மலை மகாவித்தியாலய மாணவர்கள் படத்தில் காணப்படுகின்றனர். (555)

## பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் உணவகங்களுக்குக் கடும் எச்சரிக்கை

வவுனியா, டிச.01

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அமைந்துள்ள பல உணவகங்களில் பல்வேறு குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழுள்ள புளியங்குளம், நெடுங்கேணி, கனகராயன்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள உணவகங்கள், தேநீர்ச் சாலைகள் என்பன கடந்தவாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர்ப்பரிசோதனைக்கு உள்ளாகின. அப்போது இவற்றில் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டன. குறிப்பாக ஏ-9 வீதியில் அனுமதியின்றி முளைக்கும் தேநீர்ச்சாலைகள், உணவு தயாரிப்பு நிலையங்கள் என்பனவற்றிலேயே அதிக குறைபாடுகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இவற்றில் உணவருந்தும் பொது மக்கள் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் ஏதுநிலை தோன்றியுள்ளது.

உரிய வகையில் அனுமதி பெறாது உரிமமின்றி இயங்கும் உணவுச்சாலைகள் மீது முன்னறிவித்தல் எதுவுமின்றி வழக்குத் தொடரப்படுமென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-50)

## கைத்தொலைபேசி தடங்கல்களால் உயர்ந்த கட்டடங்களில் ஏறும் மக்கள்

முல்லைத்தீவு, டிச.01

முல்லைத்தீவு மாவட்டத்தில் கைத்தொலைபேசிகள் தெளிவில்லாமலும், அடிக்கடி தடைப்படுவதுமாக உள்ளதால் பாவனையாளர்கள் உயர்ந்த கட்டடங்களையும், உயரமான மரங்களையும் நாடவேண்டிய நிலையிலுள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் கைத்தொலைபேசிகளின் பாவனை அதிகரித்துள்ளது. ஆனால் இவற்றின் இயக்கம் சீராக இல்லை. அநேகமான வேளைகளில் தெளிவில்லாமலும் தடைப்பட்டும் காணப்படுகின்றது. இதற்கான சரியான காரணம் பாவனையாளர்களுக்குத் தெரியவில்லை. இதனால் தமது கைத்தொலைபேசிகளினூடாகக் கதைக்கும் பொருட்டு உயர்ந்த கட்டடங்களிலும், உயரமான மரங்களிலும் ஏறி நின்று இவர்கள் கதைக்கின்றனர். இவற்றில் ஏறுவதற்கு முடியாதவர்கள் கீழே நின்று வேடிக்கை பார்க்கத்தான் முடிகின்றது.

ஆகவே இந்த மாவட்டத்தில் தொலைபேசிக் கோபுரங்களை அமைத்த நிறுவனங்கள் அவற்றின் சீரான இயக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமெனப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

## வெள்ளத்தில் மூழ்கியது இயக்கச்சிச் சந்தை

யாழ்ப்பாணம், நவ.1

கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையினால் இயக்கச்சி பொதுச்சந்தை வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது. போரின் பின்னர் மீளப் புனரமைப்புச் செய்து பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்ட இயக்கச்சி பொதுச்சந்தை தாழ்வான காணியில் உள்ளதால் அதிகளவான வெள்ளம் சந்தைக்காணிக்குள் தேங்கி நிற்கின்றது. இதனால் வியாபாரிகள் பொருள்களை விற்பனை செய்ய முடியாமல் பெரும் சிரமங்களை எதிர் கொள்கிறார்கள்.

பொதுமக்களின் நன்மை கருதி பிரதேச சபையினரால் இயக்கச்சி பொதுச் சந்தையின் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (க-313,311)

# மாசார், புலோப்பளை பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மழையால் பாதிப்பு

பளை, டிசெ.1

பளை நகரத்தின் மாசார், புலோப்பளை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பிரதான பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தற்போது பெய்து வரும் மழையினால் பாதிப்படைந்துள்ளன.

மீள்குடியேற்றத்தின் பின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ள இப்பாடசாலைகள் தறப்பாள்களாலும் ஓலைகளாலும் மட்டுமே கூரைகள் அமையப் பெற்றுள்ளன. இதனால் மழை நீர் வகுப்பறைக்குள் தேங்கி நிற்கின்றது.

போதிய தளபாட வசதிகள் இல்லாததால் தரையில் இருந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இப்பாடசாலை மாணவர்கள் இருந்தார்கள். தற்போது அதிக மழை பெய்துள்ளதால் மாணவர்களது வரவு குறைந்துள்ளது.

பரீட்சைக் காலம் நெருங்குவதால் உரிய முறையில் பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாது உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரம் பாடசாலைகளின் வளத்தைத் உயர்த்தும் திட்டத்தில் பளை நகரத்தில், பளை மத்திய கல்லூரிக்கு மாத்திரமே அனுமதி கிடைத்துள்ளது.

எனினும் பாடசாலைகளின் திருத்தப் பணிகளுக்கு பலரிடம் கோரிக்கை விடுத்த போதும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. இதனால் அந்தப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களின் மத்தியில் தமது செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

எதிர் காலத்தில் மாணவர்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-313-311)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் - சாவகச்சேரி

## உயர்திரு. நாகலிங்கம் அருட்சோதி அதிபர் (S.L.P.S.-I) அவர்களின்

# மணிவிழாச் சிறப்பு மலர் - 01.12.2010



### ஆன்மீகப் பணியாற்றும் அதிபர்

யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபர் அருட்சோதி அவர்களுக்கு மணிவிழா கொண்டாடுவதுகண்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தமது கடமையை இறைபக்தியுடன் முன்னெடுப்பதுகண்டு பலரும் பாராட்டுகின்றனர்.

மாணவர்களைச் சமய வழியில் வழிப் பயிற்றுவிக்கும் இவரது முன்மாதிரியைப் பின்பற்றிச் சமயம், கல்வியுடன் இணைந்து செல்ல கல்விப்பகுதியினர் வழிசமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

இவரின் ஓய்வுகாலம் மகிழ்ச்சியாக அமைய இறைவன் அருள் புரிய வேண்டுகின்றேன்.

சிவஸ்ரீ க. பரராசசேகரக் குருக்கள்,
உற்சவகால பிரதமகுரு, சாவகச்சேரி சிவன்கோயில்.



### மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியில் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. நாகலிங்கம் அருட்சோதி அதிபர் அவர்களும் ஒருவர் என்பதில் மிகையில்லை. 14 வருடங்கள் இவரது சேவையில் பயன் அடைந்த யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய சமூகத்தினர் இவருக்கு மணிவிழா எடுப்பது மிக்க மகிழ்ச்சி தருகின்றது.

பாடசாலைச் சமூகத்திடமிருந்தும், சமூக சேவையாளர்களிடமிருந்தும் பல்வேறு உதவிகளைப்பெற்று சிதைவடைந்திருந்த பாடசாலையை மீளக்கட்டி அமைத்து சாதனை படைத்த அதிபராக இவரை நான் பார்க்கின்றேன். மேலதிகாரிகளுக்கு மதிப்பளிப்பதில் முன்மாதிரியாகத் திகழும் அதிபர் அவர்களை இந்த நன்நாளில் மனமுவந்து வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் தனது ஓய்வுகாலத்தில் குடும்பத்தினருடன் எல்லா வளங்களும்பெற்று மகிழ்ச்சியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ப. விக்னேஸ்வரன்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.



### தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய நா. அருட்சோதி அவர்கள் ஆரம்பக் கல்வியை உயர்வடையச் செய்வதில் கண்ணும் கருத்துமாக நின்று செயற்பட்டவர். நல்லதோர் ஆசிரியர். சமூகத்தை ஒன்றிணைத்து ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டமை என்னால் அவதானிக்கப்பட்டது. இதனாலேயே மிக அண்மையில் கல்லூரிகள் காணப்பட்ட போதும் இங்கு கணிசமான மாணவர்கள் ஆரம்பக் கல்வியைப் பயின்றனர். பல சாதனைகளையும் படைத்தனர்.

குறித்த நேரத்தில் வேலைகளை நிறைவேற்றும் ஓர் அதிபர், அதிகாரிகள் நம்பிக்கை உடையவர். மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய தேர்ச்சி பெற்றவர். இவரது பதவியுயர்வு காரணமாக வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். இவரது அகவை அறுபதில் வாழ்த்துரை வழங்குவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இவரது ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

கு. பிறேமகாந்தன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.



### பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

அதிபர் நா. அருட்சோதி அவர்கள் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றிய யா/நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் மணிவிழா எடுப்பதையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரிடமிருந்து எமது கல்விச் சமூகம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம். இவ்வேளையில் இவர் ஆற்றிய பணிகளையொட்டி இவரை வாழ்த்துவதுடன் இவர் எல்லா வளமும் பெற்று நீண்டகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கோ. வரதராசமூர்த்தி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாகம்.



### கோட்டக்கல்வி அலுவலரின் வாழ்த்துச் செய்தி

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 38 வருடங்களுக்கு மேல் சிறப்பாகக் கல்விப்பணியாற்றி 1ஆம் தர அதிபர் வரை உயர்வடைந்து மணிவிழாக்காணும் எனது அன்புக்கும், பெருமதிப்பிற்குமுரிய அதிபர் நா. அருட்சோதி அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

தங்கள் சேவைக்காலத்தின் இறுதிக்காலத்தில் கூட தங்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தினை விரும்பியோ, விருப்பமின்றியோ எவ்வித மறுப்புமின்றி ஏற்று உயர் அதிகாரிகளின் பணிப்பினை ஏற்க வேண்டுமென்ற உயரிய தத்துவத்தினை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருந்தீர்கள். தங்கள் ஓய்வுகாலம் சிறப்பாகவும், மகிழ்வாகவும் அமைந்து குடும்பம் உயர்வடைந்திட இறைவனை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

கு. சிவானந்தம்,
கோட்டக்கல்வி அலுவலர், தென்மராட்சி.



### வித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் தனக்கென ஒரு முத்திரை பதித்துச் செல்கின்ற பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரிய மணிவிழா நாயகன் உயர்திரு நா. அருட்சோதி அதிபர் அவர்களின் மணிவிழாவினைத் தலைமையேற்று நடத்துவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையானது பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்.

அதிபர்கடமையில் உள்ள நுணுக்கங்களையும், பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றியும், தனது அனுபவங்களின் ஊடாக எடுத்துக்கூறி என்னை வழிப்படுத்தி வருகின்ற பெருந்தகை இவராவார். இவரால் வழிநடத்தப்பட்டுச் சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கும் எமது வித்தியாலயத்தைத் தொடர்ந்தும் இவரது வழிகாட்டலுடன், மேலும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல திடசங்கற்பம் செய்து மணிவிழா நாயகன் தனது ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று அவர் தம்குடும்பத்தினருடன் குதூகலமாகப் பல்லாண்டு காலம் வாழ்ந்து, சமூகப்பணியாற்றிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. க. சண்முகதாஸ் (SLPS-2-II),(B.A.,Dip-in-Edu.),
அதிபர், யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி.



### சுயவிவரம்


| | |
|---|---|
| பெயர் | : நாகலிங்கம் அருட்சோதி |
| பிறந்த திகதி | : 01.12.1950 |
| பிறந்த இடம் | : நாவற்குழி |
| ஆரம்பக்கல்வி | : யா/ நாவற்குழி மகாவித்தியாலயம் |
| இடைநிலைக்கல்வி | : யா/ கனகரத்தினம் மகாவித்தியாலயம் |
| தொழில் தகைமை | : விசேட பயிற்சி - கணிதம் |

### சேவை விவரம்

01. கு/ மத்தேகட்டிய முஸ்லிம் வித்தியாலயம்
ஆசிரியர்- 15.03.1972 - 30.01.1977
02. வ/ வெளிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
ஆசிரியர்- 31.01.1977 - 08.01.1978
03. யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
ஆசிரியர் பயிற்சி- 09.01.1978 - 31.12.1979
04. க/ கதிரேசன் குமார மகாவித்தியாலயம் நாவலப்பிட்டிய
ஆசிரியர்- 01.01.1980 -31.12.1982
05. யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்
ஆசிரியர் - 01.01.1983 -14.05.1989
06. யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி
ஆசிரிய ஆலோசகர்- 15.05.1989 - 31.12.1992
07. யா/ கோட்டக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி
ஆசிரிய ஆலோசகர் - 01.01.1993 -31.05.1993
08. யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்
அதிபர் தரம் III - 01.06.1993 - 10.03.1996
09. யா/ கைதடி அ.த.க. பாடசாலை
அதிபர் தரம் III - 11.03.1996 -31.09.1996
10. யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை
வித்தியாலயம் அதிபர் தரம் II,
அதிபர் தரம் I - 01.10.1996 -14.06.2010
11. யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
அதிபர் தரம் I - 15.06.2010 - 30.11.2010

### சமூகப்பணி

1. ஆலமரம் என்ற சமூகசேவை நிறுவனத்தின் செயலாளர்
2. தென்மட்டுவில், கைதடி நுணாவில் ஐக்கிய நாணய சங்கப் பொருளாளர்.




### வெற்றிக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கு

அன்பான குருவாக, தந்தையாக, சகோதரனாக, நண்பனாக இருந்து எமது வெற்றிக்கெல்லாம் வழிசமைத்தவர்! அருட்சோதியாகப் பிரகாசித்து வழிகாட்டிய கலங்கரை விளக்கு! எமது கல்லூரியைத் தூக்கி நிறுத்திய பெருந்தூண்!

ஓய்வு காலங்களில் எமது கல்விச் சமூகம் மேன்மேலும் ஓங்குவதற்கு உதவவும், சகல வளங்களையும் பெற்று, நல்ல தேகாரோக்கியத்துடன் தனது குடும்பத்துடன் பிரகாசிக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

லயன் K. சபாரட்ணம் நரேந்திரன்,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி.



### ஆற்றல் மிக்க அதிபர்

அதிபர் நா. அருட்சோதி அவர்கள் கடமையாற்றிய காலப்பகுதியில் இவர் மேற்கொண்ட அரும்பணிகள் காரணமாக பாடசாலை பல துறைகளிலும் சிறந்து விளங்கியது. எல்லோருடனும் அன்பாக அணுகி காரியங்களைச் சாதிக்கும் பண்பு இவரை ஓர் ஆற்றல்மிக்க அதிபராக மிளிரச் செய்துள்ளது. இவரின் ஓய்வு காலத்திலும் தொடர்ந்து கல்விப் பணிகள் பலவற்றை நிறைவேற்றக் [illegible] நலமுடன் வாழ இறையருளை வேண்டிநிற்கின்றேன்.

இ. கபிலேஸ்வரன்,
ஓய்வுபெற்ற அதிபர், பழைய மாணவர் சங்க செயலாளர்,
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### போற்றுதற்குரிய பெருமகனார்

கல்விசார் சமூகத்துக்கு அரும்பணியாற்றித் தனது அறுபதாவது அகவையில் இளைப்பாறி மணிவிழாக் காணும் அதிபர் நாகலிங்கம் அருட்சோதி அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குதில் பெருநிறைவு கொள்கின்றேன்.

கல்விச்சேவையே சிறந்ததென அருந்தொண்டாற்றியவரும், கல்விமான்களைக் கௌரவித்து இத்தகைய விழாக்களை நடத்துவதென்பது பாராட்டுதற்குரியதொன்றாகும்.

அதிபர் நா. அருட்சோதி அவர்கள் ஓய்வுகாலத்தில் உடல், உள ஆரோக்கியத்தோடு நெடுங்காலம் வாழ்ந்து இன்னும் பல சேவைகளைச் சமூகத்துக்கு ஆற்றுவதற்கு இறையாட்சி கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

வண. A.K. செல்வநாயகம் அடிகளார்,
தென்இந்திய திருச்சபை, சாவகச்சேரி.



### நுண்ணறிவு கொண்ட அதிபர்

கணித வல்லுனரான நாகலிங்கம் அருட்சோதி கணித ஆசிரியராகவும், 14 வருட அதிபராகவும் 38 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்த அதிபர் அவர்களின் சேவை பாராட்டுதற்குரியது. ஒரு கணித ஆசானாகத் திகழ்ந்தமையால் தனது நுண்ணறிவைப் பயன்படுத்தி சிறந்த திட்டமிடலுடன் பாடசாலையை நடத்தியுள்ளார். ஆசிரியர்களைக் கௌரவமாக நடத்தி அவர்கள் பணிசிறக்க உதவினார் என்றால் மிகையாகாது. இதனால் மாணவர்களின் கற்றல் மகிழ்ச்சிகரமாக இருந்துள்ளது. எனவே கலைத்திட்ட இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்கள் சிறந்த அடைவினைப் பெறக்கூடியதாக இருந்துள்ளது. சிறந்த கணித பாட ஆசானாக, கண்ணியம் மிக்க அதிபராகக் கடமையாற்றிய நா. அருட்சோதியை அவரது ஓய்வுபெறும் நாளில் வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் கல்விக்கு உதவவேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

வே. தி. செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்டம்.



### தலைமைத்துவத்தில் தலை சிறந்த ஆசான்

பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக அமிர்தாம்பிகை அன்னைக்குத் தன்னை அர்ப்பணித்துப் பணி செய்தவர். தம் பெயருக்கேற்ப அருட்சோதி அவர்கள் மாணவச் செல்வங்களை நற்பிரஜைகளாக, நன்மணிகளாக ஒளியேற்றி இன்றைய பொன்னாளிலே மணிவிழா நாயகனாக மிளிர்கின்றார்.

பாடசாலை நிர்வாக நடவடிக்கையில் சுமுகத்தன்மையைப்பேணி அன்பினால் அரிய பல சாதனைகளைப் படைத்தவர் நா. அருட்சோதி அவர்கள். மேலும் இவரது ஓய்வுகாலம் சிறப்புற அமையவும் தொடர்ந்தும் இவரது பணி சமூகத்துக்குக் கிடைக்கவும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றோம்.

இக்கைங்கரியத்தைச் சிரமேற்கொண்டு நடத்தி வரும் மணிவிழாக் குழுவினருக்கும் எமது பாராட்டுக்கள்.

திருமதி. அ. சாந்தசீலன்,
பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி.



### மனதார வாழ்த்துகின்றேன்

கல்விச்சேவையில் 38 ஆண்டுகள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் திறம்படப் பணியாற்றி 60ஆவது அகவையில் ஓய்வுபெறும் அன்புக்குரிய அதிபர் அருட்சோதி அவர்களின் ஓய்வுகாலம் சீரும்சிறப்புமாக மிளிர வேண்டுமென்றும், அவர் உடலாரோக்கியத்துடன் நீடுழி வாழ வேண்டுமென்றும் மனதார வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மு.செ. சரவணபவ,
[முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்.]
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.



### முன்னாள் கோட்டக்கல்வி அலுவலரின் வாழ்த்துச்செய்தி

என் அன்புக்கும் மதிப்புக்குமுரிய அதிபர் நா. அருட்சோதியின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

ஆசிரியராக, கணிதபாட முதன்மை ஆசிரியராக, அதிபராகப் பதவி வகித்துள்ள இவர் கற்பித்தலில் சிறந்த கணித ஆசானாகவும், சிறந்த அதிபராகவும் செயற்பட்டுள்ளார். அவரது பெயருக்கேற்றாற்போல் அன்பின் பிறப்பிடமாகவும், அமைதியின் உறைவிடமாகவும் திகழ்பவர். பாடசாலை முன்னேற்றத்தில் நேரகாலம் பாராது அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உதாரணபுருஷர்.

மணிவிழா நாயகனின் மணிவிழா சிறக்கவும் இவரது ஓய்வு காலத்தில் எல்லா நலன்களும் பெற்றுக் குடும்பத்துடன் வாழவும், இறையருள் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

நா. சத்தியநாதன்,
ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அலுவலர், தென்மராட்சி.



### அதிபர் சங்கத் தலைவரின் மணிவிழா வாழ்த்துரை

தென்மராட்சியின் கோர யுத்தத்தில் சிதைவுற்ற தனது பாடசாலையை மிகக் குறுகிய காலத்தில் செப்பனிட்டு நுணாவில் பகுதி மாணவர்களுக்குக் கல்வி வழங்க வழி செய்த அதிபர் இவர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோரின் உள்ளங்களைக் கவர்ந்த இவரின் மணிவிழாவை அமிர்தாம்பிகைக் கல்விச் சமூகம் கொண்டாடுவது பாராட்டுதற்குரியது.

கல்விப் பணியில் இருந்து ஓய்வுபெறும் திரு அருட்சோதி அவர்கள் நீண்ட ஆயுளுடனும் நிறைந்த செல்வங்களுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ. கயிலாயபிள்ளை,
தலைவர், தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் அதிபர் சங்கம்.

மலர்த்தொகுப்பு: மணிவிழாக் குழு.
யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

# வடக்கில் நாம் பிரச்சினையை ஏற்படுத்தவும் இல்லை மக்களை வைத்து அரசியல் நடத்தவும் இல்லை

## கோத்தபாயவுக்கு சுரேஷ் எம்.பி. பதிலடி

கொழும்பு, டிசெ. 1



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே மக்களுக்குள்ள பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்துக்கு கொண்டுவந்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது எமது கடப்பாடாகும். பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதுபோல் வடக்கில் நாம் பிரச்சினைகளை ஏற்படுத்தவுமில்லை. மக்களை வைத்து அரசியல் நடத்தவுமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியிடம் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்துக் குறித்துக் கேட்ட போது இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார்.

ஜே.வி.பியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கில் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன என பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:

முதலில் ஜே.வி.பிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை அவர் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

கோத்தபாய ராஜபக்ஷ இந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளர். அவர் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய உள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமல் போயுள்ளனர். அவர்கள் பற்றிய தகவல்களை, உண்மைகளை நாம் இன்று உலகறிய வைத்துள்ளோம். இதை ஒளித்து மறைத்து தமிழ் மக்களிடம் அரசியல் நடத்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

இன்று வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பிரச்சினைகள் நிறைய உள்ளன. மீள்குடியேற்றப் பிரச்சினை, இராணுவத்தினரால் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படவேண்டியவை. அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எமக்கு உண்டு.

நாடாளுமன்றத்துக்குச் சென்று நித்திரை கொள்வதற்காக மக்கள் எங்களைத் தெரிவு செய்யவில்லை. உண்மையில் 'அவசர காலச்சட்டத்தை நீடிப் பதற்காகக் கூறும் சாட்டுப் போக்கே இது'

பாதுகாப்புச் செயலாளர் நினைத்தால் தடுப்புக் காவலில் உள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பான பெயர் விவரங்களை வெளியிடலாம். இவர்களுக்கான வழக்குகளை விசாரணைக்கு கொண்டுவந்து அவர்களை விடுதலை செய்ய வழி செய்யலாம். இதைவிடுத்து எமது கடமையை நாம் செய்வதை நிறுத்துமாறு கூறுவது பிழையான கருத்து. வடக்கில் காணாமல் போனவர்களைத் தேடும் பணி இவர் கூறியதைப் போன்று பெரிய பிரச்சினைகளை வடக்கில் உருவாக்காது. - என்றார். (ஒ-சி)

# இலங்கை வங்கி சுன்னாகக் கிளை முதலாம் இடம்

இணுவில், டிசெ.1

அண்மையில் அகில இலங்கை ரீதியில் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு இடையில் இடம்பெற்ற சிறுவர்களுக்கான றோட்ருலாண்ட், சீட்டுகள் விற்பனை செய்வதற்கான போட்டியில் சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி கணக்கானது ஒவ்வொரு 2500 ரூபா பண வைப்பிற்கும் ஒரு சீட்டு என்ற அடிப்படையில் கடந்த ஒரு மாதத்தில் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் மேற்பட்ட சீட்டுக்களை வழங்கி சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. இதற்காக வங்கியின் முகாமையாளர் எஸ்.ப.அரசகுமார் உட்பட அனைத்து ஊழியர்களும் முதன்மை வங்கியின் தலைவர்களால் பாராட்டப்பட்டுள்ளனர். இப்போட்டியில் 301 வங்கிகள் பங்குபற்றியுள்ளன. (ஒ-45)

# வன்னி மாவட்ட பட்டதாரிகள் விவரம் கோரல்


வடக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் அல்லது தொடர்ச்சியாக 6 வருடங்கள் வசித்தவர்களில் பட்டதாரிகள் தமது கல்வித் தகுதிகளுடானான சுய விவரங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சுய விவரங்களை பிராந்திய ஆணையாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலம், கச்சேரி வீதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-201)

## மழையின் கொடூரம்.....





பரிதாபம்: தற்போது பெய்து வரும் மழையால் யாழ்.முற்ற வெளிப்பகுதியில் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. தனியார் பஸ் ஒன்று முற்ற வெளிப்பகுதியில் வீதியை விட்டு விலகி வெள்ளத்தில் சிக்குண்டு காட்சியளிக்கின்றது. முச்சக்கர வண்டி ஒன்று மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெள்ளத்தில் பயணம் செய்கின்றது.

(201-26)

# தேசியக் கல்வி விஞ்ஞான பீடப் பயிற்சிக்கான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

தேசியக் கல்வி விஞ்ஞானபீடப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இப் பீடத்தில் வர்த்தகம் மற்றும் கணக்கியல் புதிய பாடங்களாக அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்கு 60 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தப் பாடத்திட்டம் முதலில் வடமேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும். அத்துடன் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சிக்கு 150 மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

அழகியற் கல்வியின் சிங்கள மொழி மூல ஆரம்பப் பாடசாலை ஆசிரியப் பயிற்சிக்கு இம்முறை மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதற்குப் பதிலாக தமிழ் மொழி மூலம் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக்கு 80 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். பல்கலைக்கழகங்களில் அடுத்த வருட அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. சகல கல்விப் பீடங்களுக்கும் மொத்தமாக 3,265 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் - எனத் தெரியவருகின்றது. (சி)

# பணமோசடிக் குற்றச்சாட்டின் பேரில் தொலைக்காட்சி நடிகைக்கு அபராதம்

கொழும்பு, டிசெ.1

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவார் எனக்கூறி பல லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட தொலைக்காட்சி நடிகையொருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவருக்கு 2,70,000 ரூபா அபராதம் விதித்து பலப்பிட்டிய நீதிவான் திருமதி. என்.டீ.ஐ. அபேகுணசேகர தீர்ப்பளித்தார்.

அத்துடன் ஒரு வழக்குக்கு தலா இரண்டு லட்ச ரூபா சரீரப்பிணை வீதம் மொத்தமாக இருந்த ஆறு வழக்குகளுக்கு 12 லட்ச ரூபா சரீரப் பிணையும் விதித்தார். சந்தேக நபர் ஆறு பேரிடமிருந்தும் பணம் பெற்றுள்ளதை ஒப்புக் கொண்டதற்கமையவே நீதிவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

அடுத்த விசாரணையை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிவான் சம்பந்தப்பட்ட ஆறு பேரினதும் கடவுச் சீட்டுகளை நீதி மன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தர விட்டார். சந்தேக நபருக்கெதிராக அம்பலாங் கொடை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (சி)

# முறிகண்டி பிள்ளையார் ஆலய வழக்கு ஜனவரி 11 விவாதத்திற்கு எடுக்கப்படும்

கொழும்பு, டிசெ.1

முறிகண்டி பிள்ளையார் கோயிலை பரம்பரை தர்மகர்த்தாவிடம் ஒப்படைக்ககோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர்நீதி மன்றம் அண்மையில் அறிவித்துள்ளது.

ஏ-9 வீதியில் அமைந்துள்ள மேற்படி கோயிலின் முன்பகுதி அதன் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தனது மனுவில் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்து கலாசார விவகார திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் ஆலயத்தை தர்மகர்த்தாவான தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டியே நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தன்னிடமிருந்து குறித்த கோயிலை பலவந்தமாகப் பெற்றுக் கொண்டனர் என்றும், அதன் பின்னர் தான் இந்தியாவுக்குச் சென்றார் என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோல்வியடைந்த நிலையில், மேற்படி கோயிலை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென உரிய அதிகாரிகளிடம் கோரிய போதிலும் அதனால் எவ்வித பயனும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த கோயிலுக்குச் சேரவேண்டிய பணம் இந்து கலாசார விவகார திணைக்களப் பணிப்பாளர் மேற்பார்வையில் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது என்றும் முன்னாள் தர்மகர்த்தா தனது மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ([illegible])

# தமிழ் வர்த்தகர்கள் சடலமாக மீட்பு; சந்தேகம் தருவதாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

வத்தளையைச் சேர்ந்த குணரெத்தினம் மற்றும் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பெர்ணான்டோ என்ற இரு தமிழ் வர்த்தகர்கள் அண்மையில் காணாமல்போய் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இச்சம்பவங்களுக்கும், கடந்தகாலம் கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கும் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

- என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

இந்த இரண்டு சம்பவங்களும் தலை நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஒரு வாரத்திற்குள் நடைபெற்றுள்ளன. மர்மமான முறையில் நடைபெற்றுள்ள இந்த இரண்டு சம்பவங்களும் தலைநகர் தமிழர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றின் பின்னணியில் கடந்த காலங்களில் செயற்பட்ட கடத்தல் கும்பல்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது.

பொலிஸ் மா அதிபர் இந்த இரண்டு மரணங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் விசாரணைகளை கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம் - இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



குழப்பங்கள் தீர எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். நீண்ட நாள்களாக பார்க்காத ஒருவரை பார்க்க நேரிடுவதால் செலவு ஏற்படலாம். பிள்ளைகள் கேட்ட பொருள் ஒன்றை வாங்க அங்கும் இங்கும் அலையலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தற்பெருமையுடன் நடப்பீர்கள்.

**இடபம்:**



உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். நண்பர்கள் உங்களுக்காக செலவு செய்யலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். வெறுப்பு, விரக்தி ஏற்படும்.

**மிதுனம்:**



புதியவர்கள் சந்திப்பால் உற்சாகம் அடைவீர்கள். நோய் உபாதைகளில் இருந்து விடுபட்டு நிம்மதி பெறுவீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தவர்களை சந்தித்து யோசனை கேட்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் வந்து சந்தோஷம் அடைவீர்கள்

**கடகம்:**



எதிர்பாராத திடீர் சந்திப்புகள் நிகழும். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து சில விடயங்களில் சுமுகமாகச் செல்ல நினைப்பீர்கள். பகை ஒன்று நட்பாக மாறலாம். அரசியல்வாதிகள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். சிலர் தொழில் ரீதியான பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**சிங்கம்:**



பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். ஆறுதலான நாள்.

**கன்னி:**



நினைத்ததைப் பெற்று சாதனை படைக்கும் நாள். ஒரு வகையில் உருவான பிரச்சினையை மற்றொரு வகையில் செய்து முடிப்பீர்கள். எதிலும் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். நண்பர்களுக்காக மற்றொருவரிடம் பரிந்து பேசுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைச்சல் ஏற்படும்.

**துலாம்:**



வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வரலாம். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். ஒரு வரவை எதிர்பார்த்த நேரத்தில், மற்றொரு வரவும் சேர்ந்து வரலாம். பொது விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**விருச்சிகம்:**



மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். பலனை எதிர்பார்க்காமல் செய்த காரியம் ஒன்றில் ஆதாயம் பெறலாம். உடன் பிறப்புகளுடன் சச்சரவுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலரிடம் கடன் பெறலாம்.

**தனுசு:**



தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். வெளியூர்களில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். இடமாற்றங்களால் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். மனைவி வழியில் சிறு பிரச்சினைகள், வாக்குவாதங்களைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

**மகரம்:**



மனதிற்கு சங்கடம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிலர் தங்களின் பிரச்சினைகளை சொல்லி உங்களின் நேரத்தை வீணடிக்கலாம். பயணங்களின் போது தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். கடன் பாக்கிகள் வசூலாவது தள்ளிப் போகலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். அலைச்சல் உண்டு.

**கும்பம்:**



மனதிற்கு இனிய செய்திகளைக் கேட்கலாம். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். பிறருக்கு பிணை கொடுத்து வாங்கிக் கொடுத்த கடன் வந்து சேரலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை விமர்சனம் செய்து பேச வேண்டாம். கலகலப்பான அனுபவம் உண்டு.

**மீனம்:**



தொழில் ரீதியாக வரவேண்டிய கடன் மிகுதிகள் வரலாம். வீடு, மனை வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. அவசரப்பட்டு யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். மற்றவர்களுக்குத் தெரியாமல் ரகசியமாக சில காரியங்களைச் செய்வீர்கள். பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும். நல்லது நடக்கும்.

## அழைப்பு...



வெற்றிக்கான பரிசு:கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் மற்றும் அருட் தந்தை ஜெரோம் செல்வநாயகம், வித்தியாலய அதிபர் அருட் சகோதரி சகாயநாயகி வஸ்தியாம்பிள்ளை ஏனைய விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (201-325)

# நாடுமுழுவதும் அதிரடி சுற்றிவளைப்புகள் 5கோடி பெறுமதியான போதைவஸ்து மீட்பு

## சந்தேக நபர்கள் 85பேர் கைதாகினர்

கொழும்பு,டிசெ.1

கடந்த ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து இம்மாதம் 20 ஆம் திகதிவரையிலும் பொலிஸ் போதைப்பொருள் அழிப்புப் பிரிவினால் நாடளாவிய ரீதியில் அதிரடி சுற்றிவளைப்புக்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தேடுதல்களில் ஏறத்தாழ 5 கோடி ரூபா பெறுமதியான போதைவஸ்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் 85 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஐந்துபேர் இந்த நாட்டில் முன்னணி வகிக்கும் பிரபல போதைப் பொருள் வர்த்தகர்களே என்றும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்பட் டுள்ள போதை வஸ்துக்களின் விவரம் வரு மாறு:

ஹெரோயின் - 1 கிலோ 647 கிராம் 938 மில்லிகிராம், கஞ்சா- 31 கிலோ 234 கிராம், கஞ்சா சுருட்டுக்கள்-49, ஹஸிஸ்போதைவஸ்து-12கிலோ 545 கிராம், பாபூல்-7கிலோ 471 கிராம் 520 மில்லிகிராம் ஆகும்.

மேலும் போதைப்பொருள் அழிப்புப் பொலிஸ் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றிவளைப்புக்கள் காரணமாக சில போதைப்பொருள் வர்த்தகர்கள் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் மேலும் சிலர் தமது பிரதேசங்களிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாகவும் மேற்படி பொலிஸ் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-22)

# எண்ணம் இருப்பது எங்கே?



''அப்பா! உங்களை ஒரு சிந்தனையாளர் என்று ஊரிலே பேசுகிறார்கள்.''

''ஆமாம்.. அதில் என்ன சந்தேகம் உனக்கு?''

''இல்லை! எனக்கு இப்ப சந்தேகமே வேறு.''மனசு என்று சொல்லுகிறார்களே அது என்ன? எங்கே இருக்கிறது?''

''எண்ணத்தைத் தவிர மனம் என்று ஒன்றும் தனியா இல்லை. எண்ணங்கள் தோன்றுகின்ற இடத்தைக் கற்பனை செய்துகொண்டு அதையே 'மனம்'என்கிறோம். மனம் என்ற ஒன்றைப் பார்க்க முடியாது.'மனம்' இல்லை என்ற இயல்பான நிலையை உணர்ந்து அடங்கினால் சாந்தி உண்டாகும்.''

''அடே யப்பா''

''அவசரப்படாதே! மனம் என்பது பொய், மாயம். ஆகையால் மெய்யோடு பொருந்திய யோகி அந்த மனத்தின் வசப்படாமல் தனிமரமாய் நிற்பான்.''

''அற்புதமான விளக்கம், இது உங்கள் சொந்த சிந்தனையா?''

''இது என்னுடையதல்ல இராமனுடைய சிந்தனை... இதைப்பற்றி நாமும் சிந்திக்க வேண்டும். சிந்தனை என்பது மனிதனுக்கு ஒரு மகத்தான சக்தி. ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்திக்க வேண்டும்!''

''அது சரி சுயமாக சிந்திக்கிறது என்றால் என்ன அப்பா?''

''கொஞ்சம் இரு... உன் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்!''

**கோ.சுவாமிநாதன்.**

# கடவுளை அடைவது எப்படி?

ஞானக்குரு ஒருவருக்கு பல சீடர்கள் இருந்தனர். அதில் ஒரு சீடர், ''குருவே கடவுளை எத்தனை முறை தியானித்தாலும் தொடர்ச்சியாக நிலை நிறுத்த முடியவில்லை. தியானம் குழம்பி கடவுள் காணாமல் போகிறாரே ஏன்? கடவுளுக்குநம்மீது கருணை இல்லையா? மனதால் கடவுளை முழுதாக நிலை நிறுத்த முடியாதா? அல்லது அது அவசியம் இல்லையா?'' என்று பல கேள்விகளை எழுப்பினார்.

அப்போது இரவு உணவுக்காகக் கோதுமை மா வைத்துக் கொண்டிருந்த குரு சல்லடையை அவனிடம் நீட்டி ''போ, உன் நண்பர்களுடன் இந்த சல்லடையை எடுத்துக் கொண்டு போய் நீரால் நிரப்பிக்காட்டு'' என்று உத்தரவிட்டார். சீடர்கள் சல்லடையை நீரால் நிரப்ப பல முறை முயற்சித்தும் தோற்றுப் போனார்கள்.

அப்போது கடவுளை நினைவில் நிறுத்துவதும் சல்லடையை நீரால் நிரப்புவதும் இயலாத காரியம் என்பதை மறைமுகமாக குரு தமக்கு உணர்த்துகிறார் என்று நினைத்தனர்.

குருவிடம் வந்து ''குருவே சல்லடையில் நீரை நிரப்பவே முடியாது. அப்படியே கடவுளையும் மனதில் நிலை நிறுத்தவே முடியாது'' என்பதை உணர்ந்து கொண்டோம் என்றனர். உடனே சல்லடையை சீடர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்ட குரு, ''இந்தச் சல்லடையை நான் நீரால் நிரப்பி விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்...? என்ன புரிந்து கொள்வீர்கள்...?'' என்று கேட்டார்.''இல்லை குருவே, சல்லடையை நீரால் நிரப்புவது இயலாத காரியம்'' என்றார்கள் சீடர்கள்.



பக்கத்தில் இருந்த தண்ணீர் தொட்டிக்குள் சல்லடையை மூழ்கடித்தார் குரு. சல்லடைக்கு உள்ளும் வெளியிலும் தண்ணீர் நிரம்பி இருந்தது. சீடர்களைப் பார்த்துக் குரு ''இப்போது என்ன சொல்லுகிறீர்கள்... என்ன புரிந்தது?'' என்றார்.

இறைவனை நம்முள் நிரப்பும் எல்லா முயற்சியும் தோல்வியில் முடியும். நமது ஒன்பது ஓட்டைகள் வழியாகவும், இறைவன் வெளியேறி விடுகிறார். அதற்கு மாறாக இறைவனுக்குள் நம்மை வைத்து விட்டால் உள்ளும் வெளியிலும் இறைவனே நிரம்பி இருக்கிறார்.

கடவுள் என்ற பெயரே அப்படி வந்ததுதான். கட- கடந்து - உள்- உள்ளிருப்பது. ஆகவே கடந்தும் உள்ளும் இருப்பது இறையால் மட்டுமே முடியும். இறையாற்றலுக்குள் அமிழ்ந்து விடுதலே இறையை நிரப்பும் முறையாகும்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் நோயாளிகளும் மனிதர்களே!

20ஆம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியிலிருந்து உலகை ஆட்டிப் படைக்கும் பயங்கர ஆட்கொல்லி நோயாகவே எய்ட்ஸ் இனங்காட்டப்பட்டது. இந்த கொடிய நோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை இன்றுவரை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே செல்கிறது. அதேநேரம், அனைத்து நாடுகளும் இந்நோயின் பாதிப்பிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்தபோதிலும்கூட, இந்த நோயை பூரணமாகக் கட்டுப்படுத்த இன்றுவரை எந்தவித கண்டுபிடிப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

தென்னாபிரிக்காவே உலகிலேயே அதிகளவில் எச்.ஐ.வி. நோயாளிகளைக் கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன.

எய்ட்ஸ் கொடுமையின் புதிய முன்னரங்க நிலையமாக ஆசியா விளங்குகிறது என்ற ஐ.நாவின் அறிவிப்பும் உலகில் எய்ட்ஸினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ள இரண்டாவது நாடாக எமது அயலகமான இந்தியா (தமிழகத்தில் 1.6 லட்சம் எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்) இருக்கிறது என்ற உண்மையும் இலங்கையர்களாகிய நாம் வெறுமனே செய்தியாக நோக்கிவிட்டு அலட்சியம் செய்யக் கூடியவையல்ல என்பதை உணர்ந்து கொள்ளத் தவறக்கூடாது. எய்ட்ஸ் பரவும் பேராபத்தில் இருந்து தப்பிப்பிழைத்ததாக இன்று உலகில் எந்தவொரு நாடுமேயில்லை.

பல மில்லியன் உயிர்களை காவு கொண்டுள்ள இக்கொடிய நோயைப் பற்றிய முழு விவரங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது கால்த்தின் தேவையாகும். அவ்வாறு முழுமையாக அறிந்து கொண்டு விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே எய்ட்ஸ் அரக்கனை வெல்ல முடியும்.

இதுவரை அது இரண்டரைக் கோடிக்கும் அதிகமானவர்களைப் பலியெடுத்து விட்டது. எய்ட்ஸின் தொற்றுக்கு இலக்கான 4 கோடிக்கும் அதிகமானவர்கள் இன்று உலகில் இருக்கிறார்கள். தினமும் புதிதாக உலகில் 6 ஆயிரம் பேரை எய்ட்ஸ் தொற்றிக்கொண்டு வருகிறது.

இலங்கையில் முதல் எய்ட்ஸ் நோயாளி 1986 இல் பதிவானார். அவர் ஒரு வெளிநாட்டவர் ஆவார். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட முதலாவது இலங்கையர் 1987இல் இனங்காணப்பட்டார். நோய் இனங்காணப்பட்ட ஆரம்பகாலத்தில் எச்.ஐ.வி. தொற்றுடையோராக இனங்காணப்பட்ட பெரும்பாலானோர் வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தவராவர். எனினும் தற்போதைய எச்.ஐ.வி தொற்றுடையோருள் பெரும்பாலானோர் இலங்கையிலேயே தொற்றுக்கு ஆளானோராவர். தொற்றுகை அடைந்துள்ளவர்கள் குருதிச் சோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டோர் நாட்டின் சகல பிரதேசங்களிலும் பதிவாகியுள்ளனர்.

### இலங்கை நிலவரம்

| | | |
|---|---|---|
| எச்.ஐ.வி | : | 1285 |
| எய்ட்ஸ் | : | 332 |
| எய்ட்ஸ் மரணங்கள் | : | 216 |
| எச்.ஐ.வி தொற்றுடைய சிறுவர்கள் | : | 31 |

### யாழ். நிலவரம்

1) யாழில் இனங்காணப்பட்ட முதல் நோயாளி : 1993ஆம் ஆண்டு

2) மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 42

3) மொத்த இறப்புக்கள் 23

4) ஆண் : பெண் 3:1 (ஆ-30 : பெ-12)

தொற்றடைந்தோராக இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளோருக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ள விதம்:

* தாயிடமிருந்து குழந்தைக்கு.
* இரத்தம் (குருதி) பாய்ச்சல் மூலம்.
* ஒத்தபாலார், இருபாலர் பாலுறவுகள்.
* ஆண், பெண் பாலுறவுகள்.

எய்ட்ஸை உண்டாக்கும் எச்.ஐ.வி. வைரஸ் மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதியை தாக்குகின்றது. நிர்ப்பீடனத் தொகுதியில் உள்ள ரீ-ஹெல்பர் கலங்களையே (T-Helper Cell) இது முக்கியமாகத் தாக்குவதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். எச்.ஐ.வி. வைரஸ் தொற்றியிருக்கும் கலத்தில் பெருகிப் பின் அக்கலத்தை அழித்து வெளியேறுகிறது. வெளியேறிய வைரசுகள் மேலும் பல கலங்களைத் தாக்கி அழித்துப் பெருகுகின்றன. இவ்வாறு நோயாளி யின் நிர்ப்பீடனத் தொகுதி பெரிதும் பாதிக்கப்படும். இந்நிலையிலேயே நோய்க்கான அறிகுறிகள் தோன்ற ஆரம் பிக்கிறது.





**பல மில்லியன் உயிர்களை காவு கொண்டுள்ள இக்கொடிய நோயைப் பற்றிய முழு விவரங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அவ்வாறு முழுமையாக அறிந்து கொண்டு விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே எய்ட்ஸ் அரக்கனை வெல்ல முடியும்.**

ஒருவர் எச்.ஐ.வியுடன் பல ஆண்டு காலம் வாழ முடியும். ஆனால், அவர் உடல் நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கும் போதுதான் எய்ட்ஸ் நோயாளியாகிறார். ஓர் ஆண்டுக்குள் ஏராளமான நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாக தொற்றிக் கொள்ளும் நிலை அவருக்கு ஏற்படுகிறது.

பாதுகாப்பற்ற முறையில் உடலுறவில் ஈடுபடும் போது நோய்த் தொற்றுள்ள ஒருவரிடமிருந்து நோய் இல்லாத ஒருவருக்கு தொற்றிக் கொள்ளும் நோய்களே பாலியல் தொற்று நோய்கள் எனப் படுகின்றன(Sexually Taransmitted diseases) அதாவது பாலியல் உறவினால் தொற்றக்கூடிய நோய்கள் பாலியல் தொற்றுநோய்கள் எனப்படுகின்றன.

இந்த நோய்கள் பாலியல் தொடர்புக்கு அப்பால் வேறு முறைகள் மூலமும் தொற்றிக் கொள்ளலாம்.

### பாலியல் தொற்று நோய்கள் கடத்தப்படக்கூடிய முறைகள்

* தொற்று அடைந்த ஒருவருடன் பாதுகாப்பு அற்ற முறையில் உறவில் ஈடுபடுதல்
* தொற்று அடைந்த ஒருவரின் குருதியை பாய்ச்சும் போது
* தொற்றுள்ள ஒருவருக்கு பயன்படுத்திய ஊசியை கிருமியழிக்காது மற்றவர்கள் பாவித்தல்
* பச்சை குத்துதல்
* அக்குபங்க்ச்சர் முறையில் ஊசியை கிருமியழிக்காது பயன் படுத்துதல்
* தாய்ப்பாலின் ஊடாக
* கருப்பையில் இருக்கும் குழந்தைக்கு இரத்தம் மூலமாக.

### ஆபத்தை கொண்டுள்ளோர் யார்?

எந்த ஒருவரும் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாக இடமுண்டு. இனம், மதம், செல்வநிலை, சமூக அந்தஸ்து போன்ற எதுவும் இதற்கு விதிவிலக்கானதல்ல. ஆள்களின் ஆரோக்கிய நிலையும் கூட தொற்றில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. எந்த ஒருவரதும் பாலியல் நடத்தையே எச்.ஐ.வி. தொற்றை ஏற்படுத்தும் பிரதான காரணியாகக் கொள்ளப்படுகிறது.

1) வர்த்தக ரீதியில் பாலியல் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் ஆண்களும் பெண்களும்

2) ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் தொடர்புகளை வைத்திருப்போர்.

3) தன்னின உறவில் ஈடுபடுவோர்.

4) பாலுறுப்புக்களில் புண்கள் தழும்புகள், காயங்கள் உடையோர்.

5) பாலியல் தொடர்புகள் மூலம் கடத்தப்படும் ஏனைய நோய்களுக்கு ஆளாகியுள்ளோர்.

மேலும் நாளத்தினூடாகப் பகிர்ந்து பரிமாறியவாறு போதைப் பொருள்களை ஏற்றிக் கொள்வோருக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ள தாய்க்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படத்தக்க சந்தர்ப்பம் பெருமளவுக்குக் காணப்படுகின்றது.

எச்.ஐ.வி தொற்றியோருடன் சாதாரணமாக சமூக பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதனூடாகவோ, கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல், விளையாடுதல், புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகளில் பயணம் செய்தல், வியர்வை, கண்ணீர், சிறுநீர் மற்றும் முத்தமிடல் மூலமாகவோ, பொதுக்கழிப்பறைகள் மற்றும் படுக்கை, அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலமாகவோ, நீச்சல் குளம் மற்றும் இருமல், தும்மல், கொசுக்கடி மூலமாகவோ பரவாது. இருப்பினும் பொது இடங்களில் சவரம் செய்து கொள்ளும் ஆண்கள் பொதுக் கத்திகளைப் பயன்படுத்தாமல் புதிய சவர அலகுகளை பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மத்தியிலே எய்ட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவர்களாக இருப்பதால் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். நீங்கள் எப்படிபட்டவராக இருந்தாலும், எங்கு வாழ்கிறவராக இருந்தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் யுனிசெவ் கூட்டாக வெளியிட்டுள்ள கையேட்டில் தெரிவித்துள்ளது.

### எய்ட்ஸ் அறிகுறிகள்

எச்.ஐ.வி பாதிப்புக்குள்ளான பலரிடம் ஆரம்பநிலையில் அதற்கான அறிகுறிகள் தெரிவதில்லை. இருந்தபோதிலும் சிலரிடம் இது ஃப்ளு சுரமாக (காய்ச்சல்) வெளிப்படுகிறது. அதுவும் இந்த வைரஸ் மூன்று முதல் ஆறு வாரங்களுக்குப் பிறகே தெரிகிறது. இந்தத் தீவிர எச்.ஐ.வி பாதிப்பினால் ஏற்படும் உடல் நலக் குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, குமட்டல், வியர்வை (குறிப்பாக இரவு நேரங்களில் ) நடுக்கம், வயிற்றுப் போக்கு, நெறிகட்டுதல் (அக்குள், கழுத்து) போன்றறினைத் தோன்றுவிக்கின்றது. இந்த அறிகுறிகள் கூட எச்.ஐ.வீ தொற்றிய ஒரு சில நாள்களில் தெரிவதில்லை. மேலும் இது, ஆரம்ப நிலையில் வேறு ஏதோ ஒரு வைரஸ் என்று தவறாகவே இனங்காணப்படுகிறது. எனவே ஆரம்ப நிலையில் எச்.ஐ.வி தொற்றைக் கண்டு பிடிப்பது கடினமாகும்.

உடலில் உள்ள நோய் எதிர்ப்பு கலங்களான வெண் குருதித் துணிக்கை அனைத்தும் ஒன்றுதிரண்டு போராடத் தொடங்கும்போதுதான் எச்.ஐ.வியின் வேகம் சற்றுக் குறைகிறது. எச்.ஐ.வி தொற்றிக் தீவிரமான அறிகுறிகள் தெரிய பல வருடங்கள் ஆகின்றன. பெரியவர்களுக்கு எச்.ஐ.வீ தொற்றிய பிறகு அது வெளித் தெரிவதற்கு 10 வருடங்களுக்கும் மேல் ஆகிறது. எச்.ஐ.வி தொற்றோடு பிறக்கும் குழந்தைகளுக்கு அது தெரிய இரண்டு வருடங்கள் ஆகின்றன. இவ்வாறு அறிகுறிகள் தெரியாத நிலை மனிதருக்கு மனிதர் மாறுபடும்.

### எச்.ஐ.வி குருதிப் பரிசோதனையை செய்து கொள்ள வேண்டியோர் யார்

* தமது பாலியல் நடத்தைகள் தொடர்பாகச் சந்தேகம் எவருக்கேனும் ஏற்பட்டால்.

**வருடாவருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

* ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்று ஏறபட்டுள்ளதாக வைத்தியர் சந்தேகப் படுவதாக இருந்தால்.

தொழில் வாய்ப்புப் பெறுவதற்கோ வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறச் செல்வதற்கோ முன் தேவையாகக் கருதப்படும் பட்சத்தில்.

* பாய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப் படும் குருதி மாதிரி ஒவ்வொன்றிலும் எச்.ஐ.வீ தொற்றுக் காணப்படுகின்றதா என்பதை அறிதல்.

ஆகிய சந்தர்ப்பங்களில் குருதிச் சோதனைகள் செய்து கொள்ளல் வேண்டும்.

### குருதிச் சோதனையைச் செய்து கொள்ளக் கூடிய இடம் எது?

* பாலியல் தொடர்புகள் மூலம் கடத்தப்படும் நோய்கள் தொடர்பாகக் கிளினிக்குகளில் (பிணியாய் நிலையங்களில்)
* பொது வைத்தியசாலையிலும் ஆய்வு கூடங்களிலும்.

இரத்த வங்கியில் (பாய்ச்சலுக்காகப் பெறப்படும் குருதி மாதிரிகள் யாவும் சோதிக்கப்படும்)

### சிகிச்சை முறை

எச்.ஐ.வி. தொற்றைப் பூரணமாகக் குணமாக்கத்தக்க எந்த மருந்தும் இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் தொற்றடைந்தோரை ஆரோக்கியமாக வைத்திருக்கத்தக்க மருந்து வகை தற்போது பயன்பாட்டில் உள்ளன. இவை ரெட்ரோ வைரசுக் கொல்லி (Antiretroviral Drugs) மருந்துகள் எனப் படுகின்றன.

எய்ட்ஸ் நோய் தொற்றுதலுடன் உயிர் வாழ வழமையாக எதிர்வு கூறப்படும் காலத்தை விட எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி வைரசுக்கு எதிராக வழங்கப்படும் 'Antiretroviral' சிகிச்சை களைப் பெறுவோர் சராசரியாக 13 ஆண்டுகள் அதிக காலம் வாழ முடிகின்றமை ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

---

வைத்திய கலாநிதி
கு.கணேசலிங்கம்
பாலியல் தெற்று நோய்கள் கிளினிக்,
போதனா வைத்தியசாலை.

---

எச்.ஐ.வி. எய்ட்ஸ் பரவுவதைத் தடுக்க தற்போது இருக்கும் ஏ.பி.சி. திட்டம் மிகவும் பிரபலமான ஒன்று. அதாவது, ஏ} திருமணத்திற்கு முன் பாலுறவைத் தவிர்த்தல் பி} திருமணற்குப் பின் உண்மையாயிருத்தல் சி} – இரண்டும் முடியாத பட்சத்தில் ஆணுறை அணிதல். இவை பார்ப்பதற்கு மிகவும் எளிதாகவும், பயனுள்ளவையாகவும் தோன்றினாலும் நடைமுறையில் பல சிக்கல்களையும் தத்துவ தர்க்கங்களையுமே இது கொண்டுவர வல்லது. இது ஓரளவிற்குக் கட்டுப்படுத்தும் ஆரம்பகட்ட முயற்சியாக இது உதவுகிறதே தவிரே இதுவே முடிவான தீர்வு அல்ல.

### எய்ட்ஸ் நோயாளிகளும் மனிதர்களே!

எய்ட்ஸ் நோயாளிகள் சமூகத்தின் பார்வையில் பொதுவ்வாக வேண்டப் படாதவர்களாகவே கருதப்படுகின்றனர். இது தவறு. ஒரு எய்ட்ஸ் நோயாளியைப் பொறுத்தமட்டில் தகாத பாலுறவால் மாத்திரம் நோயைப் பெற்றிருப்பார் என் கூறமுடியாது. சில சந்தர்ப்பங்களில் அத்தகைய பழக்கங்கள் இல்லாதவர் களும் கூட அவர்களை அறியாத சந்தர்ப்பங்களிலும் இந்நோய் தொற்றலாம். எனவே எய்ட்ஸ் நோயாளிகளை சாதாரண மனிதர்களாக கருதி அவர்களுக்கு உரிய உரிமைகளைகளையும், சலுகைகளையும் வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 29.03.1956
இறப்பு: 05.12.2007

## அமரர் கா. குலசிங்கம்
(செந்தா பஸ் உரிமையாளர்)
திதி: ஏகாதசி

நம் வாழ்வில் ஒளியேற்றி
வார்த்தைகளில் அடக்கமுடியாத வாழ்வாகி
தெய்வமான நின்னை
ஒவ்வொரு கணமும்
நினைந்து வணங்குகின்றோம்.

மனைவி : புவனேஸ்வரி
பிள்ளைகள் : நித்திலா, நிஷானி, அனுஜன்
மருமக்கள் : சபேசன், முகுந்தன்
பேரப்பிள்ளைகள்: சியானுஜா, தீபிகா.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (106393)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு
புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (106386)

### விற்பனைக்கு
1½ வயது நல்ல இனமுடைய யமுனா பாரி இன ஆட்டுக்கடாய், வைக்கோல் 1 லோட் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778737384

### கோழிக்குஞ்சு விநியோகம்
தரமான No. 1, புறொயிலர் குஞ்சுகள் (நியாயமான விலையில்) 6.12.2010 அன்று காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

### மணமகள் தேவை
சைவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய கொழும்பைப் பிறப்பிடமாகவும், லண்டனில் P.R உள்ளவரும், உயரம் 5'4" உடைய வருமான மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:- 0213006920
(பி.ப.5 மணி-இரவு 8 மணிவரை)
பலாலி வீதி, கோண்டாவில்.

### விற்பனைக்கு
யாழ்.பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியில் இரு வீடுகள் உடனடி விற்பனைக்குண்டு. கச்சேரி, பழைய பூங்கா வீதியில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
யாழ்.கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதியில் கடைகள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
கனகசபை தர்மகுலசிங்கம்,
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
0774306629

### கோழிக் குஞ்சு விநியோகம்
தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில், நம்பிக்கையாகப் பெற்றிட நாட வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்
**(Mafa Farm House)**
தொடர்புகளுக்கு
0773657008, 0773760445.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. ஆகக் கூடிய சில்லறை விலை - 110/- உடன் தொடர்புகொள்ளவும். (106512)

### வடமராட்சியில் வெங்காயம் விலை உயர்வு
வடமராட்சிப் பகுதியில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. காலபோக வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனாலேயே வெங்காயத்திற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஒரு அந்தர் வெங்காயம் மூவாயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது 5ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயம் 130 ரூபா முதல் 140 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (204-236)

# நினைவஞ்சலி

20 ஆம் ஆண்டு 1 ஆம் ஆண்டு



திரு.சபாபதிப்பிள்ளை நாகராசா
தோற்றம்: 19.09.1919
உதிர்வு: 14.12.1990

திருமதி நாகராசா தாட்சாயனி
தோற்றம்: 06.12.1931
உதிர்வு: 01.12.2009

இறைவன் திருவடி சேர்ந்த எமது
குல விளக்குகளாகிய தங்கள் இருவரையும் மறவாமை
என்ற மனக்கோயிலில் வைத்து மண வாழ்விலும்
மரணத்திலும் மன மொத்த
தங்கள் மாட்சிமையை வியந்து அஞ்சலிக்கின்றோம்.

பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## இரத்தினம் தங்கவேலாயுதம் (காந்தி)
(ஓய்வுபெற்ற சாரதி, இலங்கை போக்குவரத்துச் சபை)

தோற்றம் 21.04.1938
மறைவு 10.12.2009



அன்புத் தெய்வமே-எங்கள் அப்பா
ஆண்டு ஒன்று கழிந்தாலும்
ஆறவில்லை எம்மனது
ஏக்கத்துடன் கலங்கவிட்டு
ஏனப்பா சென்றீர்கள்?
பாசத்துடன் வளர்த்துவிட்டு
பாரைவிட்டு சென்றீர்கள்
பாவிகள் நாம் தவிக்கின்றோம்
குறையேதும் இல்லாத நிறைகுடமே
நீங்களப்பா-இறைவன்
குறைவைக்க எண்ணியதால்
ஆயுளைத்தான் குறைத்தானோ,
காலம் தானிருக்க-எம்மைக்
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு
விண்ணோடு சென்றீர்கள்
வேதனையில் தினம் வாடுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01.12.2010) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

371/3, ஆடியபாதம் வீதி,
நல்லூர் சந்தை,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 17.09.1921
இறப்பு: 22.11.2000

## அமரர் அருணாசலம் ஆறுமுகம்
(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சமாதான நீதிவான்)

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமையெல்லாம் உருவாக்கி
வாழ்வதற்கு வழிவகுத்த ஐயாவே!
உங்களைப் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆனாலும் என்றென்றும்
உங்களது ஆசியுடன் வாழ்ந்திடுவோம் வையகத்தில்

'ஜெயபதி',
தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
பிரிந்து வாடும் குடும்பத்தினர். (104500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்டத்தில் அடைமழை; விவசாயம் பாதிப்பு

திருகோணமலை, டிசெ.1

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து அடைமழை பெய்துவருகிறது. இதன் விளைவாக தாழ்நில பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

கடும் மழையால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களும் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதேவேளை மூதூர் கிழக்குப் பிரதேசத்திலிருந்துஇடம்பெயர்ந்து கிளிவெட்டி, மணற்சேனை, கட்டைபறிச்சான் ஆகிய பகுதிகளில் வசித்துவரும் 1530 க்கும் மேற்பட்ட குடும்பங்கள், அடைமழையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன என




கடந்த இரண்டு தினங்களாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று வந்துள்ள மூதூர் இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மழையால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளை அரசால் அங்கீகரிக்கப்படாத பகுதிகளாகவே அரச அதிகாரிகள் நோக்குகின்றனர். அதனால் பாதிக்கப்பட்ட மக்களையோ, இடங்களையோ அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வந்து பார்க்கவில்லை என்றும் குமாரசாமி நாகேஸ்வரன் கவலை தெரிவித்துள்ளார்.

அரசு அங்கீகரிக்காத இடங்களில் தாங்கள் தங்கியிருப்பதால் ஜனவரி மாதம் முதல் தங்களுக்கு உலக உணவுத் திட்டம் நிறுத்தப்படும் என அரச அதி காரிகள் தெரிவித்துள்ளனர். முகாம்கள் கலைக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்றும் குமாரசாமி நாகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

## கண்ணிவெடிகள் அகற்றும் பணி முடிவடைந்தும் கஞ்சிகுடிச்சாறில் மீள்குடியமர்வு இல்லை

அம்பாறை, டிசெ.1

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சி குடிச்சாறு, தங்க வேலாயுதபுரம் ஆகிய இடங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் யுத்த சூழ்நிலையால் அங்கிருந்து வெளியேறிய குடும்பங்கள் இதுவரை மீள் குடியேறப்படவில்லை என அக் குடும்பங்களைச் சேர்ந்த பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தளங்கள் அமைந்திருந்த பகுதிகள் எனக் கருதப்படும் கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் 2006ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலையால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி திருக்கோவில் பிரதேச்த்தில் குடியேறின. இக்குடும்பங்கள் அது முதல் தற்காலிக இருப் பிடங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளன.

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில், சொந்த இடங்களில் மீள்குடியேற இம் மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆனால் அதிகாரிகளிடம் அந்த ஆர்வம் கிடையாது என கஞ்சிகுடிச்சாறு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரான நல்லதம்பி மகேஸ்வரன் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த தமது கிராம மக்கள் 2003 இல் மீகுடியேறி, மீண்டும் 2006இல் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்நிலையில் விவசாய பயிர்ச் செய்கைகளுக்காக தற்போது சென்று வர மாத்திரம் தங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான செல்வராஜா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வாராந்த உலர் உணவு நிவாரணம் கூட தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. இது தொடர்பாக அதிகாரிகளிடம் பல தடவைகள் தொடர்புகொண்டோம். ஆனால் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி பூர்த்தியடைந்துள்ளது என இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தனக்கு அறிவித்துள்ளனர் எனக் கூறும் திருக்கோவில் பிரதேச செயலாளர் வீ.அழகரத்தினம், மீள் குடியேற்றம் தொடர்பாக அரச அதிபரின் பணிப்புரைக்காகத்தான் காத்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதன் காரணமாகவே இவர்களுக்கான வாராந்த நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆரையம்பதி மத்தியஸ்த சபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

மட்டக்களப்பு, டிசெ.1

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மத்தியஸ்த சபையின் புதிய உறுப்பினர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஆரையம்பதி பிரதேச மத்தியஸ்த சபையின் தலைவர் ராமச்சந்திரன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி வி.ராமகமலன் உட்பட மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். ஆரையம்பதி மத்தியஸ்த சபையின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்பது உறுப்பினர்களுக்கும் இதில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

## கிண்ணியாவில் விரைவில் தொழில்நுட்பக் கல்லூரி

திருகோணமலை, டிசெ.1

கிண்ணியாவில் பாரிய தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று விரைவில் அமைக்கப்படும். அங்கு விஜயம் செய்த இளைஞர் விவகாரதிறன் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவிற்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்த அமைச்சர், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வேண்டுகோளுக்கிணங்க, தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க உடன்பாடு தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவிற்கு விஜயம் செய்த அமைச்சரும் அவரது குழுவினரும் இத்தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கிண்ணியா பிரதேச செயலகத்தில் புள்ளி விவரத் தகவல்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் அது குறித்து திருப்தியும் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் உதவியுடன் நடு ஊற்றில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்படுவதற்கான காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் அவ்விடத்தில் இதனை அமைப்பதற்கு திருப்தி தெரிவித்துள்ளார். (ளி)

## 'பட்ஜெட்' நன்மைகளை தொழிலாளருக்கு பெற்றுத்தர தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### இ.தொ.ஐ.மு. தலைவர் சதாசிவம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.1

வரவு - செலவுத் திட்டத்தில் தனியார் துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள வரப்பிரசாதங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கும்கிடைக்கும்வகையில் தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின்தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தைக் காரணம் காட்டி அவர்களின் சம்பள உயர்வு, வாழ்க் கைச் செலவுக் கொடுப்பனவு போன்றவை கிடைக்கப் பெறாமல் இருப்பதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது.

எனவே, வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு 5 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது. இதனைப் போன்று தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் அவர்களுக்கு அரசு வறுமை நிவாரணங்களை வழங்க வேண்டும் - இவ்வாறு சதாசிவம் தெரிவித்தார். (ளி)







மங்களம்:கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற சிறுவர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கண்டி மாநகர மேயர் ராஜா புஷ்பகுமார மங்கள விளக்கேற்றுகிறார். மாநகர சபை அங்கத்தவர் எஸ்.சிவஞானம் உரையாற்றுகிறார்.

### தம்புள்ள மாவட்ட வைத்தியசாலையில்

## ஓர் இதயத்துடன் ஒட்டிப் பிறந்த இரு ஆண் குழந்தைகள் மரணம்

தம்புள்ள, டிசெ.1

தம்புள்ள மாவட்ட வைத்தியசாலையில் தாயொருவருக்கு, ஓர் இருதயத்துடன் ஒட்டிப் பிறந்த இரு ஆண் குழந்தைகள் பிறந்து சில மணித்தியாலங்களில் இறந்துவிட்டன என வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எம்.இக்பால் தெரிவித்தார்.

35வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவர் நான்காவது பிரசவத்திற்காக தம்புள்ள மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இந்த இரு ஆண் குழந்தைகளையும் பிரசவித்துள்ளார். இக்குழந்தைகளை டாக்டர்கள் பரிசோதனைக்குட்படுத்தியபோது குழந்தைகள் இருவருக்கும் ஒரு இதயமே காணப்பட்டது.

இக்குழந்தைகளை உடனடியாகக் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

எனினும் அதில் ஒரு குழந்தை இறந்துவிட்டது. சற்றுநேரத்தில் மற்றக் குழந்தையும் இறந்தது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தைகளைப் பிரசவித்த தாய் நலமுடன் இருக்கிறார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி மாத்தளையில் வீட்டுத் தோட்டங்கள்

கொழும்பு, டிசெ.1

அடுத்த வருடம் மாத்தளை மாவட்டத்தில் இயற்கை உர வகைகளைப் பயன்படுத்தி 10,000 வீட்டுத் தோட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை செயற்படுத்த மாத்தளை மாவட்டத்திலிருந்து 10,000 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என பேராதனை கண்ணொருவ விவசாய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் எம். ஆர். எஸ். முஹாந்திர தெரிவித்துள்ளார். மாத்தளை செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்திக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

எமது நாட்டில் இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் இரண்டாவது மாவட்டமாக மாத்தளை இனங்காணப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்வது தொடர்பாக மாத்தளை மாவட்ட விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளன.

இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கூடுதலான அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும். வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் ஒரு சதமேனும் செலவிடாமல் இயற்கை உரங்களை உற்பத்தி செய்துகொள்ள முடியும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் விவசாயிகளுக்கு இது சம்பந்தமாக விளக்கமளிக்கவுள்ளோம்.

எமது நாட்டில் விவசாயத் துறையை மேம்படுத்த பணம் செலவிட வேண்டியதில்லை. நமது முன்னைய விவசாயிகள் கடைப்பிடித்த வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் விவசாயத் துறையை தன்னிறைவு பெறச் செய்யமுடியும் - இவ்வாறு முஹாந்திர குறிப்பிட்டார்.(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின்ஊடக முன்னோடி உதயன்
நன்றிக்குரிய ஆசிரியர்
ஆர்.நந்தகுமார்,
றோயல் கல்வி நிலையம்,
கொழும்பு.
தொ.பே: 071-5147498

G.C.E.(O/L) விசேட வலம் 2

## தகவல் தொழில்நுட்பம் I — 1 மணித்தியாலம்

01. பின்வருவனவற்றில் தகவலின் இயல்புகளில் ஒன்றாக கருதப்படுவது.
   1) கால வரையறை. 2) நேரம்.
   3) வேகம். 4) திருத்தம்.

02. பின்வரும் கூற்றுக்களில் தரவு என கருதக்கூடியது எது?
   1) கமலின் உயரம் "5" 2) காலநிலை அறிக்கை.
   3) சிவாவின் சராசரி புள்ளி 20 4) சபரியின் பாட புள்ளிகள்.

03. ENIAC என்ற கணினியை கண்டுபிடித்தவர்,
   1) Charles Babbage (சார்ல்ஸ் பபேஜ்)
   2) Herman Hollerith (ஹேர்மன் ஹொலரித்)
   3) J.P ECKRT and Mauchy (எக்கோட், மௌச்சி)
   4) Jacquard Loom (ஜெக்குவார்ட் லூம்)

04. $FB_{16}$ இன் Hexa Decimal எண்ணிற்கு சமமான OC + al யாது?
   1) 10101010 2) 11011000 3) 11111011 4) 11101111

05. சிவதாஸ் என்பவர் தனது தந்தையின் பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த் தட்டை ஒன்றை தயார்செய்து அதனை மின்னஞ்சல் மூலம் அனுப்புகிறார். இவ் வாழ்த்துட்டையைத் தயார்செய்யப் பயன்படுத்தக்கூடிய மென்பொருள் யாது?
   1) Adobe Photoshop 2) MS - Word
   3) Photo Deluxe 4) Corel Draw


06. TCP/ IP என்பது,
   1) Transmission control protocol / Internet protocol
   2) Trade control programe
   3) Tramp control programe / Internet protocol
   4) N/A

07. A, B என்னும் வேறுபட்ட இடங்களில் இருக்கும் இரு வலையமைப்பினை இணைப் பதற்காக உதவும் வலையமைப்பு யாது?
   1) FTP 2) USB 3) LAN 4) WAN

08. MS - Accessஇல் தகவல்களைப் பெற உதவும் option யாது?
   1) Form 2) Table 3) Query 4) N/A

09. பின்வருவனவற்றுள் எது Application Software எனக் கருதப்படக்கூடியது,
   1) MS - DOS 2) LInux 3) MS-Excel 4) PC-DOS

10. ஒரு வலையமைப்பில் உள்ள (Progra mmes) அத்தோடு தரவுகளையும் சேமித்து வைக்கக்கூடிய கணனியை ........ என அழைக்கலாம்.
   1) Node 2) Server 3) Switch 4) Computer

11.



மேற்குறிப்பிட்ட Logic Circuit இன் வெளியீடு X ஆனது,
   1) A + B + A 2) A. (A+B) 3) A.(A.B) 4) N/A

12. கீழேயுள்ள போலிக் குறிமுறை (Pseudo Code) இனால் பெறும் வெளியீடு யாது?

| | X | Y |
|---|---|---|
| x = 150 | | |
| Y = 10 | 150 | 10 |
| REPEAT | 141 | 9 |
| Y = Y - 1 | 133 | 8 |
| X = X - C | 126 | 7 |
| Until (Y > C) | 120 | 6 |
| Printx | 114 | |

   1) 120 2) 141 3) 114 4) 120

13. A.B எனும் குறியீடு குறிப்பது எது?
   1) NOR 2) XOR 3) AND 4) NAND

14. EDCDIC என்பது,
   1) Electronic Binary Coded Direct into Decimal.
   2) Electronic Basic Coding Digit in to Decimal.
   3) Extended Binary Coded Decimal Interchange Cods.
   4) மேலே குறிப்பிட்ட யாவும் இல்லை.

15. பின்வருவனவற்றுள் Real time Processing எனக் கருதப்படுவது எது?
   1) தொலைக்காட்சி நாடகம். 2) சம்பளக்கணக்கு.
   3) சுனாமி எச்சரிக்கை. 4) மேற்கூறிய யாவும் இல்லை.

16. பின்வருவனவற்றில் வெளியீட்டுக்கருவி எனக்கருத முடியாதது எது?
   1) Monitor 2) OCR 3) Printer 4) Speaker

17. MS - Wordஇல் ஒரு கடிதத்தை பல நபர்களுக்கு அனுப்ப உதவும் Option எது?
   1) Pivot table 2) Mail Merge
   3) View Document 4) N/A

18. SDLCஇல் வடிவமைக்கப்பட்ட ஒரு taskஐ கணினி மொழியில் எழுதும் முறை மையைக் கூறுவது,
   1) Design 2) Planning
   3) implementation 4) Software Development

19. 3ஆவது தலைமுறை நிகழ்ச்சி மொழிகள் ......... எனக் கூறப்படுவது,
   1) உயர்நிலை நிகழ்ச்சி. 2) கீழ்நிலை நிகழ்ச்சி.
   3) இடைநிலை நிகழ்ச்சி. 4) மேற்கூறப்பட்டவை இல்லை.

20. பின்வருவனவற்றில் மெய்நிலை அட்டவணைக்குரிய (Truth Table) தருக்கச் செய்பணி (logic Operation)

| A | B | X |
|---|---|---|
| 0 | 0 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 |

   1) OR 2) XNOR 3) XOR 4) AND

21. விசைப்பலகையை கணினியின் தொடர்புபடுத்த உதவும் துறை (Port) எது?
   1) Com 2) Ps/2 3) Parrellu 4) Joystick

22. கணினி வலையமைப்பில் உள்ள ஒரு அனுகூலம் எது?
   1) கணினியை வைரஸ் தாக்காது.
   2) ஒரே நேரத்தில் பலர் ஒன்றாக இணைந்து வேலையை செய்யலாம்.
   3) கணினியை செயலிலக்கச் செய்ய முடியாது.
   4) மேற்கூறிய யாவும் இல்லை.

23. PDA என்ற கணினி எவ்வகையைச் சார்ந்தது?
   1) Super Computer 2) Micro Computer
   3) Mini Computer 4) Main Frame Computor

24. விசைப்பலகை ஒன்றில் எத்தனை Keys உள்ளன.
   1) 103 2) 104 3) 105 4) 106

25. Rom எனும் நினைவகத்தின் சரியான கூற்றை விளக்குவது,
   1) தற்காலிகமாக நினைவில் வைத்திருக்கக் கூடியவை.
   2) இது தரவுகளையும், நிகழ்ச்சிகளையும் செய்முறை (Process) செய்யும்போது உதவும்.
   3) இது வாசித்தலுக்கு மட்டுமே உதவும்.
   4) மேற்கூறிய யாவும் சரியானவை.

26. மாணவர்களின் விவரங்களைச் சேமித்து, தேவையான நேரத்தில் அவ் விவரங்களைப் பார்க்க உதவும் மென்பொருளானது,
   1) MS - Word 2) Adobe Pagemaker
   3) MS - Excel 4) MS - Access

27. பின்வருவனவற்றில் எது Implementation method எனக் கூறக்கூடியது,
   1) Parrellel 2) User 3) Phased 4) Pilot

28. GUI இன் விரிவாக்கமானது,
   1) Graphical User Inter face
   2) Graph using Interncet
   3) Graphical utilitie Information 4) N/A

29. HTMLஇல் A(Anchior) எனும் குறியீட்டின் தன்மை எது?
   1) ஓர் இடத்திலிருந்து இன்னுமொரு இணையத்திற்கு செல்ல உதவும்.
   2) வேறு ஓர் இடத்தில் இருக்கும் இணையத்தளத்திற்கு எடுத்துச்செல்லும்.
   3) ஓர் இடத்தில் இருந்து வேறு ஒரு பகுதிக்கு அல்லது வேறு இணையத்தளத் திற்கு அழைத்து செல்லும்.
   4) மேற்கூறிய யாவும் சரி.

30. பின்வரும் கூற்றில் (Array Declaration)இல் உள்ள உறுப்புக்கள் எத்தனை?
   Dim names (6) as String
   1) 7 2) 6 3) 5 4) 12

31. பின்வருவனவற்றில் ஒரு புகைப்படத்தை HTMLஇல் பிரசுரிக்க உதவும் கட்டளை எது?
   1) SRC 2) IMG 3) IMG SRC 4) HRE F

32. MS Excelஇல் Print செய்வதற்கான Short cut key எது?
   1) ALT + Print 2) ACT + P 3) CTRL + P 4) C + TR + n

33.
```
Private Sub Command - Click
Static x as Integer
x = x + 1
End Sub
Private Sub Command 2 - Click
Dim x as Integer
x = x + 1
End Sub
```
   Command 1, Command 2 அழுத்திகளை மூன்று முறை அழுத்தும்போது இரண்டு அழுத்திகளில் உள்ள மாறிலிகளின் பெறுமதி யாது?
   1) 1, 1 2) 1, 3 3) 3, 1 4) M/V

34. Mark 1 எனும் கணினியை Ascc என அழைப்பர். Asccஇன் விரிவாக்கம் பின்வருவனவற்றுள் எது.
   1) Automatic System Coding Calculator.
   2) Automatic Sequence Coding Caleulator.
   3) Auto System Code Calculator.
   4) Automatic Sequence Controlled Calculator.

35. Monitor எனும் வெளியீட்டுக்கருவி எத்தனையாம் தலைமுறையில் கண்டுபிடிக்கப் பட்டது?
   1) முதலாம் தலைமுறை.
   2) இரண்டாம் தலைமுறை.
   3) ஐந்தாம் தலைமுறை. 4) ஆறாம் தலைமுறை.

(17ஆம் பக்கம் பார்க்க)

29.11.2010 - 18ஆம் பக்கத்தில் வெளிவரவேண்டிய தகவல் தொழில்நுட்பம் I இற்கான வினாத்தாள்களுக்குப் பதிலாக வரலாறு I, IIஇற்கான வினாத்தாள்கள் வெளிவந்துவிட்டது. சரியான வினாத்தாள் இங்கு வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் எதிரே மருதமரத்தில் தனது கூட்டினுள் சிட்டுக்குருவி நுழையும்போது பிற்பகல் சரியாக 6 மணி இருளாகி விட்டது. கூட்டினுள் இருந்தபடியே நேற்றைய நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றார் சிட்டுக் குருவியார்.... அருகே வாகனங்களின் இரைச்சல் சத்தம் ஓய்ந்து விட்டது. சிட்டுக் குருவியார் உறங்கி விட்டார். மெல்ல மெல்ல இருள் கலைந்து சூரியனின் ஒளிக் கிரணங்கள் மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியைப் பிரகாசிக்கச் செய்கின்றது. சிட்டுக் குருவியார் துயில் நீங்கிச் சுற்றுச் சூழலை ஒரு முறை வட்டமடித்துப் பார்க்கிறார். நேரம் காலை 7 மணி. நேரே சுப்பிரமணியம் பூங்காவை நோக்கிப் பறந்து செல்கின்றார்,....!

அங்கே நுழைவாயிலின் அருகே செவ்விளநீர் மரத்தின் ஓலையில் அமருகின்றார். காலைவேளையானதினால் புதினம் அதிகமில்லை, ஓரிரு ஓட்டோக்களும், சிறு பேருந்து ஒன்றும் அவ்வீதி வழியே செல்கின்றது. இங்கிருந்து பிரயோசனம் இல்லை. மாலை வேளையாயின் தென் இலங்கைச் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள், மாலையில் வந்து பார்ப்போம் எனக் கூறிக்கொண்டு அங்கிருந்து நேரே பஸ் நிலையம் நோக்கிப் பறந்து சென்று பூபாலசிங்கம் புத்தகசாலையின் எதிரே உள் ள வேப்பமரக் கிளை ஒன்றில் அமருகின்றார். நேரம் காலை மணி 7.30....

மரத்தின் கீழ் பத்திரிகை படித்துக் கொண்டு நின்ற சகாதேவனை நெருங்கி வந்த உத்தமபுத்திரன், என்ன அண்ணை இண்டைக்கு என்ன புதின மாம் என்று கேட்டார். அதற்கு அவர்... ''மஹிந்தர் ஒரு மாதிரி லண்டன் போட்டாராம். முன்னம் ஒருக்கா இந்தப் பயணத்தைப் பிற்போட்டவர். இப்ப என்னெண்டு போனார்?

... அவர் ஒக்ஸ்போட் பல்கலைக் கழக நிகழ்வு ஒன்றுக்குப் போறபடியாலை அவருக்கு அங்கை பாதுகாப்பு இல்லையாம். அவ ருக்கு அங்கை டென்மார்க் சட் டத்தரணியும், பிரித்தானிய தமிழ் அமைப்புக்களும் வழக் குப் போட்டிருக்கினம் போலை... அது மாத்திரமில்லை. இலங்கை யில் நடைபெற்ற போர்க் குற் றம் தொடர்பாக சுயாதீன சர்வ தேச விசாரணை தேவை எண்டு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், பிரித்தானிய நாடாளு மன்றத்தில் சொல்லி இருக்கி றாராம். அதாலதான் அவர் முன் னம் அங்க போகாம விட்டவ ராம். ஆனால் இப்ப தான் லண்டனுக்கு வந்தா கைதுசெய்யிறத்துக்கு நடவடிக்கை எடுக்காமல் தடுங்கோ என்று பிரிட்டிஷ் மகாராணியாருக்கு கடிதம் ஒன்றை எழுதிப் போட்டுத்தானாம் இப்ப போயிருக்கிறார். தான் போறத்துக்கு முன்னால நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவை அங்க அனுப்பி ஏதும் பிரச்சினை வருமோ என்றதுகளை 'செக்' பண்ணிண பிரச்சினை இல்லை என்று அறிந்ததற்குப் பிற்பாடுதான் இஞ்ச இருந்து வெளிக்கிட்டவராம். அதுவும் திட்டமிட்டதற்கு அரை நாள் முன்பாகவே கிளம்பிப் போயிட்டாராம். திட்டமிட்டபடி போனால் தமிழ்ச் சனம் கண்டபடி எதிர்க்கும் எண்ட பயத்திலதான் அப்படி நடந்தது என்றும் சொல்லுகினம்.

காலம் மாறிப் போகுது. வாடைக் காத்துக்கு, இந்த நாளையிலை யாழ்ப்பாணத்திலை மழை பெய்யிறதுதான் வழமை. வழமை மாறித் தெற்கில் பொழிஞ்சு தள்ளுது பாத்தியே. கடவுளுக்கும் பொறுக்க இல்லைப் போலை என்று சகாதேவன் கூறியதும், ஓம்... ஓம்... முந்தி ஒருக்கா 'கோல் பேசிலை' வெற்றி விழாக் கொண்டாட ஆயத்தப்படுத்திப் பெருஞ்செலவுகள் செய்யேக்கையும் திடீரென்று பெரு மழை கொட்டி நிகழ்ச்சிகள் எல்லாத்தையும் பின்போட்டவை தெரியுமோ?.... அது மாதிரி இதுவும் காத்து மாறி நிக்குது. பொறுத்திருந்து பார்ப்போம் என்றார் உத்தமபுத்திரன்.

சரி சரி எனக்கு நேரமாச்சுது எனச் சகாதேவன் கூறியதும் இருவரும் அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றனர்.

சிட்டுக் குருவியாரும் சந்தைப் பக்கம் போய்ப் பார்ப்போமென யாழ். சந்தையை நோக்கிப் பறந்து சென்று சந்தையில் வெற்றிலைக் கடை ஒன்றின் முன் ஒரு மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்தார்.

...விரதம் விரதம் எண்டு இப்ப கொஞ்ச நாளாக ஒரே மரக்கறிதான். இண்டைக்கு நான் மீன் வாங்கிக் குடுத்திட்டு வந்தனான். இப்ப இதில மரக்கறி வாங்கப் போறன். நீங்கள் எங்கே போறியள் என்று விநாயகமூர்தியைக் கேட்டார் சுப்பிரமணியன்... நானும் அப்படித்தான் இண்டைக்கு நீ வீட்டவாவென். நான் மற்றதும் எடுத்து வச்சிருக்கிறன். எனக் கூறிய விநாயகமூர்த்தி, ஒரு புதினம் தெரியுமே நான் பேப்பரில பார்த்தனான். யு.என்.பி.-எம்.பி ஒருத்தர் சொல்லியிருக்கிறார், 'விபச்சார விடுதிகளுக்குச் சட்டப்படி அனுமதி கொடுக்கப் போகிறதாம் அரசாங்கம் என்று. அப்படியென்றால் இந்தியாவில் சிவப்பு விளக்கு மாதிரி இஞ்சையும் வரப்போகுது போல என்றார்.

அட சனியனே அப்படியெண்டால் அந்த நாளிலை கோதாரி நோய், கொள்ளை நோய், வெள்ள அழிவு, புயல் மழை, கொலறா நோய்களிலை சனம் செத்தது போல, எல்லாம் எய்ட்ஸ் வந்து சங் கடப் படப் போகினம் என்றார் சுப்பிரமணியன்.

நாடு போகிற போக்கில இயற்கை அழிவுகள் ஒரு பக்கம், அதைவிடப் புதுப் புது நோய் பிணிகளும் மனுசனைக் கொல்லுது எனக் கூறியவாறு நகர்ந்து சென்றார் விநாயகமூர்த்தி.

இச்செய்திகளைச் செவிமெடுத்த சிட் டுக்குருவியார் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைப் பக்கமாகப் பறந்து சென்று அங்கேயுள்ள சிற்றுண்டிச்சாலையின் முன் தேக்கு மரத்தின் கீழ் நின்ற மோட்டார் சைக்கிள் கண்ணாடியில் அமருகின்றார்....

சுடுதண்ணி எங்கை எடுக்கிறது நல்ல குடிதண்ணியும் இல்லை என்று கேட்டபடி 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் அவசரமாக அங்கு வருகிறார். கூட்டமாக வந்த பெண் பிள்ளைகள் அவருக்கு உதவியவாறு விவரத்தைச் சொல்ல, அவரும் அவ்வாறே சென்று சிற்றுண்டிச்சாலையில் சுடுதண்ணீர் எடுத்து வெளியே வர கிளி நொச்சியில் இருந்து வந்த அவரது உறவினர்கள் 'எப்படிப் பிள் ளைக்கு' என்று கேட்க, 'இப்ப நல்ல சுகம்' நாளைக்குப் போகலாம் எனக் கதைத்தவாறு செல்கின்றனர். இவர்களைத் தொடர்ந்து சிட்டுக் குருவியாரும் பறந்து செல்கின்றார்.

---

காரை ஆனந்தன்.

---

தெற்கிலை ஆயிரக்கணக்கிலை பேக் கறிகளை மூடுறாங்களாம். மாவும் விலை, அரிசியும் விலை. மழை பெய்தால் நாங்கள் என்ன செய்யிறது. கொஞ்ச நெல்லுக் கிடக்குது. வீட்டுக்கை தகரக் கொட்டிலுக்கை வைச்சு அதைப் பக்கு வப்படுத்திக் கொள்ளவும் முடியேல்லை. விக்கலாம் எண்டால் விக்கவும் முடியேல்லை. என்றவாறு அவர்கள் ஆஸ்பத்திரி வாட்டினுள் சென்றனர்.

அங்கிருந்து பறந்து சென்ற சிட்டுக் குருவியார் சின்னக்கடைப் பக்கம் போய்க் கச்சேரி வரையும் சென்று திரும்பும் போது சரியான மழை. பிரதான வீதியில் ஒரு மரத்தில் இருந்து விட்டு மழை விட் டதும் கூடு செல்ல இருளாகிவிட்டது. சுற்றுப் புறங்களை ஒருமுறை வட்ட மடித்துவிட்டுக் கூட்டினுள் நுழைகின்றார்.

36. Tableஇல் (MS Access Primary) எனும் கூற்றானது,
    1) ஒரே தரவு மீண்டும் மீண்டும் இடம்பெற முடியாது.
    2) (Primary key) எனக் கூறப்படும் Field இல் இரு தடவைக்கு மேல் பயன்படுத்தப்பட முடியாது.
    3) ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட தரவினை (Primary key) எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்யமுடியாது.
    4) மேற்கூறிய யாவும் சரி.

37. பின்வரும் முறைமை வாழ்க்கை அபிவிருத்தி வட்டத்தில் (SDLC) மூன்றாவது கட்ட நிலை (Phase) எனக் கூறப்படுவது எது?
    1) System Implementation
    2) System Design
    3) System Analysis
    4) Fea Study


38. பின்வருவனவற்றுள் Non Impact Printer என கருதக்கூடியது?
    1) DOT Matriy
    2) Dalsy Wheel
    3) PThermal
    4) Line Printer

39. பின்வருவனவற்றில் பொது நோக்கு பிரயோக மென்பொருள் எது?
    1) ஒருவர்/ நிறுவனம் சொந்த தேவைக்காக உருவாக்குகின்ற மென்பொருள்.
    2) கணினியை எவ்வாறு தொழிற்படவேண்டும் என்பதற்காக உருவாக்கப்படுகின்ற மென்பொருள்.
    3) எல்லோராலும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் (பொது தேவைப்பாட்டிற்காக) உருவாக்கப்படுகின்ற மென்பொருள்.
    4) மேற்கூறிய யாவும் சரி.

40. கணினியில் செய்முறை அலகாக எதைக் கொண்டிருக்கும்?
    1) FLOPPY + RAM
    2) Cu + ALU
    3) HDD + ROM
    4) RAM + ROM

## தகவல் தொழில்நுட்பம் II 2 மணித்தியாலங்கள்

01. ''அன்பு இல்லம்'' என்பது ஒரு சிறுவர் காப்பகமாகும். இக்காப்பகத்திற்கு வருகை தருவோரின் பெயர், விலாசம், கொண்டு வரும் பொருட்களின் விவரங்களைப் பதிவு செய்ய ஒரு கணினி ஒன்றினை வாங்குகின்றார். அத்தோடு அக் காப்பகத்தில் பணி புரியும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் காப்பகத்தில் வசிக்கும் குழந்தைகளின் தகவல்களையும் பதிவு செய்வதற்காகவும் இக்கணினியைக் கொள்வனவு செய்ய எண்ணுகின்றனர்.
    1) தேவையான நேரத்தில் இக்காப்பகத்திற்கு பொருட்களை வழங்கியவர்களின் விவரங்களை பெற பயன்படுத்தக்கூடிய மென்பொருள் யாது?
    2) பணிபுரியும் ஊழியர்களின் மாதாந்த சம்பள கணக்கை தயாரிக்க பயன்படுத்தக்கூடிய மென்பொருள் யாது?
    3) இக்காப்பகத்திற்கு பொருட்களை வழங்கிய அனைவருக்கும் ஒரே நேரத்தில் நன்றியை தெரிவித்து எழுத உதவும் மென்பொருள் யாது? என்ன முறையை பயன்படுத்த வேண்டும்.
    4) உயர் அதிகாரிகள் இந்தக் கணினியில் மின்னஞ்சலை அனுப்ப Modem எனும் வன்பொருளை இணைக்க உதவும் மென்பொருள் யாது?
    5) இந்தக் கணினியில் பயன்படுத்தக்கூடிய இயங்கும் முறைமை (Operating System) Dos/ windows x P யும் பயன்படுத்தலாம் என்கின்றனர். இதனை ஆராய்க.

02. 


    1) மேலே குறிப்பிட்டுள்ள Logic Gates இன் வெளியீட்டை எழுதுக.
    2) வெளியீட்டின் சுருக்கத்தைத் தருக.
    3) $EF_4$ எனும் HE x A DECIMALஇற்கான octal வலு எது?
    4) நீண்ட நேரம் கணனியைத் தொழிற்படச் செய்வதனால் பெறக்கூடிய பிரதிகூலங்களைத் தருக.

03. என்பவர் XYZ எனும் கம்பனியை கணினி மயப்படுத்த அந்நிறுவனத்தின் உரிமையாளர் திட்டமிடுகிறார்.
    1) அந் நிறுவனத்தில் பணிபுரியும் இலிகதர்க்கு (Clerk) Manual System இருந்து Computerized ஆக மாற்றுவதனால் எழக்கூடிய நன்மை தீமைகளைப் பற்றி எவ்வாறு விளக்கமளிப்பீர்?
    2) அந் நிறுவனத்தின் உடைய கணக்குகளை பேண எவ்வாறான முறைமையைக் கையாளுவீர்?
    3) Process Control System இற்கும் Office Antomationஇற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
    4) Worm எனும் வைரஸின் விரிவாக்கம் என்ன?

04. பின்வருவனவற்றை விளக்குக.
    1) தொகுப்பி என்றால் என்ன?
    2) மொழிமாற்றி என்றால் என்ன?
    3) ICT எவ்வாறு தொழிற்சாலை மற்றும் பொறியியலாளர்களுக்கும் எவ்வாறு உதவுகின்றது?

05. 1) ''தரவு'' என்பதனால் நீர் விளக்குவது யாது?
    2) தகவல் என்றால் என்ன?
    3) தொடர்பாடலுக்கு உதவும் வன்பொருள் யாது?
    4) முதலாம், இரண்டாம் தலைமுறைகளில் உருவாக்கப்பட்ட 2 கணினிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
    5) கணினி துறைகள் (Ports) 6 தருக.
    7) 1010 + 1111இன் சுருக்குக.
    8) கணினியின் பண்புகள் 4இனை குறிப்பிட்டு விளக்குக.

06. 1) செய்முறை அலகு (Process) தொழிற்பாட்டை படத்தின் மூலம் விளக்குக.
    2) 1-100 வரையிலான ஒற்றை எண்களை Flow CHART முறை மூலம் விளக்குக.
    3) MS - Accessஇல் Table ஒன்றில் Query View மூலம் செய்யக்கூடிய தொழிற்பாட்டை விளக்குக.
    4) MS - Word இல் font ஐ பார்ப்பதற்காக உதவும் sortcut key என்ன?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியில் வெள்ளம் பயணிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.01

யாழ்.பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு முன்னாலுள்ள வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அப்பகுதியால் செல்லும் பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

சப்பாத்துக்களுடன் பயணம் செய்யும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக உரியவர்கள் கவனமெடுக்குமாறு பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-319)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

சுழிபுரம்,டிசெ.01

சுழிபுரம் சத்தியக் காட்டுப் பொதுச் சந்தைக்குச் செல்லும் வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் அவ்வீதியால் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழையால் குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு பொதுச்சந்தை வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-313-28)

## சந்தைப்படுத்தல் கிராமம் பத்தரமுல்லையில் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.01

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுடன் இணைந்து தேசிய அருங்கலைகள் பேரவையினால் நிர்மாணிக்கப்பட்ட 'கைப்பணிப் பொருள்கள் சந்தைப்படுத்தல் கிராமம்' பத்தரமுல்லை ஜனகலா நிலைய கட்டடத் தொகுதியில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா மற்றும் அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திசநாயக்க, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் அசோக் கே காந்தா ஆகியோர் கலந்துகொள்வர். கைப்பணிப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் கைத்தொழிலாளர்கள் தமது பொருள்களைச் சந்தைப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-311)

## புதிய மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், டிசெ.01

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலைக்குத் தரம் 1 வகுப்புகளுக்கு புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு நாளை தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகப் பாடசாலை முதல்வர் இ.கோகுலராகவன் தெரிவித்துள்ளார்.

உரிய திகதிகளில் நேர்முகத் தேர்வுக்குப் பிள்ளைகளை அழைத்து வருமாறு பெற்றோர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (204-72)


## மணி விழா நாயகியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி இராசம்மா பாலசுப்பிரமணியம்

(ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக்கல்வி, தென்மராட்சி கல்வி வலயம்)

**சேவை விபரம்**

- 13.08.1975- 20.02.1977 யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் (ஆசிரியர்)
- 21.02.1977- 31.12.1978 யா/ கோப்பாய் ஆசிரிய கலாசாலை (பயிற்சி)
- 01.01.1979- 14.07.1985 யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் (ஆசிரியர்)
- 15.07.1985- 01.01.1995 யா/ எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை (ஆசிரியர்)
- 02.01.1995- 05.12.1999 யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை (ஆசிரியர்)
- 06.12.1999- 31.12.2010 ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக் கல்வி தென்மராட்சிக் கல்விவலயம்.

இன்று [01.12.2010] புதன்கிழமை ஓய்வுபெறும் எமது பாடசாலை ஆசிரியரும் விடத்தற்பளையைச் சேர்ந்தவரும் இப்பாடசாலையின் பழையமாணவியுமான திருமதி இராசம்மா பாலசுப்பிரமணியம் அவர்களை நிறைமனதுடன் பாராட்டி வாழ்த்துவதோடு, இவருடைய ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய சம்பாவெளி வீரகத்தி விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்,
மிருசுவில். (106641) பாடசாலைச் சமூகம்.


## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

வடமராட்சி,டிசெ.01

கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயர் அமரர் கே.கணேசலிங்கத்தின் நான்காவது ஆண்டு நினைவை ஒட்டி பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அமரர் கணேசலிங்கத்தின் குடும்பத்தினரால் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஊடாக தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை, புலோலி மெ.மி.த.க. பாடசாலை, அல்வாய் கிழக்கு அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (204-236)


## Vacancies

I. Web Cashier (ஆங்கிலம், கணினி அறிவுள்ள - பெண்)
II. Marketing Officer (O/L, A/L, Computer ஆண்கள் )
III. Accountant (முன்அனுபவமுள்ள ஆண்/பெண்)
IV. Computer Typesetter/Designer (ஆண்/பெண்)

உடன் விண்ணப்பிக்கவும்
விளம்பர இல: 4096, மே/பா உதயன்

## ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCIES

Applications are invited from suitable applicants for the following:

1. Science Laboratory Assistant
2. Maintenance Assistant-with electrical and plumbing knowledge.

The last date for receiving applications is 10th December.

(ரி/572627) **The Principal.**

# KALAIMAGAL International College

கலைமகள் சர்வதேசக் கல்லூரி 2011 ஆம் ஆண்டுக்கான Play group, LKG, UKG, Gr.1 முதல் G.C.E. O/L வரையான வகுப்புகளுக்கு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி டிசெம்பர் 15 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் அதற்கு முன் உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது கல்லூரிகளின் கொக்குவில் தலைமைக் காரியாலயத்திலும் சாவகச்சேரி வட பிராந்திய தலைமைச் செயலகத்திலும் சமர்ப்பிக்க அறிவுறுத்துகின்றோம்.

**எமது கல்லூரியின் சிறப்பான செயற்பாடுகளாவன...**

- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம் ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா ★ கணினி ஆய்வுகூடம்
- ★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம் ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு.
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.
- ★ மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி
- ★ இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி (தென்மராட்சி), கொக்குவில் (வலிகாமம்), நெல்லியடி (வடமராட்சி) ஆகிய இடங்களில் இயங்குகின்றன. மேற்படி எமது பிரதான கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த), வரையிலான வகுப்புகள் உள்வாங்கப்படும். ஏனைய உப கிளைகளான அச்சுவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நல்லூர், வட்டுக்கோட்டை போன்ற கிளைகளில் Play Group L.K.G, U.K.G ஆகிய வகுப்புகள் மட்டுமே நடைபெறும் என்பதையும் இக்கிளைகளில் இணைந்து கல்விகற்கும் சிறார்கள் ஆண்டு 1 முதல் A/L வரையான வகுப்புகளில் கல்வி கற்க கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் தமது கல்வியைத் தொடரும் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கல்லூரியின் 2011ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் டிசெம்பர் 15 ஆம் திகதி வரையே ஏற்றுக்கொள்ளப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும் சமர்ப்பிக்கவும், தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:



## Kalaimagal International College

*Nunavil East,*
*Kandy Road, Chavakachcheri.*

*Kulappiti Junction.*
*Church Lane, Kokuvil.*

டிசெம்பர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 3 மணிவரை கொக்குவில், சாவகச்சேரி, பிரதான கிளைகளில் எமது கல்லூரிக்கான அனுமதி வழங்கப்படுவதால் இதுவரை விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பப்படிவங்களை பெற்றுச்சென்றவர்களும் விண்ணப்பிக்க விரும்புபவர்களும் நேரில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு: 021 321 5875, 077 8834592


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 இன்ப உணர்வுகளை அனுபவிக்க MOODS

உலக எயிட்ஸ் தினம் 2010




நாடெங்கும் சகல முன்னணி ∴பாமசிகளிலும் சுப்பர் மார்கட்களிலும் கிடைக்கும்.

சந்தைப்படுத்தலும் விநியோகமும்:

Lewis Brown Pharmaceuticals (Pvt) Ltd
A MEMBER OF THE DELMEGE GROUP

101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 11 4 729 248, 2 676 213 | ∴பெக்ஸ்: 11 2 698 139, 2 68 6149
மின்னஞ்சல்: pharma@delmege.com | இணையத்தளம்: www.delmege.lk


# மரண அறிவித்தல்





## பத்மநாதன் செல்வமலர்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் செல்வமலர் 29.11.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி - பூரணம் தம்பதியரின் கனிஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - தெய்வநாயகி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் றமேஸ், நந்தினி ஆகியோரின் தாயாரும் கீதாம்பிகை, பிறேமளா, ரமணன் ஆகியோரின் மாமியாரும் கீர்த்தனா, சாதனா, சாருஜன், மாதுசன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

## பத்மநாதன் சுரேஷ் (உரிமையாளர், P.S.R. ரான்ஸ்போட்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட பத்மநாதன் சுரேஷ் 28.11.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்மநாதன்-செல்வமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அருமை மருமகனும் கீதாம்பிகையின் அன்புக் கணவரும் கீர்த்தனா, சாதனா ஆகியோரின் அருமைத் தந்தையும் றமேஸ், நந்தினி ஆகியோரின் சகோதரனும் பவானந்தன், ஜெயானந்தன், நவீனானந்தன், வித்தியானந்தன், பிறேமளா, ரமணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (01.12.2010) புதன்கிழமை தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் உள்ள அவர்களின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல்கள் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு பிற்பகல் ஒரு மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்

(சி/572677)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எதிரணி வீரரை முட்டி வீழ்த்தியதால் சாமுவெல் ஈடோவுக்கு தண்டனை

கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்ட போட்டியொன்றின் போது எதிரணிவீரரை தலையால் முட்டி வீழ்த்தியமைக்காக இண்டர் மிலான் கழக வீரரான சாமுவெல் ஈடோவிற்கு 3 போட்டி களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவருக்கு 30,000 யூரோக்கள் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது. சீவோ உதைப்பந்தாட்ட கழக வீரரான சீசரை தாக்கியமைக்காகவே இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆட்டத்தின் 36 ஆவது நிமிடத்தின் போது சீவோ அணி வீரர் சீசர் ஈடோவைத் தாக்கியிருந்தார். இதனைத்தொடர்ந்து அடுத்த நிமிடத்திலேயே ஈடோ தனது தலையால் சீசரின் நெஞ்சுப்பகுதியில் முட்டிக் கீழே வீழ்த்தினார்.

இச்சம்பவமானது 2006 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிப்போட்டியின் போது பிரான்ஸ் அணியின் அப்போதைய தலைவர் சிடேன் இத்தாலிய வீரர் மெட்டராஸியை தாக்கிய சம்பவத்தினை நினைவுபடுத்தியதாக உதைப்பந்தாட்ட இரசிகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இண்டர் மிலான் அணியின் முன்னணி வீரரான ஈடோ கமரூன் தேசிய உதைப்பந்தாட்ட அணியின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரபேல் நடாலை வீழ்த்தி சம்பியனானார் பெடரர்!



லண்டன், டிசெ.1

லண்டனில் நடைபெற்றுவந்த 'உலக சுற்று' டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டியில், ஸ்பெயின் வீரரான நடாலை, சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

முன்னணி வீரர்கள் பங்குபற்றிய 'உலக சுற்று' டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்றுவந்தது.

இதன் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இதில், டென்னிஸ் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் ஸ்பெயின் வீரரான நடாலை, தரவரிசையில் இரண்டாம் நிலையில் இருக்கும் ரோஜர் பெடரர் எதிர்கொண்டார்.

மிகவும் எதிர்பார்ப்புடன் - ரசிகர்களால் நிறைந்த அரங்கத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டி ஆரம்பமானது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் ஆடுகளம் அதிர்ந்தது.

களமாடிய இருவரும் தமது உச்சக்கட்டப் போராட்டத்தை வெளிப் படுத்தினர். தனது அதிரடி மூலம் 6-3 என்ற கணக்கில் முதலாவது சுற்றை பெடரர், கைப்பற்றினார்.

எனினும், இரண்டாவது செற்றில் சுதாகரித்துக்கொண்ட நடால், 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி பெடரருக்குப் பதிலடி கொடுத்தார்.

இறுதியில் வெற்றி யாருக்கு எனத் தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் மிகவும் அபாரமாக ஆடிய பெடரர், அந்தச் சுற்றை, 6-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டார்.

இறுதியில், 6-3, 3-6, 6-1 என்ற செற் கணக்கில் நடாலை வீழ்த்திய பெடரர், சம்பியன் கிண்ணத்தையும் தனதாக்கிக்கொண்டார்.

# விளையாட்டுப் பயிற்சி முகாம் இரு வாரங்கள் மல்லாவியில்

### மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு

வலி வடக்கு,டிசெ.1

வடமாகாண கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் இரண்டு வாரகால விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று புதிய முறையில் நடைபெறவுள்ளது.

கல்வித் திணைக்களம் மேற் கொண்ட செயற்பாட்டின் அடிப் படையில் வட மாகாண ஆளு நரின் ஏற்பாட்டின் கீழ் இப்பயிற்சி முகாம் மல்லாவியில் இடம் பெறவுள்ளது.

வடமாகாணத்திற்கு உட் பட்ட மன்னார், வவுனியா, முல் லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப் பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள், விளை யாட்டுப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் விளையாட்டு அலுவ லர்கள் இதில் கலந்து கொள்ள வுள்ளார்கள்.

முன்னாள் தேசிய விளை யாட்டு வீரர் எதிர்வீரசிங்கத்தின் வழிகாட்டலின் கீழ் நடைபெற வுள்ள இப்பயிற்சி நெறி, வெறும் விளையாட்டுப் பயிற்சிக்காக மட் டும் அல்லாமல், ஏனைய துறை களையும் உள்ளடக்கிய இரண்டு வார கால வதிவிட பயிற்சிநெறி யாக அமையவுள்ளது.

இப்பயிற்சி முகாமில் மெய் வன்மை சார்ந்த பயிற்சிகளுக்கு மேலாக கணினி, ஆங்கிலம், விளையாட்டு, மருத்துவம், உளவளத்துணை பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் கல்வித் திணைக்களத்தினால் பெரிய அளவில் முன்னெடுக்கப்படும் வதிவிடப்பயிற்சி முகாமின் இணைப்பாளராக வடமாகாண கல் வித்திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் கடமையாற்று வார். (த-86)

# 2012 ஒலிம்பிக் போட்டிகளுக்கான அனுமதிச்சீட்டு விலைகள் வெளியானது

2012இல் லண்டனில் நடை பெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளின் அனுமதிச் சீட்டுகளுக்கான விலை நிர்ணயம் பற்றிய விவரம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் 100 மீற்றர் ஓட் டப் பந்தயத்தின் இறுதிப் போட்டிக் கான அனுமதிச் சீட்டின் அதிக பட்ச விலை 725 ஸ்ரேலிங் பவுண்ஸ் ஆகும். 2012 ஒலிம்பிக்கில் தொடக்க விழாவை கண்டுகளிப்பதற்கான அனுமதிச் சீட்டு 20.12 5 ஸ்ரேலிங் பவுண்ஸ் முதல் 2,012 5 ஸ்ரேலிங் பவுண்ஸ் வரை ஆகும்.

மொத்தம் 8.8 மில்லியன் அனுமதிச் சீட்டுகள் தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளன. இவற் றில் 75 சதவீத அனுமதிச் சீட்டுக் களின் விற்பனை 2011 மார்ச் மாதம் முதல் தொடங்கப்பட உள்ளது.

125,000 அனுமதிச் சீட்டுகள் பாடசாலை மாணவர்களுக்கு விநி யோகிப்பதற்காக எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அனைத்து போட்டி களுக்கும் குறைந்த விலையில் தொடங்கி விலை அதிகமான அனு மதிச் சீட்டுக்களும் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

## வலிகாமம் வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் ஜனவரியில்

வலிவடக்கு, டிசெ.1

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடை யேயான உதைபந்தாட்டப் போட்டிகள் ஜனவரி 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலய கோட்டப் பாடசாலை அணிக ளுக்கு இடையே நடைபெற்ற 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டிகளில் கோட்ட மட்டத் தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் இப்போட்டி களில் கலந்துகொள்ளவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத் திற்கு உட்பட்ட சங்கானை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகள் இப் போட்டிகளில் மோதவுள்ளன.

16 வயதுப்பிரிவு அணியில் பன்னிரெண்டு பாடசாலை களும் 18 வயதுப் பிரிவில் பன்னிரெண்டு பாடசாலை களும் குழுக்களாக பிரிக்கப் பட்டு லீக் முறையில் போட் டிகள் நடைபெறவுள்ளன.(த-86)

### வெற்றியின் ருசி...



ஒற்றுமை: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால், அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. (த-86)




# கம்பீர் மிகுந்த மகிழ்ச்சி

"கப்டனாக பொறுப்பேற்ற முதல் போட்டியிலேயே வெற்றி கிடைத்திருப்பது, மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது," என, கம்பீர் தெரிவித்தார்.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. இத்தொடருக்கான இந்திய அணியில் டோனி, ஷேவாக், சச்சின், ஜாகிர், ஹர்பஜன் ஆகிய முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அணியின் கப்டனாக கம்பீர் செயல்பட்டு வருகிறார். கவுகாத்தியில் நடந்த முதல் போட்டியில், இந்திய அணி 40 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ்வெற்றி குறித்து கம்பீர் கூறியது: ஒரு கப்டனாக நான் பொறுப்பேற்ற முதல் போட்டி, வெற்றியாக அமைந்திருக்கிறது. இது மகிழ்ச்சி தரும் விஷயம். அணியில் இடம் பெற்ற அனைத்து வீரர்களும் நல்ல ஒத்துழைப்பு அளித்தனர். பயிற்சியாளர் உள்ளிட்ட அணி நிர்வாகிகளும் நல்ல உற்சாகம் கொடுத்தனர். இதனால்தான் கப்டனாக எனது பணியை சிறப்பாக செய்ய முடிந்தது. இனிவரும் போட்டிகளிலும் சிறப்பாக செயற்பட்டு ஒரு நாள் தொடரை கைப் பற்றுவோம். - என்றார் (த)

# உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் போட்டி இமாசல பிரதேசத்தில் தொடங்கியது

1400 அணிகள், 20 ஆயிரம் வீரர்கள் கலந்துகொள்ளும் உல கின் மிகப் பெரிய கிரிக்கெட் போட்டி இமாசல பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங் கியது.

கின்னஸ் உலக சாதனை புத் தகத்தில் இடம்பெறும் நோக்கில் இந்த ஜேபி 20-20 மகாசங்கரம் சீசன் 2 கிரிக்கெட் போட்டி நடத் தப்படுகிறது. கல்பா, குலு, தர்ம சாலா, பிலாஸ்பூர், நதுவன் ஆகிய நகரங்களில் நடக்கும் இந் தப் போட்டியை இமாசலப் பிர தேச கிரிக்கெட் சங்கத் தலைவர் அனுராக் தாக்கூர் கடந்த திங்கட் கிழமை தொடங்கி வைத்தார்.


மொத்தம் ரூ. 30 லட்சம் பரி சுத்தொகை கொண்ட இந்த போட்டி 75 விளையாட்டு மைதா ணங்களில் நடைபெற உள்ளது.

மகாசங்கரத்தை உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் போட் டியாக கின்னஸ் உலக சாதனை புத்தகம் அறிவித்துள்ளது. எனி னும், இதுதொடர்பான சான் றிதழ், போட்டி முடிவுற்ற பிறகே வழங்கப்படும் என தெரிவிக் கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தைப் பிடித்தார் சங்கக்கார

## பல்லேகலவில் 3ஆவது மோதல் இன்று ஆரம்பம்



கொழும்பு, டிசெ.1

மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று பல்லேகல மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கை அணியுடன் 3 டெஸ்ட்போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 'இருபது-20' போட்டி கொண்ட கிரிக்கெட் தொடரில் விளையாடிவருகிறது.

இதில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்றுவருகிறது. இதன் முதலிரண்டு போட்டிகளும் சமனிலையில் முடிந்தன.

இந்நிலையில், மூன்றாவது போட்டி இன்று ஆரம்பமாகிறது.

முதலாது போட்டியில் கிறிஸ்கெய்ல் அபாரமாக ஆடியிருந்தார். அதே போல இரண்டாவது போட்டியில் சங்கக்கார சிறப்பாக ஆடியிருந்தார்.

தற்போது மூன்றாவது போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் இலங்கை வீரர்கள், மேற்கிந்தியத் தீவுகள் அணியை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தொடரைக் கைப்பற்றுவதே நோக்காக இருக்கவேண்டும். அப்போதுதான் சொந்த மண்ணில் தொடரை இழக்கும் அல்லது சமனிலையில் முடியும் அபாயத்திலிருந்து தப்பிக்கமுடியும்.

எது எப்படியோ, கடந்த போட்டிகளில் கற்றுக்கொண்ட படிப்பினை இரண்டு அணிகளுக்கும் உண்டு. அந்தப் படிப்பினைகளைக் கருத்திற்கொண்டு இரு அணிகளும் இன்றைய களத்தில் களமிறங்கும்.

### மழை வருமா?

மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் இரண்டு போட்டிகளிலும் மழை குறுக்கிட்டு, போட்டிகளின் முடிவையே மாற்றியிருந்தது.

இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் போட்டியும் மழை காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

டிசம்பர் வரை மழை நீடிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு அரங்குகளில்

துபாய்,டிசெ.1

ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இந்திய வீரர் சச்சினைப் பின் தள்ளிவிட்டு இலங்கை அணித்தலைவரான சங்கக்கார முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டெஸ்ட் அணிகளின் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இலங்கை அணித்தலைவரான சங்கக்கார 882 புள்ளிகளுடன் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக கொழும்பில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் 150 ஓட்டங்களை விளாசியதன் மூலம் அவர் இந்த இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேவேளை, முதலிடத்தில் இருந்த இந்தியத் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் (859 புள்ளிகள்) 2ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரரான சஹீர்கான் 743 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஹைதராபாத்தில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் அவருக்கு இந்த உயர்வு கிடைத்துள்ளது. கிரிக்கெட் வாழ்க்கையில் அவரது சிறந்த தரநிலை இதுவாகும்.

தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளரான ஸ்ரெய்ன் (860 புள்ளிகள்) முதலிடத்திலும், இங்கிலாந்து வீரரான ஸ்வான் (831 புள்ளிகள்) 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள துடுப்பாட்ட வீரர்களின் விவரம் வருமாறு:-

* சங்கக்கார (இலங்கை)
* டெண்டுல்கர் (இந்தியா)
* ஷேவாக் (இந்தியா)
* கலிஸ் (தென்னாபிரிக்கா)
* டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)
* மஹேல (இலங்கை)
* சந்தர்போல் (மே.இ.தீவுகள்)
* டிராட் (இங்கிலாந்து)
* ஸ்மித் (தென்னாபிரிக்கா)
* சமரவீர (இலங்கை).

முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள பந்துவீச்சாளர்களின் விவரம் வருமாறு:-

* ஸ்ரைய்ன் (தென்னாபிரிக்கா)
* ஸ்வான் (இங்கிலாந்து)
* சஹீர்கான் (இந்தியா)
* மொஹமட் ஆஸிவ் (பாகிஸ்தான்)
* அன்டர்சன் (இங்கிலாந்து)
* மோர்கல் (தென்னாபிரிக்கா)
* ஜோன்சன் (ஆஸ்திரேலியா)
* ஹர்பஜன்சிங் (இந்தியா)
* போலிஞ்சர் (ஆஸ்திரேலியா)
* சஹிப்அல்ஹசன்(பங்களாதேஷ்)

## ஹைதர் குடும்பத்துக்கு மீண்டும் மிரட்டல்

லாகூர், டிச.1

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான ஹைதரின் குடும்பத்திற்கு மீண்டும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக அபுதாபியில் நடந்த கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றுவதற்காக அங்கு சென்ற ஹைதர், எவருக்கும் அறிவிக்காமல் லண்டனுக்குச் சென்றார், பின்னர், தம்மை சூதாட்டத்தில் ஈடுபடும் படியும், இல்லையேல் தன்னையும் தமது குடும்பத்தினரையும் அழித்துவிடுவோம் என கொலை மிரட்டல் வந்ததாலேயே தாம் அங்கு சென்றார் என அவர் கூறியிருந்தார்.



தற்போது இங்கிலாந்தில் இருக்கும் அவர், 'பேஸ் புக்' இணையதளத்தில் எழுதியுள்ள ஒரு தகவலில், ''பாகிஸ்தான் கிரிக்கெட்டின் ஊழலை அம்பலப் படுத்துவேன். என்னைப் பற்றித் தவறான தகவல்களைப் பரப்பியவர்கள் பற்றியும், கிரிக்கெட் அமைப்பில் யார், யார் பணம் வாங்கினார்கள், அவர்களின் பின்னணி என்ன என்பது குறித்தும் வெளிப்படுத்துவேன். அதற்கு இன்னும் 5 நாட்கள் காத்திருங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அவரின் இத்தகைய தகவலால், லாகூரில் உள்ள அவரது குடும்பத்தினருக்கு தொலைபேசி மூலம் மூன்று தடவைகள் மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

அதில் இரண்டு இலக்கங்கள் மூலம் பேசியது யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றொரு நபர் கிரீஸிலிருந்து பேசியிருப்பது தெரியவந்துள்ளது.

அவர்கள், உருதுமொழியில் பேசியிருக்கிறார்கள்.

ஹைதர், ஏதாவது ரகசியங்களை வெளியிட்டால், அவர் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மர்ம நபர்கள் அவரது மனைவியிடம் தொலைபேசியில் கூறியிருக்கிறார்கள். இதுகுறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் மீண்டும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

## நியூஸிலாந்து - இந்தியா இன்று 2ஆவது மோதல்

ஜெய்ப்பூர், டிசெ.1

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது. வெற்றோரி தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரை இந்தியா 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.தற்போது 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றுவருகிறது. இதன் முதலாவது போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று ஜெய்ப்பூரில் நடக்கிறது. முதல் போட்டியில் வெற்றி பெற்றதால் இந்திய அணி நம்பிக்கையுடன் களமிறங்குகிறது. டோனி, டெண்டுல்கர், ஷேவாக், சஹீர்கான், ஹர்பஜன்சிங் போன்ற முன்னணி வீரர்கள் இல்லாமலேயே இந்த வெற்றி கிடைத்தது. இன்றைய போட்டியிலும் அவர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

விராத் கோஹ்லி முதலாவது ஆட்டத்தில் சதம் அடித்து முத்திரை பதித்தார். இதேபோல யுவராஜ்சிங், கம்பீர், யூசுப்பதான் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். அஸ்வின், ஸ்ரீசாந்த் ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசி வருகிறார்கள்.

அதேவேளை, முதலாவது போட்டியில் விளையாடாத வெற்றோரி, ஆரம்ப வீரரான மக்கலம் ஆகியோர் இன்றைய போட்டியில் விளையாடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய ஆட்டம் பகல் இரவு ஆட்டமாக நடக்கிறது. பிறபகல் 2.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரட்மனைப் போன்றவர் சச்சின்

கிரிக்கெட் உலகின் தலைசிறந்த விளையாட்டு வீரர் என அழைக்கப்படும் பிரட்மனுக்கும் முன்னணி நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசத்தையும் நான் காணவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இன்றைய பிரட்மன் அவர்தான் எனப் புகழாரம் சூட்டியுள்ளார் பிரையன் லாரா.

மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திரமாகத் திகழ்ந்த பிரையன் லாரா, டுபாய் நாட்டுக்கு விஜயம் செய்தபோது பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறுவயதிலிருந்தே திறமையை வெளிக்காட்டி வருபவர் சச்சின். பெருந்தன்மையில்லாத அவரின் விளையாட்டு எனக்கு ரொம்பப் பிடிக்கும். இன்றைய காலத்தில் பிரட்மனைப் போன்று மிகச்சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துபவர் அவர் என லாரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



01 - 12 - 2010

அகவை 70இல் கால் பதிக்கும்

கலைஞர்

கணபதிப்பிள்ளை பாக்கியராசா (மாலி)

தம்பதியினரை சகல வளங்களுடனும், சுக - நலத்துடனும் நீடூழி வாழ எல்லாம் வல்ல மாலிசந்திப் பிள்ளையார், ஆலடிப்பிள்ளையார் அருள் வேண்டி அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அல்வாயூர் கவிஞர் நாடக மன்றம்.

(சி-572689)

## ஊடகவியலாளர் சிவநாயகம் காலமானார்

முதுபெரும் ஊடகவியலாளரான எஸ். சிவநாயகம் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 80. லேக்ஹவுஸ், ரைம்ஸ் ஆகியவற்றின் ஆங்கிலப் பத்திரிகையாளராகப் பணியாற்றிய இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான ஆங்கிலப் பத்திரிகையான 'சற்றடே விழு'வின் ஸ்தாபக ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அநீதிகளையும் ஒடுக்குமுறைகளையும் 'சற்றடே விழு' பத்திரிகை மூலம் அவர் வெளியிட்டு உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்தினார். (அ-ஐ)

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவபாலன் குணபாலன்** S.L.A.S

(பிரதேச செயலர், துணுக்காய்-முல்லைத்தீவு)

M.A. Pub.Ad,
PG Dip Dvt Studies
PG Dip in Edu., B.A. (Hon)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முதல் இலங்கை நிர்வாக சேவையில் தேர்வு பெற்று ஆறு வருடங்கள் தொழிற் திணைக்களத்தின் உதவி தொழில் ஆணையாளராகவும் பிரதி தொழில் ஆணையாளராகவும் கடமையாற்றி இன்று 01.12.2010 துணுக்காய் பிரதேச செயலராக கடமையேற்கும் திரு.சிவபாலன் குணபாலன் அவர்களை மனதார பாராட்டுவதோடு எமது மாவட்டத்திற்கு வினைத்திறனான சேவையினை வழங்க வாழ்த்துகின்றோம்

நண்பர்கள், தாஸ் தவரூபன் (UK), அமுதன் (UK), ரவி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**விநாசித்தம்பி சிவசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற பதிவாளர் நீதிமன்றம்)

தோற்றம்
13.11.1927

மறைவு
01.11.2010

அன்பின் திருவுருவே பாசத்தின் இருப்பிடமே
ஆறாத துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீங்கள் மறைந்து சென்று மாதமொன்று கடந்தபோதும்
அணையாத தீபமாய் எம் நெஞ்சினில் சுடர்விடும்
குலவிளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இல.88, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (106720) குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னுத்துரை வில்வராஜா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி)

மலர்வு
1937.04.16

உதிர்வு
2006.12.14

திதி:தசமி

அன்பான அப்பாவாய் அறிவூட்டும் ஆசானாய்
அவனியிலே மிளிர்ந்தீரே ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லையே எம் துயர் தங்கள்
ஆத்ம சாந்திக்காக அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

இல.06, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (106723)

அழியாத நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகமணி பூமணி



கலையரசு வீதி, நவாலிதெற்கை, பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட திருமதி நாகமணி பூமணி நேற்று (30.11.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, நவாலி. (106740)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினா பாக்கியநாதர்

பற்றிமா கோயிலடி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட பிலோமினா பாக்கியநாதர் (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை பாக்கியநாதரின் அன்பு மனைவியும், திரேசா (இத்தாலி), றீற்றா (ஜேர்மனி), ராணி (இத்தாலி), மாக்கிறேற், றஞ்சி, காலஞ்சென்ற மேரி அலெக்ஸ் சந்திரா மற்றும் ஜெஸ்லின் (இத்தாலி), காலஞ்சென்ற அன்ரனி செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் யசிந்தா (ஆசிரியை, யாழ். பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை), ராஜினி (இத்தாலி), யேசுதாசன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற செல்வம் (இத்தாலி) மற்றும் யேசுராசா (ஜேர்மனி), மரியதாஸ் (இத்தாலி), தோமஸ், குருநாதன், ஜெயக்குமார் (இத்தாலி), ரவிந்திரன் (இத்தாலி), இந்துமதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், நேரயல் (ஜேர்மனி), டிலோஜினி (யாழ்.பல்கலைக் கழகம்), டினேஷ் (யாழ்ப்பாணம்), டிறாஜ் (யாழ்ப்பாணம்), யோய் அந்தோனியே (இத்தாலி), யூலியானா (இத்தாலி), அஞ்சலீனா (ஜேர் மனி), அலக்ஸ்சந்திரா (ஜேர்மனி), அஜேய் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.
0713006819

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா முத்தம்மா



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா முத்தம்மா நேற்று (30.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான கந்தையா சினப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இராசையா வின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.


## தவறிவிட்டது

கறுப்பு நிற பேர்ஸ் உடன் சாவிக்கொத்து ஒன்று யாழ். கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

இல. 103, புதிய நதியா நகைமாடம்
021-222-6915

## தவறிவிட்டது

கடந்த 27.11.2010 அன்று கல்லுண்டாய்க்கும் நாவாந்துறைக்கும் இடையில் கறுப்பு பை ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், Bank Pass book, கடையின் திறப்பு, கண்ணாடி மற்றும் பல ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

0772428408, 021-321 6953

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த செல்வராஜா தயாபரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொ.இ: 0779466662, 0779219136


## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் தங்கமுத்து

டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கமுத்து 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமு கதிராசிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற வள்ளியப்பிள்ளை மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவகாமி மற்றும் சிவராசா (நில அளவையாளர்), சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவயோகம் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் புஸ்பராணி, தில்லையம்பலம், சச்சிதானந்தமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும், கதிர்காமநாதன், மகேந்திரகாந்தி, சியாமளாதேவி, இளஞ்செழியன் சுதர்சன், சுஜீவா, ஸ்ரீகாந்தன், சுதாகரன், சுரேஷ் ஆகியோரின் பேர்த்தியும், கானுஜன், அபிலாஷ், சங்கீதா, சாயினி, தேனுஜா, ஷமீனா, டிவேன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.
0774805107, 0779073805 (சி.572688)

தகவல்:
வ.சிவராசா.

### ஆறுமுகம் சிவலிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பலாலி மத்தி, வசாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது அச்சுவேலி தெற்கில் வசித்துவருமான ஆறுமுகம் சிவலிங்கம் 29.11.2010 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் ராஜங்கத்தின் அன்புக் கணவரும் தர்மினி, தில்லை நாதன், தர்மநாதன், குகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2010) புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் அறியத் தருகின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அப்பாத்துரை பொன்னம்மா



வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை பொன்னம்மா நேற்று (30.11.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி அப்பாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லதம்பி பொற்கொடியின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கிருபைநாதன், யோகநாதன், கருணாநந்தன் மற்றும் விமலநாதன், புஸ்பவனிதா, கமலநாதன், சிவநாதன், பாமா ஆகியோரின் அன்புத் தாயும் மகாலட்சுமி, கோகிலாம்பாள், எலிசபெத், கமலாதேவி, பொன்னம்பலம், வசந்தா, கௌரி, தேவதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2010) புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் பண்டத்தரிப்பு விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு. (106739)

தகவல்:
அ.சிவநாதன் (மகன்)
0779797481

### டானியல் தேவகுமார்

சக்கோட்டையை பிறந்த இடமாகவும், சாவகச்சேரியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட டானியல் தேவகுமார் நேற்று (30.11.2010) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு பேரனும், திரு. திருமதி. டானியல் தம்பதியரின் அன்பு மகனும், லோறன்சியாவின் அன்புக் கணவரும், பிளசியா, அன்புக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ராஜ்குமார், அந்தோனிப்பிள்ளை யூட்சன் மற்றும் ஜீவமலர், சுதாமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், க. யேசுதாசனின் அன்பு மருமகனும், பமிலேஸ் (பிரதேச சபை, தென்மராட்சி), ஆன் ஜான்சியா (ரூபா), டறன்சியா (சுபா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கோட்டை,
அல்வாய்,
வடமத்தி. (106743)

தகவல்:
அந்தோனிப்பிள்ளை டானியல் (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALE! SALE! SALE! SALE! SALE! SALE!

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

எமது அன்பு வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க

ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாணவ மாணவிகளுக்கான சீருடைத் துணிவகைகளையும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிரடி விலைக்கழிவு


# அறிவித்தல்

## 120 அடி உயரமுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் அமைத்தல்

கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இல. 243, கச்சேரி- நல்லூர் வீதியில் (120) நூற்றியிருபது அடி உயரமுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு Etisalat Lanka (PVT) Limited நிறுவனத்தினரால் அனுமதிகோரி யாழ்.மாநகர சபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தொலைத் தொடர்பு கோபுரம் அமையவுள்ள சூழலில் வசிக்கின்ற பொது மக்கள் இத்தொலைத்தொடர்பு கோபுரம் இச்சூழலில் அமைவதால் ஏதேனும் பாதிப்பு தங்களுக்கு ஏற்படும் எனக் கருதுவார்களாயின் தங்களது அபிப்பிராயத்தை இத்திகதியிலிருந்து பதினைந்து (15) நாள்களினுள் யாழ்.மாநகரசபைக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகர முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-572678)

## சுகாதாரகத் திணைக்கள கண்காணிப்புக் குழு கூட்டம் வெள்ளியன்று

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பற்றுக்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

டிசெம்பர் மாதத்துக்கான மாதாந்தக் கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும், சம்பந்தப்பட்டவர்களைத்தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (10)

## ஐயப்பன் மஹோற்சவம்

கோண்டாவில், சபரீச ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது. இன்று சபரீச ஐயப்பனுக்கு புஸ்பலங்கார பூசை நடைபெறும்.

கிரியை காலத்தில் தினமும் சபரிமலை ஐயப்பன் தேவஸ்தானத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட ஐயப்ப புராண வரலாற்று அற்புதங்களுக்கு அமையக் கிரியைகள் நடைபெறும்.

உற்சவத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும், சனிக்கிழமை பூங்காவனமும் மறுநாள் பரவச பூசையும் இடம்பெறும். (ஒ-10-496)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சிவநாயகம்

(சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர், லேக்ஹவுஸ், ரைம்ஸ், நிறுவன ஆசிரியர், Saturday Review)

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 9¼,Shrubbery Gardens, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவநாயகம் 29.11.2010 திங்கட்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் மகனும் நல்லூர் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நவரத்தினராஜா தம்பதியரின் மருமகனும் சுபத்திராவின் (முன்னாள் ஆசிரியை) அன்புக் கணவரும் Dr. சிவ நங்கை, சிவநாராயணி ஆகியோரின் தந்தையும் இளங்கோவின் மாமனாரும் மித்திரன், ஓவியா ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற திருமதி தையல்நாயகி ஆனந்தரத்தினத்தின் சகோதரனும் யசோதரா - தியாகராஜா, ருத்திரா - நவரத்தினராஜா, சிவகுமாரன், கௌசல்யா-தெட்சணாமூர்த்தி, ராதா, ராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.12.201) வியாழக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக பி.ப. 4 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72(22), நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர்
தொலைபேசி: 011 2598670

தகவல்: ந.சிவகுமாரன் (மைத்துனர்).

## வைரவப்பிள்ளை கந்தசாமி



(லொறி உரிமையாளர் - கணக்கர்)

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும், தற்பொழுது மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை கந்தசாமி (29.11.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைகளுக்காக மல்லாவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வை.குணரத்தினம் (குணம், உரிமையாளர், மீரம்பாள் ரான்ஸ்போர்ட்),
வை. செல்வரட்ணம் (பாலு, (உரிமையாளர், கோசலா ரான்ஸ்போர்ட்),
(சகோதரர்கள்).
மகன்:கந்தசாமி ஜெயக்குமார்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
0778446071

(106733)


DANISH DEMINING GROUP

# விலை மனுக்கோரல்

DDG நிறுவனமானது தனது நிறுவனப் பயன்பாட்டுக்காக (வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான) ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் வாகனங்களுக்கான விலைமனுக் கோரலைக் கோருகிறது.

1. கன்ரர் வகை வாகனம்
2. கப்பஸ் வகை வாகனம் (நாற்சக்கர வலுப் பயன்பாடு விரும்பத்தக்கது.)
3. நாற்சக்கர உழவு இயந்திரம் கமைப் பெட்டியுடன்
4. நீர்த்தாங்கி (வாகனத்துடன் / நாற்சக்கர உழவு இயந்திரத்துடன்)

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவுடன் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்ற ஆர்வமுடையவர்கள் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைவாகப் பூரணப்படுத்தப்பட்ட படிவங்களைப் பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 13.12.2010 நண்பகல் 12 மணி

1. அமையவியலாளர் : டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு, இல. 456, பிரதான வீதி, கண்டுக்குழி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல்: logjaffna@ddg.lk

2. அமையவியலாளர் : டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு, இல.178, பூந்தோட்டம், வவுனியா. மின்னஞ்சல்: logvavuniya@ddg.lk

ஒப்பந்த அடிப்படையிலான வாகன விலை மனுக்கோரல் படிவம்

| இல. | வாகன வகை | வாகனப் பதிவிலக்கம் | வாகனம் தொடர்பான பிற தகவல்கள் இயந்திர இயலளவு, AC வகை, இருக்கை விபரம் | நாளாந்த வாடகை எரிபொருள் நீங்கலாக |
|---|---|---|---|---|
| | | | | |

வேண்டுகையாளர் முகவரி: தொலைபேசி இல.:
ஒப்பம்: திகதி:

பின்குறிப்பு:

வாகன ஒப்பந்தத் தெரிவானது வாகனத்தின் தன்மை, வலு, தரம், ஏற்றுக்கொள்ளக்தக்க கட்டணக்கோரல் (வாடகை) போன்றவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு
யாழ்ப்பாணக் காரியாலயம்.
தொலைபேசி இல.: 021 222 8181
077 7289753

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு
வவுனியாக் காரியாலயம்.
தொலைபேசி இல.: 026 4925584
077 6900767

(106734)


## கமத்தொழில் அலுவலகம் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.01

யாழ். ப.நோ. கூ.சங்கக் கட்டடத்தில் இயங்கிய கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் அலுவலகம் இன்றிலிருந்து நல்லூர் பிரதேச சபை முன்னர் இயங்கிய திருநெல்வேலியில் உள்ள கட்டடத்தின் ஒரு பகுதியில் செயற்படவுள்ளது. (ஒ-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சிவசாமி குமரேஸ்வரி

[ஆசிரியை, யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை]

தோற்றம்: 18.04.1953
மறைவு : 12.12.2009

ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவுகளில்
முதலாம் ஆண்டு நகர்ந்ததம்மா
எங்கள் துயரம் ஆற்ற முடியவில்லை
மனம் உருகி அஞ்சலி செலுத்துகின்றோம்

நினைவுகளுடன்
மைத்துனர்: பாஸ்கரன்,
சகோதரிகள்: கோமளேஸ்வரி,நேசலக்ஸ்மி.

மலைவேம்படி, அளவெட்டி. (106726)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.05.1917



மறைவு 22.01.2001

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

திதி:சதுர்த்தசி

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.05.1924



மறைவு 11.12.2009

### திருமதி கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை

திதி:ஏகாதசி

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் அன்புத் தெய்வங்களே!
தங்களின் ஆத்ம சாந்திக்காக நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய அருகில்,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(சி/572674)


வெளிவரவுள்ளது...

புலமைச் சுடர் 2011-2012



விலை ரூபா10

திங்கள் தோறும்

முயற்சியும் பயிற்சியும் ... தரும்

எதிர்வரும் 06.12.2010 முதல் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிற்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேசியரீதியில் புகழ்பெற்ற கல்விச்சுடர்வளவாளர்களின் அரிய படைப்புக்களை இல்லங்களிலிருந்தே பெற்றுக்கொள்ள உதவும் ஒரு கையேடு

உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு: யாழ் விநியோகப்பிரிவு இலக்கம்: 021 5677222
ஆசிரிய பீடம்: 011 576 8855, 071 427 3035.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லாகூரில் வைத்து இலங்கைக் கிரிக்கெட் அணி மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர் ஞாயிறன்று கைது

கொழும்பு, டிசெ. 01

லாகூரில் வைத்து இலங்கைக் கிரிக்கட் அணி மீது தாக்குதல் நடத்தியவர்களில் முக்கியமான சந்தேகநபர் ஒருவர், பாகிஸ்தான் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் லாகூரைச் சேர்ந்த குவாறி ஓமர் ஆபாப் என இனங்காணப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்பட்டபோது, அவரிடமிருந்து வெடிபொருள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டதாக பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இலங்கைக் கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. அதன்போது, லாகூரில் வைத்து ஆயுதாரிகள் தாக்கியமையால், எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன், இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் உட்பட 20 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வருடம் ஜூன் முதல் பஸ் கட்டணம் அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ.01

''அடுத்தவருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல், பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவேண்டும்'' என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்ஜன பிரியந்திரஜித் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டுக்காக அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் வாகனங்களின் பதிவுகளுக்கான கட்டணம் கூடிய தொகையில் அதிகரிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பஸ் கட்டணங்கள் தொடர்பான தேசிய கொள்கைக்கு அமைவாக, வாகனங்களின் பதிவுகளுக்கான கட்டண சீர்த்திருத்தத்தின் ஓர் அங்கமாக பஸ் கட்டணமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## புகலிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளைக் குறைக்கும் என நினைக்கிறேன்.

நியாயமான அகதி அந்தஸ்து கோருபவர்களின் கோரிக்கையை கனடா மற்றும் ஆஸ்திரேலிய அரசுகள் ஏற்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம், காதி நீதிமன்றம் என அனைத்து நீதிமன்றங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இராணுவ நீதிமன்றத்துக்கு என நிதி ஒதுக்கப்படவில்லை. அப்படியானால் இராணுவ நீதிமன்றம் சட்ட விரோதமானது. அரசமைப்பில் உள்ளடக்கப்படாதது என்பதை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசே உறுதிப்படுத்தி உள்ளது. எனவே, சட்டத்துக்குப்புறம்பான இராணுவ நீதி மன்றத்தின் மூலம் தண்டனை வழங்கப்பட்ட சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டும்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து விருந்தினர் மண்டபத்தில் உரையாற்றிய பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, தமது நாட்டில் அதாவது பாகிஸ்தானில் அரசியல் கைதிகள் என்று ஒருவர் கூட சிறையில் இல்லை என்று கூறினார்.

அவ்விடத்தில் பதிலுரையாற்றிய சபாநாயகருக்கு தமது நாட்டிலும் அதாவது இலங்கையிலும் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று கூறும் துணிவு இல்லாமல் போய்விட்டதே - என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

VACANCY

எமது கணனி நிறுவனத்திற்கு
Accpac Accounting
கற்பிக்க கூடிய விரிவுரையாளர்
தேவை. 05/12/2010ற்கு முன்னர்
உங்கள் சுயவிபரத்தை கீழ்வரும்
எமது முகவரிக்கு அனுப்பவும்.

The Director,
UNI - ICT Education (PVT) LTD,
Jaffna Road, Manipay.

யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்
உயர் தொழில் நுட்பத்திலான நவீன முறை அச்சுப் பதிப்பகம்
எமது வாடிக்கையாளரின் ஆதரவில் யாழில் 3வது வருடத்தில் கால் பதிக்கும் எமது நிறுவனம் வாடிக்கையாளருக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.
வெளீட்டாளர்கள் சிரமம் இல்லாமல்
புத்தகங்கள் · பருவ வெளியீடுகள் · துண்டுப் பிரசுரங்கள்
சஞ்சிகைகள் · பாடசாலை வெளியீடுகள் · Handbills
அழைப்பிதழ் · கல்வெட்டுக்கள் · சுவரொட்டிகள்
போன்றவற்றை அழகாக கணனி வடிவமைப்புச் செய்து அச்சிடுவதற்கும், தரமான முறையில் அனைத்து விதமான Designing - Digital/ Offset Printing பணிகளை மிகக் குறைந்த விலையில் கொழும்புத் தரம், விலையில் செய்து பெற்றுக் கொள்ளலாம்
யாழில் வேறு எந்த நிறுவனமும் வழங்க முடியாத விலையில்
666 கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ். T.P. : 0214900507

## இனவிகிதாசா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் எமது அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது.

போரால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை நாம் மீளக் குடியமர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்த பணியானது, ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்கு லொறிகளில் பொதிகளை ஏற்றிக் கொண்டு போவதுபோல் இலகுவான காரியம் அல்ல.

அங்கு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. பாலங்கள், வீதிகள், கட்டடங்கள் குண்டுகள் போட்டு அழிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையின் கீழ் மீள்குடியமர்வு இலகுவானதல்ல. இந்த நிலைமையைச் சமாளித்துக் கொண்டே நாம் முன்னேறி வருகின்றோம்.

நாம் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையை முதலில் ஆரம்பித்தோம். கண்ணிவெடிகள் அகற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய அரசு 70கோடி ரூபாவைச் செலவு செய்தது.

அரசு எந்தவொரு இனத்தின் விகிதாசாரத்திலும் மாற்றம் ஏற்படக்கூடியவாறு எந்தவொரு குடியேற்றத்தையும் செய்யாது. இடம்பெயர்ந்த தமிழர்களை மாத்திரம்தான் நாம் குடியமர்த்துகின்றோம்.

20 வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களைக்கூட நாம் இன்னும் மீள்குடியமர்த்தவில்லை. அத்தகைய நடவடிக்கைகள் தமிழர்கள் மத்தியில் சில தவறான கருத்தை ஏற்படுத்திவிடும் என்பதாலேயே நாம் இதைச் செய்யவில்லை - என்றார். (உ-சி)

Personal Class (கணினி)
★ Ms office, Internet and E-mail, DTP, Wep design, Graphic design ஆகிய கற்கை நெறிகள் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★ பயிற்சியின் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
★ குறிப்பு : கணினி இல்லாதவர்களுக்கு எமது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும்.
ஆசிரியர் :- KRC T.P : 0779672038 நல்லூர்.

பொருளியல் - NB.கஜீதரன்
2011-A/L பிரிவு - I: செவ் - வியா : 6-7 Am; சனி - ஞாயி : 5-6 Pm | பிரிவு - II: திங் - வெள் : 3-4 Pm; புதன் - வெள் : 6-7 Am
பணம் வங்கி
2012-A/L பிரிவு - I: சனி - ஞாயி : 4-5 Pm | பிரிவு - II: திங் - வெள் : 4-5 Pm
நெகிழ்ச்சிக் கோட்பாடு
BPI - குருநகர்

நியூ மற்ஸ் அக்கடமி, மீசாலை.
புதிய கல்வியாண்டு - 2011
ஆசிரியர் க.தவபேரகராஜா அவர்களின் 2011 தரம் - 5 புலமைப்பரிசில் விசேட வகுப்புகளுடன் தரம் 4, தரம் 3 வகுப்புகளும் சிறப்பாக ஆரம்பமாகின்றன. அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0776466208
இயக்குநர்

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை, 2, 3 மாதங்களில் பூர்த்தி செய்து ஏப்ரல், மே மாதங்களில் தேர்தலை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சட்டத்தில் உள்ள விடயங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

## மட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமித் தாக்கம் ஏற்படுவதற்கு முன்னரும் இந்தப் பாலத்தில் பெரும் எண்ணிக்கையான பாம்புகள் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று திடீரென கல்லடிப் பாலத்தில் பாம்புகள் காணப்பட்டதால் சுனாமித் தாக்கம் மீண்டும் வரலாம் என்று மக்கள் மத்தியில் பீதி நிலவியது. (ஒ-ஐ-21)

## அபாயகரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யையே இவை பிரதிபலிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக, பயங்கரவாதிகளிடமிருந்து தாய் நாட்டை மீட்டெடுத்த முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவிற்கு இரண்டரை வருட சிறைத்தண்டனையை அரசு விதித்துள்ளது.

எவ்வாறாயினும், இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை நாம் எதிர்க்கிறோம். இராணுவ நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் நிராகரிக்கின்றோம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## வரவு-செலவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது விட்டது கூட்டமைப்பு. நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் அது கூறியது. கூட்டமைப்பின் இந்த செயலை கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கண்டித்தார்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நல்லெண்ணத்தை அரசுக்குக் காட்டவேண்டுமானால் அரசை விமர்சிக்காமலிருக்கலாம். அதை விடுத்து வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலிருப்பது அரசை ஆதரிப்பதாகவே அமையும்.

அதேவேளை, கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்துமென பல தடவைகள் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அரசு இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அனைத்துலகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமானால் இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்க வேண்டும்'' - என்று அவர் மேலும் சொன்னார். (உ-சி)

வான் விற்பனைக்கு
PB - XXXX தொடர் இலக்க Toyota டொல்பின் டீசல் வான் உடன் விற்பனைக்குண்டு.
மொடல் LH 172, என்ஜின் 5 L, dual A/C
Adjustable - Rotating Seat, Auto Gear
விலை: 38 லட்சம்
தொடர்பு: 0777946713

ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.
மாணவர்கள், சிறுவர்கள், வெளிநாட்டுக்குப் போகிறவர்கள் எவரும் கற்றுக்கொள்ளலாம்......
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone : 0212228093
E-mail : alliancejaffna@yahoo.com
மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(106598)

## மரண அறிவித்தல்

### கனகசபை சிவசோதி

சோதி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உத்தமன் சிலையடி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட க. சிவசோதி நேற்று (30.11.2010) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.12.2010) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உச்சியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தம்பி - சிவகுமாரன் (கண்ணன்)
உத்தமன் சிலையடி, மல்லாகம்.
T.P : 0213216057, 0773769045
(106745)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org